Estd:
1923

மலர் 18
இதழ் 11

# ஜகன்மோகினி.

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்

Phone:
86019.

JAGANMOHINI * MONTHLY



## 19-வதாண்டுக் கொண்டாட்டம்

டிசம்பர் 26-ந் தேதிக்குள்
சந்தா அனுப்புவோருக்குப் பரிசுகள்.

டிசம்பர் கடைசி வரை
புது நாவலுக்குக் குறைந்த விலை.

5 வருஷங்கள் சந்தாதாரரா
யிருப்போருக்கு இனும் நாவல்கள்.

3 புது சந்தா சேர்த்துக் கொடுப்போருக்கு
ஒரு வருஷ சஞ்சிகை இனும்.

முழு விவரங்களுக்கு உள்ளே படிக்கவும்.

## தயாநிதி

[ தொடர்ச்சி ]

அணு 2
காச 12

SL
ஊ211,N22JM
N41·18·11,
183059

"ஜகன்மோகினி" காரியாலயம், சென்னை.

# காவேரி

சேலம், திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் சில தோற்றங்கள்

*

" ஸ்ரீவத்ஸன் ".




துலாக்காவேரி ஸ்நானம் செய்தீர்களா?

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.



| மலர் 18 | விஷு ௵ ஐப்பசி ௴ நவம்பர் 1941 | இதழ் 11 |
|---|---|---|



## திருமாலை

கங்கையின் புனிதமாய காவிரி நடுவுபாட்டு
பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன்கிடந்ததோர் கிடக்கைகண்டும்
எங்ஙனம் மறந்துவாழ்கேன்? ஏழையேன் ஏழையேனே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

183059

## காவேரி

சோழநாட்டு திவ்விய திருப்பதியான திருவரங்கம் பெரிய கோயில் என கொண்டாடப்படும் ஸ்ரீரங்கத்திற்கு ஹாரம்போல வட்டமாய் வளைந்து அமைந்துள்ள காவேரி தீர்த்தத்தைப்பற்றி ஆக்னேயபுராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. குடகில் ஆரம்பித்து மைசூர் சமஸ்தானத்திலும், சேலம், கோயமுத்தூர், திருச்சி, தஞ்சை, ஜில்லாக்களிலும், காவேரி பாய்கிறது. ஏற்கெனவே நமது மோகினியில் சிவசமுத்திரத்தின் படங்கள் வெளியிடப்பட்டது நினைவிருக்கலாம். இவ்விதழில் ஐந்து இடங்களில் காவேரியின் தோற்றம் எங்ஙனமுள்ளதென்பது காட்டப்பட்டுள்ளது. காவேரியில் ஸ்நானம் செய்வது எவ்வளவு விசேஷமானது, புண்ணியத்தைத் தருவதென்பது ஷை புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

"தன்னை த்யானித்தவர்களையும், ஸ்பரிசித்தவர்களையும், உட்கொண்டவர்களையும், முழ்கினவர்களையும், பர்வனமுடையவர்களாக்கி, உடனே திவ்ய தேகம் தந்து, விரஜையில் முழ்கச்செய்து, பெருமாள் திருவடி சம்பந்தர்களாக்கும் பெருமை வாய்ந்தது."

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார், அருளிச்செய்துள்ள திருமாலையில் காவேரியை கங்கையைவிடப் புனிதமானதெனக் குறிப்பிட்டுள்ளார்.

துலாக் காவேரி ஸ்நானம் செய்தீர்களா? —"ஸ்ரீவத்ஸன்."

# க்ஷேமலாபங்கள்

அன்பர்களே!

மங்களகரமான கங்கா ஸ்நானமும், துலா ஸ்நானமும் ஆயிற்று? தீபாவளிக்குக் கதர் கட்டிக்களித்தீர்களா! "ஈத்" பண்டிகையைக் குதூகலத்துடன் கொண்டாடினீர்களா? ஆனந்தமாகவுள்ள உங்களிடம் சந்தோஷ சமாச்சாரங்கள் தெரிவித்து மகிழ முன்வந்திருக்கிறேன். எம்பெருமான் கிருபையால் நம் மோகினிச் செல்விக்கு இந்த டிஸம்சர் மாதத்துடன் **18** வருஷங்கள் பூர்த்தியாகி **1942** ஜனவரியில் **19**-வதாண்டு பிறக்கப்போகிறது.

"ஒவ்வொரு வருஷஆரம்பத்திலும் ஒரு தனிப்புத்தகம் போடும் வழக்கம்போல் இவ்வருடம் போடப்போவதில்லையா! "சுடர் விளக்கு"டன் சரிதானு?" என்று பலபேர் கேட்கிறுர்கள். இவ்வளவு அன்புடன் நேயர்கள்கேட்பது என் உத்ஸாகத்தையும் ஊக்கத்தையும் தூண்டும் தூண்டுகோலாகவிருக்கிறதனுல் நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்து என் வந்தனத்தை அளிக்கிறேன்.

வழக்கம்போல புதிய வருஷ ஆரம்ப சஞ்சிகையுடன் தனிப் புத்தகமும் ஒன்று வெளியிடத் தீர்மானித்திருக்கிறேம். ஆத்மசக்தி, கருணுலயம்போல பல அழகிய படங்களுடன் வெளிவரும். அதன் விலை ரூ. **1/4/-** ஆகும். அதன் பெயரும் மற்ற விவரங்களும் அடுத்த இதழில் வெளியாகும். ஆனல், காலதேச வர்த்தமானத்தை ஒட்டி நேயர்களுக்குப் பிரத்யேக சலுகை காட்டும்பொருட்டு சந்தாதாரர்களுக்கு, **12** அணுவிற்கு (வெளிநாட்டினர் **5** கூபன்கள்), டிஸம்பர் மாதம் **31**-ந் தேதி வரையில் கொடுப்பதாக நிச்சயித்திருக்கிறேம்.

தற்காலத்திய பேப்பர் பஞ்சத்தைப்பற்றி அடிக்கடி பஞ்சப் பாட்டு பாடவே வேண்டாம். அது நீங்களறிந்ததேயாகும். அதனல் செலவு ஏராளமாக ஆகிறதெனினும் நம் சந்தாதாரர்களின் சௌகரியத்தை உத்தேசித்து குறைந்த விலைக்குக் கொடுப்பதை நேயர்கள் கவனிக்கக்கோருகிறேன்.

மேற்குறித்த பேப்பர்பஞ்சத்தின் காரணமாக ஜனவரி இதழை புது வருஷ சந்தா செலுத்திய நேயர்களுக்குமட்டுந்தான் அனுப்ப முடியும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தை உத்தேசித்து நண்பர்கள் தம்தம் சந்தாத் தொகையுடன் புதிய நாவலின் கிரயமாகிய 12 அணுவையும் சேர்த்து ரூபாய் **2/4-** (வெளிநாட்டினர் **4** ஷிலிங் **1** கூபன்) அனுப்பி உங்கள் பேராதரவைக் கொடுத்து உதவும்படி வேண்டுகிறேன்.

நிற்க, சில சகோதரிகள் புதிய பக்ஷணங்கள் செய்யும் முறைகளை எழுதியனுப்பியதற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். இதேபோல் இன்னும் புதிய புதிய தினுசுகளைத் தெரிவித்தால் மெத்த சந்தோஷத்துடன் பிரசுரிக்கிறேம்,

நன்றியுள்ள,

**வை. மு. கோதைநாயகி.**

# நித்தியானந்தரின் ரேடியோ டயரி



(வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L.)

லாவண்யசர்மா:—நமஸ்காரம் மிஸ்டர் ஆனந்தம்! என்ன விசேஷம்—ஏதோ கடிதம் ரொம்ப மும்முரமாக எழுதிக்கொண்டிருக்கிறீர்?

நித்யானந்தர்:—வாருங்கோ! வாருங்கோ. மும்மரமென்ன இருக்கு. சூட்டோடு சூடு எழுதினால்தானே உண்டு. நினைத்தபோது எழுதாது அப்புறம் அப்புறம் என்று தள்ளிக்கொண்டேபோனால் கடைசியிலே எழுதுவதே கிடையாது. அதுதான் என் அனுபவம்.

லா:—ரொம்ப முக்கியமான விஷயத்திலேயெல்லாம் அவ்வப்போது எழுதினால்தான் பிரயோஜனம் உண்டு. ஆறின கஞ்சி பழம் கஞ்சிதானே!

நி:—அப்படி ஒன்னும் ரொம்ப முக்கியமான விஷயமில்லை இப்போது நான் எழுதுவது. முக்கியமென்னு நினைத்தால்தான் முக்கியம். தபால் பெட்டிக்கு பதில் எழுதுகிறேன்.

லா:—ஏதாவது விசேஷ நிகழ்ச்சிகளைப்பற்றியா? அல்லது புது பிரச்னைகளைப்பற்றியா?

நி:—சென்ற 26-ந்தேதி திருச்சி நிலையத்தில் கடிதங்களுக்குப் பதில் அளிக்கையில் குறிப்பிட்ட இரு விஷயங்களைப்பற்றிதான் எழுதுகிறேன். இசைத்தட்டு அறிவிப்பு விஷயமாக அவர்கள் அளித்த பதில் அவ்வளவு திருப்திகரமாயில்லை. "நேயர்கள் தங்களுக்குப் பிடித்தமான ரிகார்டுகளின் பெயரையோ விவரத்தையோ தெரிவித்து நம்பர் கேட்டால் கடிதமூலமாக எழுதுகிறோம்" என்றார்கள். ஒலிபரப்பப்படும் ரிகார்டுகளில் பல நேயர்களுக்குப் பிடித்திருக்கலாம். ஆனால் புதிதாகக் கேட்கும் பாட்டுகளின் முதலடியை நினைவு வைத்துக்கொண்டு நிலையத்தாருக்கு எழுதி நம்பர் விசாரித்துக்கொள்வதென்பது சுலபமான காரியமல்ல. மேலும், ஹிந்துஸ்தானி சங்கீதமாயிருந்தால்—அதிலும் கோஷ்டி வாத்திய இசையாயிருந்தால்—அடையாளம் கூறி நம்பர் கேட்பது மிகவும் கஷ்டம். ஆகையால், ஒவ்வொரு இசைத்தட்டு ஒலிபரப்பியவுடன் அதன் நம்பரைத் தெரிவித்தால் நேயர்களுக்கு மிகவும் சௌகரியமாயிருக்கும். மற்றொரு விஷயம் இசைப் பயிற்சியைப்பற்றி. இப்போது இருக்கும் நேரத்தை நீடிப்பதற்கில்லையென அறிவித்தது ஆச்சரியமாயிருந்தது. கல்கத்தா நிலையத்தில் இசைப்பயிற்சிக்கு நீண்ட அவகாசம் கொடுப்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும். சங்கீத அப்பியாஸத்திற்கு அரைமணி நேரம் கொடுக்கவேண்டும். ராக ஆலாபனை போதனை விஷயமாக அதிக ஊக்கம் காட்டவேண்டும். சிட்டையாக உருப்படிகளை மாத்திரம் கற்பிப்பது போதாது. கல்கத்தா நிலையத்தில் ராக அப்பியாசம் செய்வது நமக்கு அந்த சங்கீதம் பரிச்சயமில்லாதிருந்தும் மிகவும் ரஸமாயும் கேட்கக்கூடியதாயுமிருக்கிறது. கீர்த்தனை அப்பியாஸத்தைவிட ராக அப்பியாஸத்தை அதிகமாக ஒலிபரப்புவது உசிதம். 'நெருங்கிய பந்துக்களான' ராகங்களை எடுத்துக்கொண்டு ஒன்றுக்

சொன்றுள்ள வித்தியாஸங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டவேண்டும். உதாரணமாக பூர்வி கல்யாணிக்கும் பந்துவராளிக்கும்; ஷண்முகப் பிரியாவிற்கும், ஸிம்மேந்திரமத்தியமத்திற்கும்; கீரவாணிக்கும், கைகவசிக்கும்; நாதநாமக்ரியாவுக்கும், மாயமாளவ கௌளாவுக்கும்; கல்யாணிக்கும், சங்கராபரணத்திற்கும்; காம்போதிக்கும், கேதார கௌளத்திற்கும்; நாட்டைக் குரிஞ்சிக்கும், ரீதி கௌளைக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தையும், வித்தியாசங்களையும் நன்ருய் மனதில் பதியும்படி போதிக்க வேண்டும். ஸங்கீதத்தில் அபாரமான ஸாதகமோ, வித்வத்தோ இல்லாது சாதாரணமான ஞானம் உடையவர்தான் பெரும்பான்மையான ரேடியோ ரஸிகர்கள். அத்தகையோரின் ஆர்வத்தைக் கிளப்பி ஸங்கீத ஞானத்தை வளரச் செய்வதில் இத்தகைய நிகழ்ச்சி பெரிதும் உதவி புரியும் என்பதில் சந்தேகமே யில்லை.

லா:—வாஸ்தவந்தான். துக்கடாக்களையும், சிட்டைப் பாட்டுக்களையும் கற்றுக்கொள்வதைவிட நீர் சொல்வதுமாதிரி ராக அப்பியாசம் செய்து அறிவைப் பெருக்குவதே உசிதம்.

நி:—சங்கீத அப்பியாஸத்தை காலை ஒலிபரப்பிலாவது, அல்லது இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள்ளாகவாவது அமைத்தால்தான் பெருவாரியான ரேடியோ அபிமானிகளுக்குப் பயனளிக்கக் கூடியதாயிருக்கும்.

லா:—அக்டோபர் நிகழ்ச்சிகள் எப்படி? விசேஷ விருந்தோ?

நி:—சில வாத்தியக் கச்சேரிகளே மிகவும் சிறந்து விளங்கின. கே. எஸ். நாராயணய்யங்கார் கோட்டுவாத்தியம் (5உ); சாம்பசிவய்யர் வீணை (9உ); மகாலிங்கம் புல்லாங்குழல் (14உ); சஞ்சீவி ராவ் புல்லாங்குழல் (20உ); சௌடய்யா பிடில் (26உ); முதலிய கச்சேரிகளை விசேஷமாய் குறிப்பிடவேண்டும். வாய்ப் பாட்டுக் கச்சேரிகளுள் மிகவும் நன்ருய் அமைந்தவை. செம்பை (25உ); சுப்பையா பாகவதர் (18உ) முதலியோர் செய்தவைதான். சித்தூர் சுப்ரமணிய பிள்ளை (11உ) அடிக்கடி காதில் படாத சில உருப்படிகளைத் தனது அலாதி வழியில் நன்ருகப் பாடினர். மற்றபடி விசேஷமாக ஒன்றும் நான் கேட்கவில்லை.

லா:—அரியக்குடியினுடைய பெயரையே கேட்டு ரொம்ப நாளாகி விட்டதே. அவர் கச்சேரியை ஏன் ஒலிபரப்புவதில்லை?

நி:—ஆமாம். ரேடியோவில் அவர் பாட்டு கேட்டு ஒருவருஷத்திற்கு மேலாகிறது. என்ன காரணத்தினல் இப்பேர்ப்பட்ட முதல்தா வித்வானின் கச்சேரியை இவ்வளவு மாதங்களாக ஏற்பாடு செய்யாதிருக்கிருர்களோ தெரியவில்லை. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டும் வெகு நாட்களாகிவிட்டன. மாதத்திற் கொருமுறையாவது பகவத்விஷயத்தைப்பற்றி அவரை பேசச் செய்தால் நன்ருயிருக்கும்.

லா:—செவிடன் காதில் சங்கு ஊதுவதுபோல இங்கு என்னிடம் சொல்லி என்ன பிரயோஜனம்? ரேடியோ நிலைய அதிகாரிக்கு தடபுடலாக "எங்கே எங்கள் அரியக்குடி? எங்கே ஸ்ரீமான் ஆசாரியார்? அவர்களைக் கொண்டு மைக் முன் நிறுத்துங்கள். ஏன் இந்த மௌனம்?" என்று நீளமாக ஒரு கடிதம் எழுதுவதுதானே!

நி:—சபாஷ். நல்ல யோசனை. இப்போது எழுதும் பதிலிலேயே கடைசியில் நீர் சொன்னதுபோலவே எழுதிவிடுகிறேன். ஏன் சும்மா இருக்கவேண்டும்? நல்ல சரக்கை ஏன் இப்படி ரஸிகர்களிடமிருந்து அகற்றி வைக்கவேண்டும்?

# மயிலாப்பூர் லேடீஸ் கிளப்

## குழந்தைகளின் குதூகலம்

உலகத்தில் மக்களுக்கு உவமையிலாத ஆனந்தத்தைக் கொடுப்பது இரண்டு விஷயங்கள். ஒன்று எம்பெருமானின் பக்தியிலீடுபட்டு அவனருள் பெற்று இன்புறுவது. மற்றொன்று,

"குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்."

என்கிற திருக்குறளின் திவ்ய வாக்கின்படி குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற எழில் மிகுந்த தூய இதயத்தின் மறு மலர்ச்சியை அவர்களின் சோபை நிறைந்த முகத்தினாலும், இனிமைநிறைந்த மழலைச் சொற்களினாலும் வசீகரமான விளையாட்டினாலும் கண்டு இன்புறுவதாகும். எத்தகையோருக்கும் தலைதாங்காத துயரம் நிறைந்திருக்கும் சமயத்திலும் அருமையான குழந்தைகளின் மதுரமொழிகளும், விளையாட்டுக்களும் இந்த துக்கத்திற்கு மருந்து போல் தோன்றி சிறிது ஆறுதலும் நகைப்புங்கூட அளிப்பதைப் பல இடங்களில் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

குழந்தைகளின் கூட்டத்தைப் பார்க்கும்போதே ஒரு பேரானந்தம் மனத்திலிருந்து எழுகிறது. அதிலும் சற்று அழகானதும் புத்திசாலியானதுமான குழந்தைகளைக் கண்டால் அது எந்த குழந்தையாயினும் வாரியணைத்து முத்தமிட மனம் தூண்டுகிறது. இந்தமாதிரி குழந்தைகளின் கூட்டத்தை ஒருங்கே கூட்டி அவர்களின் ஆனந்தக் காக்ஷியைக் கண்டு களிக்குமாறு மயிலாப்பூர் லேடீஸ் கிளப்பினர் சென்ற 25-ந் தேதியன்று மாலை ஜெகீகம்பேட்டை ராணியின் பங்களா தோட்டத்தில் ஒரு கொண்டாட்டத்தை வெகு சிறப்பாக நடத்தினார்கள்.

தாய்மார்களுடன் குழந்தைகள், நடுத்தர சிறுமிகள் வரும் உத்ஸாகத்தைப் பார்த்தால்தானே தெரியும். சந்தோஷ அலை அவர்களின் முகத்தில் புன்னகையாகப் புரண்டு எழுந்தது. வண்டியை விட்டு இறங்கிய உடனே தாய்மார்களைக்கூட சில குழந்தைகள் விட்டுவிட்டு தம்தம் வயதுள்ள—சிநேகிதமான—குழந்தைகளைத் தேடிக்கொண்டு ஒரே தாவுதாவிச் சென்ற காக்ஷி ப்ரம்மானந்தமாகவிருந்தது.

குழந்தைகளுக்கென்று சிற்றுண்டி விருந்து தயாராக விருந்தது. ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் விதவிதமான அலங்காரத்துடன் ஜகஜ்ஜோதியாய் ப்ரகாசித்தார்கள். விருந்து உண்பதற்குக் குழந்தைகள் உத்ஸாகத்துடன் ஓடி அவர்களுக்கென அமைக்கப்பட்டிருந்த ஆஸனங்களில் தம்தம் கூட்டாளிகளை அழைத்துக்கொண்டு கும்மாளமடித்துப்போய் உட்கார்ந்த காக்ஷி கண் முன்பே இருக்கிறது. நாற்காலிகள் போதாமல் போனதும் இயற்கையன்னையின் மடிமீது பசுமை நிறைந்த புல் தரையில் மற்ற குழந்தைகள் கும்பல் கும்பலாக உட்கார்ந்தார்கள்.

க்ளப்பின் அங்கத்தினர்கள் ஆனந்தமும் புன்னகையும் தாண்டவமாடும் முகத்துடன் குழந்தைகளுக்குச் சிற்றுண்டி யளித்தார்கள். இந்த இடத்தில் ஒரு முக்யமான விஷயம் அறியவேண்டும். இதே விருந்து பெரியவர்களுக்கு நடக்குமாயின் சிலா கலகலப்பாக இருப்பார்கள். சிலர் உம்மணா மூஞ்சிடன் சேவை தருவார்கள். சிலர் பாதி சிரித்தும் பாதி சிரிக்காமலும் நவநாகரிகமாய் காக்ஷி தருவார்கள். சிலர் பிறர் தின்பதைப் பரிகஸித்து குசுமுசவென்று பேசிச் சிரிப்பார்கள். சிலர் வைத்திருக்கும் பலகாரத்தை

விரல்களின் நுனியால் தொட்டு அதை வாழ்த்திவிட்டுப்பேசாமல் உட்கார்ந் திருப்பார்கள். சிலர் கபடமற்றுச் சாப்பிடவும் சாப்பிடுவார்கள். இத்தனை காக்ஷிகளை பெரியவர்களின் விருந்தில் காணலாம்.

ஆனால் அப்பழுக்கற்ற நல்யமான இதயத்தையுடைய குழந்தைகள் ஒருவிதமான குனஷ்டையும் இல்லாது தாராளமாகச் சாப்பிட்டதுடன், "இன்னும் கொஞ்சம் மாமி!" என்று சில குழந்தைகள் கேட்டு வருவித்துக் கொண்டும் சாப்பிட்டார்கள். எதோ ஒரு சில குழந்தைகள் மட்டும் முதலில் சங்கோஜப்பட்டார்களெனினும் மற்றவர்களைப் பார்த்ததும் சங் கோஜம் பறந்துவிட்டது. "எனக்கு ஐஸ்க்ரீம் வல்லையே? எனக்கு மிக்ஸர் இன்னும் வேணுமே" என்று தாராளமாகக் கேட்கவாரம்பித்தார்கள்.

அம்மட்டுடன் நிற்காமல், "உனக்கு கலர் வந்ததா?...இன்னும் பக்ஷணம் ஒணுமா ?" என்று சில தைரியமான குழந்தைகள் மற்ற குழந்தைகளை விசாரித்து உபசரித்தது ஆச்சரியமாயும் சந்தோஷமாயுமிருந்தது. குழந்தை களுக்கு ஆனந்தமாக உண்பதிலும் விளையாடுவதிலும், விளையாட்டு பார்ப் பதிலும் உள்ள சந்தோஷம் வேறெதிலும் வராதல்லவா! ஆயிரம் ரூபாயை அவர்களுக்கெதிரில் வைத்தாலும், மற்ற உயர்ந்த பொருள் எதைக்கொடுத் தாலும்கூட அவற்றை வரவேற்காமல் வீதியில் ஒரு தொம்பரக்கூத்து ஆடு கிறவன் 'டம்டம்!' என்று தன் ஆயுதமாகிய தமுக்கைத் தட்டவாரம்பித் தால் அதில் பேரானந்தங்கொண்டு காற்றாய் ஓடிவிடுவது சகஜமல்லவா !

உண்டிக்குப்பிறகு உல்லாசம் என்பதுபோல் குழந்தைகளுக்கு முதல் சந்தோஷம் போஜனமளித்ததும் ஒரு லாட்டரி விளையாட்டு வைத்தார்கள். பிறகு குழந்தைகளின் ஆனந்தமும் ஆரவாரமும் உச்சஸ்தாயியை அடையும் வண்ணம் ஒரு தமாஷ் சினிமாப்படம் காட்டி அவர்கள் தின்ற சிற்றுண்டி அவ்விடத்திலேயே ஜீரணமாகிப் பசி எடுக்கும்படிச் சிரிக்கவைத்தார்கள். குழந்தைகள் மட்டுமில்லை. பெரியவர்களும் ஒன்றுமே சாப்பிடாமல் பசித்த வயிறுடனேயேகூட சிரித்தார்கள். குழந்தைகள் ரஸித்து இன்புறும் வண்ணம் படத்திலும் இரண்டு குழந்தைகள், ஒரு குள்ளன், யானை முதலிய மிருகங்கள், இன்னும் பல தமாஷ்கள், உள்ள படமாகப் பொறுக்கிக் காட்டி யது பாராட்டத்தக்கது.

படத்தைப் பார்க்கும்போது குழந்தைகள் செய்த ஆரவாரமும் கும் மாளமும், அந்த கட்டிடத்தில் பூகம்பத்தையே உண்டாக்கிவிடும்போலிருந் தது. அந்த ஆரவாரத்தின் நாதம் கும்மென்று சில வினாடிகள் ரீங்காரம் செய்தபோது நம்மையறியாத ஒரு களிப்பு இதயத்தில் பொங்கியது.

சுமார் ஒருமணி நேரம் சினிமா பார்த்தபிறகு கூட்டம் கலைந்தது. விளக்கணைப்பின் காரணமாக ஒரே இருட்டாகவிருக்கும் தோட்டத்தில் தம்தம் தாய்மார்களைத் தேடிக்கூப்பிடும் குழந்தைகளும், குழந்தைகளைத் தேடியலையும் தாய்மார்களும், தம்தம் மோட்டாரைத் தேடும் வைபவமும், இது ஒரு தனிக் களியாட்டம்போல் தோன்றியது. குழந்தைகள் தாம் பார்த்த படத்தைப்பற்றி தம்தம் அறிவுக்கு எட்டியபடி பேசிக்கொண்டு சென்றார்கள். கூட்டமும் கலைந்தது; வீட்டையும் அடைந்தோம். இத் தகைய ஆனந்தகரமான காக்ஷியைக் கண்டு களிக்கச்செய்த க்ளப்பின் அங் கத்தினர்களையும், அந்த விருந்துக்கு பூர்ண உதவியளித்த ஜெக்கம்பேட்டா ராணியையும் பாராட்டாமலிருக்கமுடியாது. "குழந்தைகளின் பார்டியைப் போல் 'அம்மாமிகளின் பார்டி' ஒன்று கொடுக்கமாட்டார்களா?" என்று பல பேர்களின் நாக்கில் ஜலம் ஊறியது.

வை. மு. கோ.

# சித்திர ரகளை

சுப்பு:—கண்ணுச்சே! பால் குடிச்சூடும்மா !

துப்பு:—(புடவை மடிப்பதை மறந்துபோய்... தன்னறையிலிருந்து எட்டிப் பார்த்து சிரித்த படியே) ஸ்வாமீ...பேஷ்! பால்போட்டுகிறீரா! தூத்தூ ...பொம்மண்டாட்டி செய்கிற



காரியத்தையா புருஷன் செய்யறது. நானு யிருந்தால் கையால்கூட தொடமாட்டேன்.

சுப்பு:—ஓய்! உம்மைப்போல் நான் புடவை மடிக்க வில்லை. பால்தான்போட்டுகிறேன்.

---



## அவசியம் கவனிக்கவும்

க்ஷேமலாபத்திலும் ராப்பர் 3-வது பக்கத்திலுமுள்ள விஷயங்களைக் கவனமாகப் படிக்கவும்.




1. நியாயம் என்பது எல்லோருக்கும் பொதுவாக உண்டாகியதெனினும் சிலர் தம்தம் மனம் போனபடி உபயோகித்துக்கொள்கிறார்கள். சமயோசிதம்போல் நியாயம் புரளுங் காலத்தில் அக்ரமங்கள் ஏன் நடக்காது?

2. பத்து வருஷங்களுக்கு முன் த்வேஷப் பிண்டமாகத் தோன்றிய மனிதர்களே இப்போது அமிருத கலசமாகத் தோன்றுகிறார்கள். காரணம் லாபமில்லாமலா?

3. உலகத்தில் ஒருபுறம் கோர யுத்தத்தினால் மக்கள் பரிதவிப்பது. ஒருபுறம் சினிமா கொட்டகை வாசலில் டிக்கட்டு அகப்படாமல் சிலர் பரிதவிப்பது.

4. சிலருக்குள்ள தேசாபிமானத்தில் தம் தேசத்தில் நடக்கும் நன்மைகளைமட்டுந்தான் காட்டவேண்டும். தீமைகளை அடியோடு விட்டுவிடவேண்டும் என்கிறார்கள். தீமையை முதலில் வேருடன் களைந்து எறிவதுதான்தேசத்தின்நன்மைக்கு உகந்ததாகுமென்பதை அவர்களறியவேண்டும்.

5. விஷயமறியாமலேயே வம்புக்குச் சண்டை பிடிப்பவர்கள் அனேகர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விஷயத்தை விளக்கிச் சொன்னாலும் கேட்பதில்லை; அதை சரியாக அறியவேண்டுமென்கிற ஆசையுமில்லை. இரண்டுங்கெட்டானுடன் என்ன செய்வது?

6. சில வருஷங்களுக்கு முன் ஒருவரையொருவர் பரம வைரியாக எண்ணி கண்டபடி திட்டிக் காறியுமிழ்ந்து இதைக் கண்டு பிறர் சிரித்தது எல்லாம் எப்படியோ மறந்துபோய், அதே வைரிகள் ஒரே இடத்தில் சாப்பிடுவதும் பல்லாங்குழியாடுவதும் குலாவுவதுமாகவிருப்பதைக் கண்டால் ஜனங்களுக்கு எப்படி இருக்கும் ?

7. உன் காதுகளையும், உன் நாக்கையும் நீ நம்பாதே! நீ கேட்பதும், நீ சொல்வதுமே பொய்யாயிருக்கலாம், ஆகையால் உன் மனச்சாக்ஷியை, சத்தியத்தை, கடவுளின் பாதத்தை நம்பு. வாழ்க்கையில் ஜெயம்பெறலாம்.

8. பிறரிடம் நீ பழகுவதெல்லாம் அவர்களிடமுள்ள நன்மைகளை கிரகித்து உனக்கு உபயோகப்படுத்திக்கொள்வதற்கேயன்றி அவர்களிடமுள்ள சிறு குறைகளையும், குற்றங்களையும் நீ கவனித்து அதனால் அவர்களுக்குத் தீங்கு விளைவிப்பதற்கல்ல.

9. எந்தப் பாடலைப்பாடினாலும், எந்த தோத்திரங்களைச் சொன்னாலும் அததன்பொருள் விளங்க ஸ்பஷ்டமாகச்சொன்னால் தன் மனத்திற்கும் ஆனந்தம்; அதைக் கேட்கும் பிறர் மனத்திற்கும் பிரம்மானந்தத்தை உண்டாக்கி பக்தியைத் தூண்டி எழுப்பும். அதை விடுத்து பதமே புரியாதபடி பாடினால், தோத்திரம் படித்தால் கேட்பவர்களுக்குச் சிரிப்புத்தானேவரும்,

10. உத்கிருஷ்டமான அம்மன் சன்னிதியில் அர்ச்சனை செய்யும்போது, ஸ்கண க்ஷஸ்லா...பும்...பும்...கிம்பும்...என்று ராகமாக இழுத்து ‘பும்பும்’ என்று அஷ்டோத்திரத்தைச் சொன்னால், அங்கிருக்கும் சேவார்த்திகளுக்கு ஏற்கெனவே இருந்த பக்தியும் மறந்துபோய் அம்மனை சேவிப்பதையும் மறந்து, இந்த பும்...பும்...மந்திர செப்படிவித்தையில் கவனம் சென்று சொல்லெனச் சிரிக்கிறார்கள். பட்டருடைய வாய்கூடவா ஸ்பஷ்டமாயிருக்காது ?

# திருப்பதி யாத்திரை

## 2

வை. மு. ஸ்ரீநிவாஸன்.

அவர்களின் குணாதிசயங்களைப்பற்றி எழுதுவதென்றால் எவ்வளவோ எழுதலாம். அவர்களில் பலருக்குள்ள வாய்த்துடுக்கும், அதிகப்ரஸங்கித்தனமும், புத்தி நுட்பமும், ஹாஸ்யச் சுவையும், பெருந்தன்மையும், தெய்வ பக்தியும், நாம் எதிர்பாராத அளவில் அமைந்திருப்பதை மலை ஏறும் போதோ அல்லது இறங்கும்போதோ நிதானமாகச் சென்றால் எளிதில் கவனிக்கலாம். அன்று நான் கவனித்த சில நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன்.

* * * * *

1. ஸர்வாபரண பூஷிதையாக ஒரு அம்மாள் டோலியில் சென்று கொண்டிருந்தார்கள். டோலிக்காரன் தெலுங்கில் அந்தம்மாளை அவளுடைய எஜமானருக்கு என்ன உத்தியோகம், எத்தனை குழந்தைகள், யார் யார் கூட வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விசாரித்துக் கொண்டே நடந்துகொண்டிருந்தான். அந்தம்மாள் கூறிய பதிலைக் கேட்டுக்கொண்டிருந்த பிச்சைக்காரி—பிச்சைக்காரி என்றால் சாமான்யப்பட்ட பிச்சைக்காரியல்ல: டோலியுடன் கூடவே விடாகண்டியாக ஓடிவரும் 'லண்டி'.—"டாக்டரய்யா பொஞ்சாதியம்மா! எனக்கு ஒரு காலணா போட்டுட்டுப்போயேன்" என்று கத்திக்கொண்டே பின்தொடர்ந்தாள். 'மலையிலிருந்து திரும்பிவரும்போது போடுகிறேன்' என்று அந்தம்மாள் சொன்னதற்கு "இந்தமாதிரிதான் ரொம்ப பேர் சொல்றாங்க. திரும்பி வரச்சேயும் போட்றதில்லே. பின்னாலே ஐயா வராருன்னு சொல்லிப்புட்றாங்க. தம்புடி கூட போட்றதில்லே" என்று சொல்லிக்கொண்டே பின்னும் தொடர்ந்தாள். டோலிக்காரன் கோபத்துடன் "கத்தாதே. திரும்பிவரச்சே போட்றேன்னு தான் சொல்றாங்களே! ஏன் இப்படி உபத்ரவம் பண்றே?" என்றான். "நான் அம்மாவைக் கேட்டால் நீ ஏண்டா கத்தறே! போட்றவங்களாயிருந்தா இப்பவே போடட்டுமே. திரும்பி வரச்சே போட்டாதான் ஒசத்தியோ! இப்போ தருமம் பண்ணிண்டே மலைக்கு போனாதான் புண்ணியம்... அம்மா! எவ்வளவு தூரம் கூடவே ஓடி வாரதும்மா! ஒரு காலணா குடுங்களேம்மா" என்றாள். அந்தம்மாளும் கோபத்துடன் "எத்தனை தரம் சொல்றது? உன்னை யார் இவ்வளவு தூரம் கூடவே வரச்சொன்னது? திரும்பி வரச்சேதான் போட முடியும்" என்று சொன்னாள். இது தாங்குமோ அந்த பிச்சைக்காரிக்கு! ஓடுவதை நிறுத்திவிட்டு உடனே தனது பரிபாஷையை ஆரம்பித்துவிட்டாள். "டாக்டர் பொஞ்சாதியாம்! அடேயப்பா! ஜம்பமா டோலிக்காரன் கிட்டே சொல்லிண்டு போறத்தே பாரு. ஒரு காலணா போட்றத்துக்கு வக்கில்லே. போட்றமுஞ்சியாயிருந்தா இப்பவே போட்றத்துக்கென்னவோ! தர்மதேவதை" என்று தொண்டை கிழிய காட்டுக்கத்தல் போட்டாள். இந்த அதிகப்ரஸங்கித்தனமும், வாய்த்துடுக்கும் பொறுக்காத டோலிக்காரன் டோலியை நிறுத்திவிட்டு அவளை ஒரு அத்தியாயம் வைய ஆரம்பித்தான். "அவள் கத்திக்கொண்டிருக்கட்டும்; நீ பேசாமல் வா" என்று அந்த அம்மாள் சொன்னதன் பிறகு திரும்பினான்.

* * * * *

2. இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாது கஷ்டப்படினும் புத்திநுட்பமும், ஹாஸ்யச்சுவையும் பெரிதளவில் சிலருக்கு

இருக்கின்றதென்பதையும் கண்டேன். சிறிதுதூரத்தில் செல்லும் 5 டோலி களைப் பார்த்து 2 பிச்சைக்காரர்கள் பின்வருமாறு பேசலானார்கள்:—

"ஒருவன்:—குப்பா! பாத்தியா அந்த ஸ்வரூபங்களெ! அப்பாடா! தூர வரச்சேயே பயமாயும் ஆச்சரியமாயுமிருந்தது. அந்த ஐந்து பேரும் மனுஷப் பிறவிதானா இல்லையான்னு சந்தேகமாப்பூட்டுது.

மற்றொருவன்:—அன்னிக்கு இடும்பவனத்தைப்பற்றி உபன்னியாஸத் திலே சொன்னாரே பாகவதரய்யா அதுதான் ஞாபகம் வந்துடுச்சு. இடும்பி, பீமன்முதலியவங்கல்லாம்எப்படி இருந்திருப்பாங்கன்னு இப்போபுரியுதுரா!

முதல்வன்:—அதுகூட எனக்கு நினைவுவல்லே. இன்னொருரோசனைன்னா வந்துடுச்சு! அவங்களை ஒவ்வொருத்தரையும் நாலுபேருன்னா தூக்கிக் கிட்டுப் போறாங்க! உசிரோடே இருக்கச்சேயே இவங்க தங்களை நாலு பேரு தூக்கிகிட்டுபோறதத்தேப் பாக்க குடுத்துவச்சிருக்காங்களேன்னு எனக்கு சிரிப்பு வந்துடுச்சு!

குப்பன்:—ஐயோ பாவம்! நிறைய நாள் இருக்கட்டும்டா! பெருமாளை சேவிக்கப்போறவங்களேப்பத்தி இப்படி சொல்லாதேடா.

முத:—நான் கெட்ட எண்ணத்தோடே சொல்லலேடா! சாமி குறை பண்ணமாட்டாருடா! அவங்களே தேருக்கு முட்டுகுடுத்தாகூட அவங் களுக்கு ஒன்னும் ஆகாது; தேருதான் சடக்குன்னு நிக்கும். தெரியுமா?

குப்பன்:—போடா போக்கிரி! எல்லாரும் ஒன்னைப்போல எலும்புக் கூடா ஈர்க்குச்சியாயிருக்கணும்றயா!

முத:—இல்லேடா இல்லே. சின்ன மாமிச பர்வதமாயிருக்கணும்னு தான் சொல்றேன்."

இவ்வாறாக அவ்விருவர் தங்கள் கஷ்டங்களை மறந்து மனம் போன வாறு குசாலாகப் பேசிக்கொண்டேயிருந்தார்கள். பகவத் ச்ருஷ்டியில் அம் மாதிரியான ஸ்வரூபங்களை அவர்கள் பார்த்ததேயில்லைபோலும். அவர்களது பேச்சு ஸ்வாரஸ்யத்தில் யாத்ரீகர்களிடம் பிச்சை கேட்கக்கூடமறந்தார்கள்.

* * * * *

3. ஒரு பிச்சைக்காரக் குடும்பம். புருஷன், மனைவி, மூன்று குழந் தைகள் ஆக ஐந்து பேரும் ஒரே இடத்தில் நின்றுகொண்டு பாட்டு பாடிக் கொண்டே பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்கள். மலையில் ஸ்வாமி தரி சனம் செய்துவிட்டுத் திரும்பும் யாத்ரிகர்களில் ஒரு கனவான் தன் சொக் காய் ஜோபி நிறைய காலணாவும் தம்பிடியுமாக வைத்துக்கொண்டு தருமம் செய்துகொண்டே இறங்கிக்கொண்டிருந்தார். இந்தப் பிச்சைக்காரக் குடும் பத்தினர் இருந்த இடத்திற்கு முன்படிக்கட்டிலிருந்த பிச்சைக்காரனுக்கு காலணா கொடுத்துவிட்டு அந்த கனவான் இந்த ஐவருக்குமாகச் சேர்ந்து ஒரு தம்பிடி கொடுத்துவிட்டுச்சென்றார். அவர் சிறிது தூரம் சென்றபிறகு மிகவும் தாழ்ந்த குரலில் தன் மனைவியைப் பார்த்து அந்த கிழவன் சொல்ல லானான்:—"நம்ம குடுத்துவைச்சது இவ்வளவுதான். நம்ம அஞ்சுபேருக்கும் சேர்ந்து ஒரு தம்புடிதான். ஆனால் மேல் படியிலேயிருக்கிற ஒருத்தனுக்கு மாத்திரம் காலணாப்போட்டாரு. அவனுடைய வேஷத்தை உண்மையான வியாதியென்று நம்பி அந்த அய்யா ஏமாந்துபோய் காலணாவாப்போட்டாரு. நாம் எல்லாரும் வியாதியில்லாது செக்கோலக்கைமாதிரி இருக்கறதினாலே வேலே சேஞ்சு பொயச்சுக்கட்டடமேன்னு நினைச்சுக்குட்டு ஒரே ஒரு தம்புடி தான் போட்டாரு. வேலை எங்கே ஆப்புடுது! ஈச்வரன் சோதனை இது மாதிரி இருக்குது. நாம் எவ்வளவு பாவம் பண்ணமோ, தம்புடியாவது

குடுத்தாரே கடவுள் இன்னூட்டுத்தான் நாம் திருத்தியாயிருக்கணும். செடி வச்சவரு அவர் எப்படியாவது தண்ணி ஊத்திடுவாரு.''

அவனுடைய பெருந்தன்மையையும், தெய்வபக்தியையும், அவனைச் சேர்ந்தவர்களின் பொறுமையையும் கண்டு பிரமித்துவிட்டேன்.

(தொடரும்)

# பழமொழியா ? நடைமொழியா ?

வை. மு. கோ.

''பழமொழியே உபயோகிக்காமல் பேசவேண்டுமென்று நானும் எத்தனையோ பிரயத்தனப்படுகிறேன். தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பார்களே! அதுபோல் வழக்கம் விடமாட்டேனென்கிறது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதுபோல் என் பேத்திகூடன்னு ஒவ்வொரு பழமொழியை வீசிப் பேசுகிறாள்'' என்று ஆரம்பித்தாள் காழ பாட்டி.

''அதென்னமோம்மா! அனேக விஷயங்கள் அப்படித்தான் மாற்றமுடியாதிருக்கிறது. அது போகட்டும். தீபாவளிக்கு உங்க பேரன் வேட்டாரத்திற்குப்போயிருந்தானு! கொட்டு மேளமும், பட்டு வேஷ்டியும் தட்டுச் சீரும் கெடச்சுதா!'' என்று குசலப் பிரசனம் விசாரித்தாள் குட்டி பாட்டி.

காழ:—ஆகா! திவ்யமா போயிருந்தான். பிள்ளைச் சீரு கொள்ளக் கிடைக்குமா? வேணதெல்லாம் செய்தார்கள். அவர்களுக்கென்ன குறைவு. ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் பெத்திருக்கிறார்கள். சிலரைப்போல வசவசவென்று நாயின்பின்னே நாலு பன்னியின்பின்னே பத்து'' என்று பிச்சல்பிடுங்கல் உண்டா! சமத்தி என்ன பெற்றாள் என்றால் தலைச்சன் பெண்ணைப் பெற்றாள். என்பதுபோல் முதல் முதல் பிறந்த பெண்ணுக்கு செய்வதற்குக் கேட்கவேண்டுமா ? அதிலும் சம்மந்தி பிராம் மணன் சாமான்யப்பட்டவரா!...அவர் 'உத்யோகம் புருஷலக்ஷணம்' என்பதுபோல் பெரிய உத்யோகத்திலிருக்கிறார். உத்யோக தோரணையில் அவர் 'இட்டது சட்டம். ராஜதோரத்தனந்தான். நாக்கு அசைந்தால் நாடு அசையும்; உதடு அசைந்தால் உலகம் அசையும்' என்பதுபோல் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது. எள்ளு என்பதற்குமுன் எண்ணெயாய் கொட்டுவதற்கும், நெல்லு எள்பதற்குமுன் அரிசியாய் அளப்பதற்கும், ஆட்கள் கைகட்டி வாய் புதைத்துக் காத்திருக்கிறார்கள். செய்வதற்கென்ன குறைவு?

குட்டி:—செல்வாக்கும் செல்வமும் இருந்தாலும் பரிமளிக்கச் செய்து சந்தோஷப்பட மனம் வேண்டாமா! 'தனமிருந்தால் மனமில்லை; மனமிருந்தால் தனமில்லை' என்று ஆய்விட்டால் என்ன செய்வது? கண்ணுள்ள போது காக்ஷி; பெண்ணுள்ளபோது சீர்கள் செய்து பார்த்தால்தானே. செத்தபிறகு சிவலோகம் வைகுண்டம் என்று இராமல் காலா காலத்தில் செய்வது அதிசயந்தான். எங்க பக்கத்து வீட்டிலும் ஒரு பெரிய பணக்காரர் இருக்கிறார். என்ன லாபம்? இல்லையென்ற வீட்டில் பல்லியும் நுழையாது என்பார்கள். அதுபோல அந்த வீட்டிற்கு சொந்தக்காரர்கூட வருவதில்லை. நானும் நீயும் இடைச்சியும் பூவாத்தாளும் என்று அவர்கள் மட்டும் ஆந்தை விழிக்குமாம் போலே போலே என்று விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இதற்கென்ன சொல்கிறாய்?

காழ:—அதுவும் வாஸ்தவந்தான். வாய் வாழைப்பழம் கை கருணைக் கிழங்குபோல் எத்தனை பெரிய மனுஷாள் இல்லை. தேனொழுகப்பேசி தின

வடங்கச் சோறிந்து வெறுங்கையை விரித்து அனுப்பிவிடும் பலரும் உண்டு. உலகம் பலவிதம். இடுவார் பிச்சையை கெடுவார் கெடுத்தாராம். என்பது போல் அந்த சகுனிமாமாவைப்போல் இருந்து எச்சில் கையால் காக்காய் ஓட்டாமல் தடுக்கும் ஆத்மாக்களும் உண்டு. கரைப்பார்கரைத்தால் கல்லுங்கரையும் என்பது பொய்யாகுமோ! என்னமோ! இது வரையில் எங்க சம்மந்தி அப்படி இல்லே. பச்சைப் பந்தலில் இல்லாத சீரும் பச்சை உடம்புக்கு (ப்ரஸவித்தவள்) இல்லாத போஷணையும் எதற்கு உதவும்?

குட்டி:—சீர் வகைகள் சரிதான். பெண்ணின் குணம் எப்படி? குடும்பத்திற்கு ஏற்றாற்போலிருக்குமா? அல்லது வந்த சண்டையை விடமாட்டேன்; வலுவு சண்டைக்குப் போகமாட்டேன் என்று இருப்பாளா!

காமு:—சீச்சீ! அப்படிக்கெல்லாம் நினைக்காதே. பெண்ணைப் பார்த்தாலே போரும். பொன் குடத்திற்குப் பொட்டு எதற்கு பொங்கலிட்ட பானைக்குப் பத்தேதற்கு என்பதுபோல் சொர்ண விக்ரகம்போலிருக்கிறாள். குணமோ அமிருதந்தான். காரியம் செய்வதிலோ பம்பரந்தான். 'கண் பார்த்தால் கை செய்யும், கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்பதை நடைமுறையிலேயே காட்டுகிறாள். தாயைப் பார்த்து மகளைக்கொள்ளு பாலைப் பார்த்துப் பசுவைக்கொள்ளு' என்கிறபடி அவளுடைய தாயாரின் கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்துத்தான் இந்தப் பெண்ணை நிச்சயம் செய்தோம். கைப்பட்டால்கண்ணாடி என்கிறமாதிரிதான் அவள்வேலையுமிருக்கிறது.

குட்டி:—நீங்க குடுத்துவைத்த பாக்யசாலிதான். முடுசாமுஞ்சி மருமகளும் முடுச்சு விழுந்த புடவையும்போலிருந்தால் என்ன செய்வது? போட்டபணம் திரும்புவதும், நாட்டுப்பெண் அமைவதும், அதிர்ஷ்டக்காரர்களுக்குத்தான் கிடைக்கும் ஆயிஸோடே நன்னாயிருக்கணும். அதன் வயிற்றில் நாலு குழந்தைகள் பிறக்கவேண்டும். காய்ச்சு பூத்துவிட்டது என்றால் ஒரு செடியும் தோப்பாகிவிடுகிறது.

காமு:—நன்னா ஆசீர்வாதம் பண்ணு. நாட்டுக்கு நல்லபிள்ளை; வீட்டுக்கு நல்லபாம்பாய் சில பிள்ளைகள் இருக்கும். எங்க நாராயணன் அப்படி இல்லேம்மா! நாட்டுக்கு ராஜாவானாலும் வீட்டுக்குக் குழந்தை என்கிறாப்போலவே குழந்தையாயிருக்கிறான். பந்துக்களிடம் ஆதரணை அன்பு எல்லாம் உண்டு. நாம் என்கிற கர்வமே இல்லே.

குட்டி:—ஆமாம். குறைகுடமானால் கூத்தாடும், நிறைகுடம் நீர் ததும்புமா அதோடு அல்பனுக்கு ஐச்வர்யம் வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான். இவனுக்கென்னடீ குறைவு? பரம்பரை செல்வமும் பரிமளத் தோட்டமும்' என்றபடி என்றும் ஒரே மணமாகத்தானிருக்கும். சக்கரைப்பந்தலில் தேன் மழை பெய்தால்போல் சம்மந்தமும் கிடைத்தது.

காமு:—என்னமோ! எனக்கும் வயசாச்சு. காடு வா! வா! என்கிறது. வீடு போ! போ! என்கிறது. எல்லாரும் நன்றாக இருக்கும்போது நான் கிளம்பிவிட்டால்போதும். மகராஜிப்பட்டமும், மனமகிழ்ந்த வாழ்வும் இருந்தால்போதும். பகவான் கருணை எல்லாருக்கும் இருக்கணும். நாடேங்கும் வாழக்கேடொன்றுமில்லே' என்றாள்.

பார்த்தீர்களா! இரண்டு பாட்டிகளும் தம் தம் சொந்த விஷயம் ஒரு சிறிது பேசும்போதே எத்தனை பழமொழிகள் சரமாரியாக உதிர்ந்தன பாருங்கள். அனேகமாக எல்லாரும் தடுக்கமுடியாது சகஜமாகவே கையாளும் பலமுறைகளில் இதுவும் ஒன்றல்லவா?




மங்களம்:—என்ன கல்யாணி! கங்கா ஸ்நானம் ஆயிற்றா! தீபாவளி பண்டிகை சந்தோஷமாய் நடந்ததா!

கல்:—கங்கா ஸ்நானமும் ஆயிற்று; கூட துலாக்காவேரி ஸ்நானமும் ஆயிற்று. இதுதான் நீ தீபாவளிக்கு எடுத்த புடவையா!

சுமதி:—தீபாவளிக்கு மறுநாள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது இது தீபாவளி புடவையா என்று கேட்கவே வேண்டாமே. தீபாவளி கழிந்தவுடனே எந்த கல்யாணமோ, திருவிழாவோ, கூட்டமோ, கிளப்போ, எங்கு யாரைப் பார்த்தாலும் தீபாவளி புடவையுடன் தரிசனம் காணலாம். இங்குள்ளவர்கள் எல்லோரும் தீபாவளி புடவைதான் கட்டியிருக்கிறார்கள்.

மங்:—கட்டியிருக்கிறீர்கள் வாஸ்தவந்தான். இத்தனை பேரும் கதர் சேலை கட்டியிருந்தால் எத்தனை அழகாயிருக்கும். மகாத்மா பிறந்த நாளுக்கு வாங்காதவர்கள் இதற்காவது வாங்கியிருக்கக்கூடாதா!

இந்துமதி:—என்மேல் வஞ்சனையில்லை. நான் சுத்த கதர் வாங்குவதற்குத்தான் காதி வஸ்திராலயத்திற்கும், நிலையத்திற்கும் போய் பார்த்தேன். ஒன்பது கஜத்தில் ஒரு புடவையாவது மெல்லியதாகக்கிடைக்கவில்லை. எல்லாம் கோணிகோணியாயிருக்கிறது. உன்னைப்போல் பழக்கப்பட்டவர்களுக்கே கட்டமுடியாது. நாங்கள் எப்படி கட்டுவோம். நல்லமாதிரியாய் மெல்லியதாகப் போட்டுக்கொடுத்தால் வாங்கலாம்.

மங்:—இந்து! நீ இம்மாதிரி புகார் செய்வது அழகாகவே இல்லை. எல்லோரும் கட்டுப்பாடாக கதரையே கட்டுவது என்று ஒரு விருதம் எடுத்துக்கொண்டு உடுத்தி வந்தால் கதர் கிடைக்கவில்லை என்கிற புகார் வருமா! எந்த தொழிலுக்கும் ஆதரிப்பு நிறைய இருந்தால் தான் தொழிலில் விருத்தி கிடைக்கும். உதாரணத்திற்கு ஒன்று பாரு. இடியாப்பம் சுட்டு விற்கும் பாட்டிக்குக்கூட நிறைய பேர் வந்து வாங்குவதாயிருந்தால் கூட கால்படி அரிசி போடுவாள்; ஒருவருமே வாங்கவில்லை என்றால் செய்திருக்கும் சொல்பங்கூட வீணாகத்தானே போகும்.

பானு:—வாஸ்தவந்தான். இந்த வருஷம் தீபாவளிக்கு எத்தனையோ பேர் கதர் வாங்கியிருக்கிறார்கள். தெரியுமா!

கல்:—அடேயப்பா! தேசபக்தி திடீரென்று வெள்ளமாகக் கரை புரண்டுபோய் வாங்கினார்களோ! மற்ற துணிகள் எல்லாம் விலை அதிகமாகிவிட்டதால் அதிக விலை கொடுத்து வாங்குவதைக் கதர்தான் வாங்கலாமே என்று வாங்கினார்கள். போகட்டும். அவ்வளவாவது மனது வந்து வாங்கினார்களே அதுவே பெரிய சந்தோஷம். ஒருதரம் வாங்கி அனுபவப்பட்டுவிட்டால் பிறகு கதரையே வாங்கமாட்டார்களா!

காவேரி:—என்னவோம்மா! புருஷர்கள் அனேகம் பேர் கதர்தான் வாங்கியிருக்கிறார்கள். பெண்கள் என்னவோ வருஷா வருஷம் வாங்குவதைவிட அதிகமாகவே பட்டுப் புடவைகளும் நூல் புடவைகளும் வாங்கி யிருப்பதாகத் தெரிகிறது. எத்தனை பிரசாரமும் சத்யாக்ரகமும் செய்தால்தான் என்ன. அவரவர்கள் மனத்தில் தனியாக ஒரு உணர்ச்சியும் தேசபக்தியும் பிறக்காதவரையில் உபயோகமே இல்லை. வீட்டுக்கு ஒருவர் வாங்குவது என்றால்கூட போதும். மீனாக்ஷி வீட்டில் ஒரு வேடிக்கை நடந்ததாமே தெரியுமா!

மங்:—வேடிக்கையா! என்ன சமாச்சாரம் ஒன்றும் தெரியாதே!

காவே:—மாப்பிள்ளை தலை தீபாவளிக்குவந்தானும். அவன் தேசபக்தி உள்ளவன். அவன் குடும்பமே தேசத்திற்காகப் பாடுபடுகிறது. அவனுக்குக் கதர் வாங்காது பெரிய தடபுடல் வேஷ்டி வாங்கிவைத்திருந்தார்களாம். அவன் தன் மனைவிக்கு கதர் சேலை வாங்கிவந்தானும். கங்கா ஸ்நானம் ஆனபிறகு வேஷ்டிபுடவை ஒதியிடும் சமயம் மணமகன் மணமகள் இருவருக்கும் முகம் கறுத்துவிட்டதாம். பெண்ணின் தகப்பனுருக்கு கோபம் தாண்டவமாடியதாம். பெண் கதரைத் தொடவே மாட்டேன் என்ருளாம். பிள்ளை மாமனுருக்கே தட்டோடு திருப்பிக் கொடுத்துவிட்டு நமஸ்காரம் செய்தானும். வீடு ஒரே ரகளையாம்.

மங்:—பேஷ்! தீபாவ்ளி பெரிய அமளியாகிவிட்டதா! பிறகாவது கதர் வாங்கினர்களா! இல்லையா!

காவே:—இல்லாமலா! அப்போதே காதி வஸ்திராலயத்திற்கு ஒடி ஸ்பெஷலாகத் திறக்கச்செய்து மாப்பிள்ளைக்கு இஷ்டமானபடி கதர் வாங்கினர்களாம். 'பெண் அந்த புடவையை உடுத்தினல்தான் நான் இங்கிருப்பேன்; இல்லாவிட்டால் ரயிலேறுவேன்' என்ருனும். உடனே உடுத்திக்கொண்டுவந்தாளாம்.

மங்:—இதோ பாருங்கள். நாம் எல்லோரும் பிழைத்துக் கிடந்தால் அடுத்தவருஷம் தீபாவளிக்கு மூன்று மாதம் முன்னதாகவே நமக்குப் பிடித்தமானமாதிரிகளில் துணிகள் அனுப்பி அதேபோல் சுத்த கதரில் சேலைகள்போடும்படி ஆர்டர் செய்துவிடுவோம். சாவகாசமாக அவர்களும் செய்து அனுப்பமுடியும். முற்றிலும் கதர் தீபாவளியாகக்கொண்டாடிவிடலாம். என்ன! நம் சங்கத்திலும் பிரசாரம் செய்து விற்பனைக்கும் ஏற்பாடு செய்யலாம்.

கல்:—என்? அடுத்த வருஷம் வரையில் போவானேன். பொங்கல் புதுநாளன்று எத்தனை பேர்கள் புது உடையணிகிருர்கள். அவர்களெல்லாம் கதராகவே வாங்கி உடுக்கும் படிக்குச் செய்யக்கூடாதா! கார்த்திகைக்குச் சிலர் புதிது உடுக்கிருர்கள். அதற்குக் கதர் வாங்கக்கூடாதா? வெறும் நாளில் வாங்கி உடுக்கும் புடவையை ஒரு பண்டிகைநாளில் உடுத்தால் எத்தனை சந்தோஷமாயும் ஆனந்தமாயும் இருக்குமல்லவா! கூடுமானவரையில் இனி வாங்குவதை எல்லாம் கதராகவே வாங்கவேண்டிய முயற்சி செய்யவேண்டும்.

பானு:—என்னமோம்மா! இந்த தரம் ஏமாந்துவிட்டது. இனிமேல் ஏமாருது பார்த்துக்கொள்ளலாம். தீபாவளிக்கு யார் யார் என்ன பக்ஷணங்கள் செய்தீர்கள்?

மங்:—என் சிநேகிதை (ஸ்ரீமதி R. ஜயலக்ஷ்மி, ராஜமஹேந்திரபுரம்) ஒரு புதிய பக்ஷணத்தைப்பற்றி எழுதினுள். அதை தீபாவளிக்கேசெய்து பார்த்துவிட்டேன்.

இந்:—உப்பா? தித்திப்பா?

மங்:—தித்திப்புதான். வெகுநன்ருயிருந்தது. பிறகுகூட ஒரு விருந்துக்கு செய்தேன்.

பானு:—எங்களுக்கும் சொல்லக்கூடாதா? நாங்களும் செய்து தின்று சந்தோஷப்படுகிறேம்.

மங்:—செய்வதற்கு வெகு சுலபமானது. செலவும் குறைவு. ருசியும் அதிகம். அதற்குவேண்டிய சாமான்கள் கடலைபருப்பு, பூரா சர்க்கரை, நெய், ஏலக்காய், பச்சை கற்பூரம், குங்குமப் பூ, முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு இவ்வளவுதான்.

## உசிலி லாடு

கடலைப் பருப்பை ஒரு மணி நேரம் ஊறவைத்துக்கொள்வது. பிறகு ஜலத்தை வடித்துவிட்டு கல்லுரலில் கொஞ்சம் நறநறப்பாக ரவைபோல் அறைத்துக்கொள்வது.

வாணலியில் நெய்யைவைத்து இந்த அறைத்த விழுதைப்போட்டு நன்ருக மணம் வரும் வரையில் வறுப்பது. வாசனையும் பதமும் கூடி வந்ததும் இறக்கிவிடுவது. பருப்புக்கு திட்டமான பூராசர்க்கரையை வறுத்த மாவு ஆறினதும் அதில் சேர்ப்பது துண்டுதுண்டாகநறுக்கிவறுத்துள்ள முந்திரி, பாதாம், ஸாரப்பருப்பு, திராக்ஷை இவைகளையும் அதோடு சேர்ப்பது. ஏலக்காய் பொடியும் சேர்ப்பது.குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம் இழைத்துச் சேர்ப்பது எல்லாவற்றையும் ஒரு தாம்பாளத்தில் போட்டு கையினுல் நன்ருகக் கலந்து ஒன்றுகூட்டித் தேய்ப்பது. பிறகு சிறிய எலுமிச்சம் பழத்து அளவு உருண்டைகள் செய்வது. இதுதான் வேலை. வெகு மணமாயிருக்கிறது.

சுமதி:—கேட்கும்போதேவாசனை வீசுகிறதுபோல்தோன்றி நாக்கிலும் ஜலம் ஊறுகிறது. புதிதாக ஒன்று செய்தால் எங்களுக்கு ஒரு லட்டாவது மாதிரிக்கு அனுப்பியிருக்கக் கூடாதா! சரி. உப்பு பலகாரம் எது?

மங்:—எப்போதும் இட்லிதான் நாங்கள் தீபாவளியன்று விடியற்காலை செய்வது வழக்கம். இந்த தரம் என் சிநேகிதை ஸ்ரீமதி ஸௌந்தரவல்லி "கம்புஅப்பம்" செய்யப்போவதாயும் என்னையும் அதையேசெய்யும் படியும் சொன்னுள். செய்து பார்த்தேன்; வெகு ருசியாயிருந்தது.

## கம்பு அப்பம்

அரை ஆழாக்கு அரிசி, அரை ஆழாக்கு உளுத்தம் பருப்பு, ஒரு ஆழாக்கு கம்பு அரிசி மூன்றையும் ஊற வைத்துக்கொள்வது. பிறகு அதற்குத் திட்டமான உப்பு, பச்சை மிளகாய், கொத்தமல்லி, இஞ்சி, கருவேப்பிலை, தேங்காய், பெருங்காயம் எல்லாவற்றையும் சேர்த்து ஊற வைத்தவைகளையும் போட்டு நன்ருக அறைத்துக்கொள்வது. வாணலியில் நெய்யைவைத்து அறைத்த மாவை அப்பம் குத்துவதுபோல் குத்துவது. கொஞ்சம் புளிப்புவேண்டியவர்களுக்கு தயிரு அல்லது எலுமிச்சம் பழம் சேர்த்துச் செய்தால் அதுவும் நன்ருயிருக்கிறது.

சுடச்சுடசெய்து சாப்பிடும்போது வெகு ருசியாயிருக்கிறது. பின்மாலை வேளைக்கு பலே ஜோராயிருந்தது. டிப்பனுக்குக் கூட அடிக்கடி இது தான் செய்கிறேன். உடம்புக்கும் நல்லது. வாயிக்கும் ருசி. வயிற்றுக்கும் ஆங்கியிருக்கும்.

காவே:—நான் வீட்டுக்குப்போய் உடனே இவ்விரண்டும் செய்து விடுகிறேன். என் கணவருடன் இரண்டு சிநேகிதர்கள் சாயங்காலம் டீ சாப்பிட வருகிருர்களாம். ஆகையால் போய் வருகிறேன். வந்த இடத்தில் புதிய பக்ஷணங்கள் கிடைத்தன.

மங்:—இரு! இரு! குங்குமம் இட்டுக்கொண்டு போ!

இந்து:—என்று வந்தாலும் குங்குமம் இட்டுக்கொள்ளு என்கிருயே புதிதாக யாரேனும்வந்தால்கொடுக்க வேண்டும். தினம் வருகிறவர்களுக்குக்கூடவா கொடுக்கவேண்டும்?

மங்:—பேஷ்! நன்ருகச் சொல்கிருய். நம் வீட்டிற்குத் தினம் யார் வந்தாலும் எத்தனை பேர்வந்தாலும் நிறைய மஞ்சள் வைத்து வைத்திலை பாக்குக் கொடுத்துத்தான் அனுப்ப வேண்டும். அப்படி அதற்கு வசதியில்லையென்ருல் குங்குமம் கட்டாயம் கொடுத்துத்தான் அனுப்பவேண்டும். அதுதான் லக்ஷ்மீகரம். லக்ஷ்மிக்குச் சமமான சுமங்கலிகள் யார் வந்தாலும் நாம் அவர்களை லக்ஷ்மியாகவேபாவித்து லக்ஷ்மிக்குப் பூஜை செய்வதற்குச் சமானமாய் இதைச் செய்யவேண்டும். நாகரீகம் நிறைந்த சில பெரிய மனிதர்கள் வீட்டிற்குப் போனுல் குங்குமத்தைக் காண்பதே குதிரைக் கொம்பாயிருக்கிறது. அவர்கள் நெத்தியில் சில சமயம் டுலேட் போர்டு போட்டிருக்கிறது.

இதுவா அழகு. இந்துக்களுக்கு அதிலும் சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் இவ்விரண்டுந்தான் முக்யம், உடலும் உயிரும் போன்றதாகும் தெரியுமா? உனக்குக் கூடத்தான் சொல்கிறேன். யார் வந்தாலும் குங்குமமாவது குடுக்காமல் அனுப்பாதே. குங்குமம் வாங்கிக் கொள்வதும், கொடுப்பதும் இளப்பம் என்று சில மூடங்கள் நினைப்பதுபோல் நீயும் நினைக்காதே.

சும:—மங்களம்! நீ சொல்வது வாஸ்தவம். துலாமாதப் பிறப்பன்று துலாக்காவேரி ஸ்நானம் செய்தபின் அம்மனுக்கு நிவேத்யம் செய்துவிட்டு எல்லோருக்கும் நிறைய மஞ்சள் தட்டோடு வைத்து வெத்திலைபாக்குக் கொடுத்தேன். அதில் ஒரு அம்மாள் தட்டுடன் மஞ்சளும், வெத்திலைபாக்கும் கொடுத்தபோது, "என்னத்துக்கு மடியிலேயே வாங்கணும். கையிலே குடுங்களேன் போதும்" என்று நாணிக்கோணி உடம்பை நூறு வளைவு செய்துகொண்டு பிகுவு பண்ணினாள். எனக்கு ஒருமாதிரி எரிச்சல்வந்தது. 'அம்மா! இதில் ஒன்றும் இளப்பமில்லை. மடியில் மஞ்சள் வாங்கிக் கொள்ளு. உனக்கும் எனக்கும் மங்களகரமும் க்ஷேமமும் உண்டாகும் பிடி' என்றேன். சிரித்தபடியே வாங்கிக்கொண்டு போய்விட்டாள். இதற்குக்கூடவா வெட்கம்?

இந்:—அம்மா! அசட்டுத்தனமாய் நான் கேட்டது தப்புதான். புத்தி, புத்தி, புத்தி. போதுமா! குங்குமம் குடு. நான் போய்வருகிறேன். இனிமேல் உன்னுடைய அருமையான உபதேசப்படியே நான் செய்கிறேன். எனக்குத் தெரியாத விஷயத்தைச் சொல்லிக்கொடுத்ததற்காக உனக்கு நான் மிகவும் நன்றியுடன் வந்தனம் செய்கிறேன். போய்வருகிறேன்.

மங்:—இந்தாகுங்குமம், வெத்திலைபாக்கு...உம். மஞ்சளை எல்லாம் எடுத்துக்கொள்ளு...போய் வா!...

---

# விகட வெடிகள்

## "விருச்சிகம்"

வேலன்:—நானு ஊருக்குப் போப்பறேண்டா! நீ போகல்லே?

சீலன்:—போடா போ! நான் நேத்து ராத்திரி சொப்பனத்துலெ காலணா செலவு இல்லாமே காசிக்குக்கூட போய்வந்துட்டேனே....

* * * * *

வீட்டின்மீது கடன் கொடுத்திருந்த மனிதன் குடியிருப்பவனைப் பார்த்து "சார்! இந்தவீட்டிற்கு அதிகாரி எங்கே? பார்க்கவேணும்.

ராமன்:—ஹி...ஹிஹி!...என் சம்சாரந்தான்...அவ...ஊரில் இல்லை...

* * * * *

ரங்கன்:—டேய்! நான் பெரிய கவியாயிட்டேனே தெரியுமா!

திங்கன்:—தெரியாதுடா! என்ன கவி பாடியிருக்கே! பாடு கேக்கலாம்.

ரங்:—எங்க பக்கத்து வீட்டிலே சதா சண்டையும் கூச்சலும் போட்டு என்னெ வாசிக்க விடாதே தொந்தரவு பண்ணினு. பாத்தேன்; ஒடனே உரத்த குரல்லே "வாயை மூடுடா! முட்டாளே! பாடத்தைப் படிக்கணும் பரீக்ஷைக்குப் போகணும். வாயை மூடுடா! முட்டாளே" என்று பாடினேன். அடுத்த நிமிஷமே அவாத்துலே சண்டெ நின்னுபோச்சு. அவாரெண்டுபேரும் எங்கப்பா அம்மாவோடே ஏதோ பேசறாப்பலே அப்டீ தெரிஞ்சுது. ஆனுல், நான் என் உள்கதவே திறக்கவே இல்லை. அப்படியே தூங்கினவன் விடியற்காலேதான் விழிச்சேன்.

காலைக்கதிரவன் உதயமாகி உலக இருளைப் போக்கி ஆனந்தப் பெருக்கை மக்களிடை உண்டாக்கினான். புள்ளினங்கள் ஆரவாரத்துடன் பாடிப் பறந்தன. எங்கும் கலகலப்பான இன்பம் உண்டாகியது. பசுக்களை கன்றுகளுடன் ஓட்டிக்கொண்டு பால் காரர்கள் வீதியில் ஆனந்தமாகப் புறப்பட்டார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கிருகலக்ஷ்மிகள் தம் தம் வீட்டுவாசலில் மங்களகரமாக கோலமிட்டுக் களிக்கின்றார்கள். முகத்தில் அழகாயும் கம்பீரமாயும் பெரிய குங்குமப் பொட்டணிந்து பார்ப்பதற்குச் சுறுசுறுப்பா யுள்ள சில பெண்கள் காய்கறிகள், கீரை வகைகள், தயிர், பால் முதலியன விற்றுவரும் காக்ஷி தெருவுக்கு அலங்காரம் செய்தது போலிருந்தது.

உலகமே கண்விழித்தெழுந்தது; ஆனால் நித்யாமட்டும் கண் ணைத்திறக்கவே இல்லை. பிரண்டைப்பாட்டி தன் காரியமுண்டு, தானுண்டு என்று இருக்கும் வழக்கம்போல் இருந்தாளேயன்றி 'நித்யா ஏன் இன்னும் எழுந்துவரவில்லை' என்று நினைக்கக்கூடவில்லை.

வேலைக்காரிமட்டும் 'உதயத்திற்கே எழுந்துவரும் எஜமானி யம்மாள் ஏன் இன்னும் வரவில்லை?' என்று தனக்குள் எண்ணினாள். பிறகு மனது தாங்காமையினால் சமையல்காரனைக் கேட்டாள். அவனும் தனக்குத் தெரியாதென்றும் தானும் ஏன் வரவில்லையென்று எதிர்பார்ப்பதாயும் சொன்னான்.

வேலைக்காரப் பொன்னி இயற்கையிலேயே நல்ல உத்தம குணமும் தயாள மனமும் உடையவளாகையால் நித்யாவினிடம் அன்பும், பச்சாத்தாபமும் கொண்டுள்ளவள். ஆதலால் அவள் மனத்தில் கலக்கம் உண்டாகியது. பிரண்டைபாட்டியிடம் சென்று "ஏன் பெரியம்மா! சின்னம்மா ஏன் இன்னும் எழுந்துவல்லே" என்று கேட்டாள்.

விச்வரூபங் கொண்டவள்போல் தன் ஸ்வஸ்வரூபத்தை எடுத் துக்கொண்டு, "ஆமாண்டீ! சின்னம்மாள் தொரஸானீ! அவளை ஏன் வரவில்லை என்று கேட்டபடி தினம் நான் உதயராகம் பாடி எழுப்ப வேறு போகவேண்டுமாக்கும். அந்தம்மாள் பரம வேதாந்தி, வைதீ கப்பழம், இரவு நெடுநேரம் பட்டினத்தார் பாடலையும், பகவத் கீதையையும் படித்துக்கொண்டிருந்திருப்பார்கள். காலையில்பொழுது விடிவதுகூட தெரியாது மூதேவிபோல் தூங்குகிறாள். என்னம்மா! செத்த ஸ்ரீதேவியின் கால்தூசிக்கு இந்த மூதேவி வருவாளா! என் னமோ, விதிப்பழத்தை விலைகொடுத்து வாங்குவதுபோல் இந்தப் பீடையை வாங்கிவிட்டுத் தவிக்கிறான். அவனுக்கு கடுகளவு சுக மாவது உண்டா! கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் செய்தும் பிரம்மச்சாரி என்கிற பழமொழி அவனுக்குத்தான் சரியாகிவிட்டது" என்று தன் போக்காக அடுக்கிக்கொண்டே போனாள்.

இதுகேட்ட பொன்னிக்கு ஆத்திரமே உண்டாகியது. "நான் இன்னு கேட்டேன். நீ இன்னு சொல்றேம்மா! ஏன் எயுந்துவல்லே போய் பாரேன்" என்ருள்.

பிரண்டைபாட்டி ஆவேசத்துடன், "ஆமாண்டீ! உனக்கு வந்துள்ள கொழுப்பு கணக்கில்லே. உன்னையும் கைக்குள் போட்டுக் கொண்டுவிட்டாள்போல் இருக்கிறது. அதனுல்தான் இத்தனை குண்டுதைரியமாய்ப் பேசுகிருய். அந்த சிறுக்கியை நான் எழுப்ப வேண்டும். என் தலையெழுத்து, என் கர்மம். நான் வாழ்ந்த சவரணையும், நான் இப்போதிருக்கும் பரிபவமும் அந்த கடவுளுக்குத்தான் வெளிச்சம். அந்தகாலத்திலே அந்த புலிக்குவாக்கப்பட்டு நான் நடுங்கி செத்ததுபோல் இவளுக்கு எதுவாவது கஷ்டமுண்டா! பொன்னீ! கல்லாட்டும் நிக்கிருய். கேட்டதுக்குப் பதில் சொல்லேண்டீ! என் பொறுமையை நான் சொல்லக்கூடாது. என் புருஷன் எப்படித் தான் இருப்பார் தெரியுமா! வயசு சின்னது என்று சொல்வார்கள். ஆனுல் 45 வயசு கிழம்போலத்தானிருக்கும். குரூபி என்ருல் சொல்லமுடியாது. காடியைப்போலவேதானிருக்கும். அந்த ஸ்வரூபத்துக்கு வரும் கோபமும் தாபமும் அப்பப்பா! சிம்மந்தான். அத்தகை யமனிடம் நான் அடிக்கு அடிபட்டேன். ஆக்கினைக்கி உட்பட்டேன். என் பிள்ளை அப்படி ஏதாவது குரூபியாயிருக்கிருனு! மன்மதன்போல் அழகு வழிகிறது.

**50** வயசு ஆகியும்...ஐயையோ! தப்புந்தாறுமா உளறுகிறேனே! 40 வயது ஆகியும், 30 வயது யுவகன் மாதிரி இருக்கிருன். அவன் ஏதாவது இம்சைப்படுத்துகிருனு! இந்த ராணிக்காக மூத்தாளின் பெண்ணையும் வனவாசம்போல் அனுப்பிவிட்டான். அத்தகைய மனுஷனிடம் பேசுவதற்கே அவளுக்கு வேப்பங்காயா யிருக்கிறது.

நம்ப யாதவனைப்போல் உலகத்தில் கிடைக்குமா! இந்த புண்ணியவதியின் கலகத்தினுல் அவனுக்குக் கல்யாணமாகாது தவிக்கிருன். இரவெல்லாம் புத்தகப்படிப்பும் சன்யாசினிபோல்கிடப்பதும் விடிந்து இப்படித் தூங்குவதும் என்ன கண்ருவி!' என்று மூச்சு விடாமல் சொல்வதைக் கேட்க பொன்னிக்குக் கோபம் பற்றிக் கொண்டுவந்தது.

"போயேம்மா! சொம்மா குத்தமும் கொடுமையும் சொல்றது தானு ஒன் தொயில்? பச்ச கிளியாட்டம் பொண்ணே 50 வயசு கிழவன் கட்டிக்கிறது நாயம் பாரு. அந்த கெழ நாத்தத்தை சகிச்சிண்டு இந்த இம்செ யெல்லாம் பட்டுகினு அதுவாக்குள்ளே இருக்குது. இந்த காலத்து பொண்ணெப்போலே இருந்தா ஓடியானுலும்பூடும்; அல்லாங்காட்டிபோனு ஒன்னே ஆட்டியானுவெச்சுடும். நீ பொண்ணு பெருத பாவி...பேசறே பேச்சு" என்று தான் வேலைக்காரி என்பதையும் மறந்து பேசிவிட்டாள்.

அதே சமயம் ஹரிஹரன் ஊரிலிருந்து வந்து விட்டதை கார் சத்தம் அறிவித்ததுகண்டு பொன்னி போய்விட்டாள். கிழவி தத்திக் குதித்துத் தாண்டவமாடியவாறு மகனை எதிர்கொண்டழைக்கப் போனாள். ஹரிஹரன் வழக்கம்போல் 'என்னம்மா! யாராவது வந்தார்களா! எந்த கறவைமாடாவது கிடைத்ததா?' என்று கேட்டான்.

கிழவி:— அந்த மாதிரியான காலந்தான் மலையேறி விட்டதே டாப்பா! என்னமோ அழகு அழகு என்று அழகு ஒன்றைமட்டும் கண்டு ஆசைப்பட்டுக்கொண்டு வந்ததில் வீட்டிலிருந்த லக்ஷ்மீகரமே போய்விட்டது. விடியாத தரித்திரமும் மூதேவியுந்தான் வீட்டைச் சுற்றிக்கொண்டிருக்கிறது இனிமேல் விடிவு காலம் ஏது. இன்னும் ரெண்டு வருஷந்தான் உனக்கு உத்யோகம். அப்புறம் பென்ஷன்தான். வீடு இனி விடிகிறது ஏது. சுதாவும் வனவாசம் செய்கிறது. யாதவனும் நீ ஊருக்குப்போன நாள்முதல் வீட்டிற்கே வரவில்லை. அவளோ பரம வேதாந்தி. என் முகத்தைக்கூட பார்ப்பதில்லை. என்னுடைய பாழும் பொழுதும் கழிவதில்லை. பொழுது விடிந்து எத்தனை நாழிகையாயிற்று பாரு. நீ ஊரிலில்லை என்றால் குண்டு தைரியந்தான். இன்னும் அவளுடைய தாமரைக் கண்கள் மலரவில்லை. மூதேவிபோல் தூங்கினால் வீட்டிற்கு யார் வருவார்கள். என்னதான் நல்லது நடக்கும். இனி உன் தலையெழுத்து இவ்வளவு தான். என் கட்டையும் சாய்ந்துவிட்டால் பிறகு இது வீடாகவா இருக்கும். புலி, கரடி வாசம் செய்யும் காடாகவன்றோ மாறிவிடும்.

இதைக்கேட்ட ஹரிஹரனுக்கு ஆத்திரம் பொங்கியது. "என்ன! இன்னும் எழுந்திருக்கவில்லையா! இருக்கட்டும். எப்போது எழுந்திருக்கிறாளோ, எழுந்து வரட்டும். எழுப்பவே வேண்டாம்....தர்மு எங்கே?" என்று கண்கள் சிவக்கக் கூறினான்.

அதே சமயம் தர்மாம்பாள் அலறியடித்துக்கொண்டு "பாட்டீ! பாட்டீ! அப்பா! ஐயையோ! அம்மாவே வந்து பாரேன். வாயேன். ரத்தமா ஓட்றதே!"...என்று கத்தினாள்.

குழந்தையின் வார்த்தையில் ஒன்றுமே புரியாமல் ஓட்டமாக எல்லோரும் உள்ளே ஓடினார்கள். பிரண்டைப் பாட்டியும் கூடவே இறைக்க இறைக்க ஓடினாள். பொன்னியும் சமையல்காரனும் கூட ஓடி வந்தார்கள். நித்யா தன் நினைவே அற்று ரத்தத்தில் கிடக்கிறாள். ரத்தம் சேலையில் தோய்ந்துபோயிருந்தது கண்டு எல்லோரும் திடுக்கிட்டு அலறினார்கள்.

"ஐயையோ! இதென்ன கோரம்! கொலையா!...கொலை! கொலை!" என்று ஹரிஹரன் தன்னையறியாது வாய்விட்டுக்கத்துகிறானேயன்றி அருகில் சென்று நித்யாவைத் தூக்கவோ அவளுக்குச் சிகிச்சை செய்யவோதெரியவில்லை. பொன்னியின் குடல்கொதித்தது. "ஐயையோ! என் ராசாத்தியம்மாளே யார் கொண்ணுப்புட்டாங்க? என் ராசாத்தியம்மாளுக்கு இன்னா ஆபத்துவந்திடுச்சு?" என்று

அலறியவாறு நித்யாவைத் தூக்கித் தன் மடியில் போட்டுக் கொண்டு கையில் பிச்சுவாக் கத்தியினால் குத்தியிருப்பதைக் கண்டு கதறினாள்.

ஒரு க்ஷண நேரம் எல்லோருக்கும் ஒன்றுமே தோன்றாமல் ப்ரமை பிடித்தது. அடுத்த வினாடியே ஹரிஹரன் இரும்புப் பெட்டி திறந்திருப்பதையும் அதிலிருந்த சொத்துக்கள் களவுபோயிருந்ததையும் கண்டு "அம்மா! களவு! கொலை...எல்லாம் நடந்திருக்கிறது" என்று ஒரு கர்ஜனை செய்தான்.

தான் ஒரு பெரிய டெபுட்டி கலெக்டர், தன் வீட்டிலேயே கொலை, களவு என்று கத்தினால் சிரிப்பார்களே என்று தோன்றும் போது வெட்கம் பாதித்தது. இதற்குள் தர்மாம்பாள் சிறுமியாயினும் தன் தாயாருக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி நித்யாவினருகில் நின்று கோவெனக் கதறி யழவாரம்பித்தாள்.

சமையல்காரன் தைரியமாக ஜலத்தைக் கொண்டுவந்து பொன்னியின் கையில் கொடுத்து நித்யாவுக்கு முகத்தில் தெளிக்கச் செய்தான். நித்யாவுக்கு உள்ளுக்குள் சிறிது பிரக்ஞை இருக்கிறதேயன்றி அவள் இதயத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியும் கையில் உண்டாகிய கத்தி காயத்தின் விபரீதத்திலும் மிகவும் பலவீனமாகி சவம் போல் கிடந்தாள்.

யாதவ் ஓடிப்போன உடனே கூச்சலிட்டவாறு விழுந்தவள் வெகு நேரம் சென்று கண்விழித்துப் பார்க்கும்போது களைப்பும், கிலியும், பயமும் ஒன்றுகூடி அவளை மிகவும் கேவலமான நிலைமையிலாழ்த்தியது. "அம்மா! அம்மா!" என்று பல குரல்கள் கூவினாள். மருமகளிடம் மிகவும் அனுகூலமாயிருக்கும் மாமியாராகவிருந்தாலே அவள் படுத்திருந்த இடத்திற்கு இவள் கூப்பிட்டது கேட்காது. பிரண்டைபாட்டிவீதிப்பக்கமுள்ள வராண்டாவில் ஜம்மென்று படுத்திருக்கும்போது இவள் குரல் எப்படிக் கேட்கும்?

அதோடு பலவீனத்தினால் ஹீனஸ்வரத்துடன் கிணற்றிலிருந்து கூப்பிடுவதுபோல் கூப்பிட்டது காதில் விழவே இல்லை. வேலைக்காரர்களுக்கும் காதில் படவில்லை. "தர்மாம்பா! தர்மாம்பா" என்று கத்திப் பார்த்தாள். அப்போதும் பதிலில்லை. தாகம் நாக்கை வரட்டியது. மெல்ல எழுந்திருக்க முயன்றதில் மீண்டும் கீழே விழுந்தாள். தாகம், பயம், திகில், யாதவனா இப்படிச்செய்தான் என்கிற அதிர்ச்சி, கத்திக்குத்தின் வலி முதலிய எல்லாம் ஒன்றுகூடி அவளை மறுபடியும் மயக்கத்திலாழ்த்தியது.

பொன்னியின் சைத்யோபசாரத்தினால் உள்ளடங்கியிருந்த நினைவு கொஞ்சம் தலைதூக்க ஆரம்பித்தது. அதே சமயம் பிரண்டை பாட்டி உரத்த குரலில் 'அப்பா, ஹரிஹரா! நமக்கு ஏதோ போதாக் காலம் இருந்ததனால்தான் இந்த மூதேவியைக் கொண்டுவந்து சந்தி சிரிக்கிறோம். பட்டதெல்லாம் போதாதென்று இதென்ன கூத்தோ

எனக்குத் தெரியவில்லை. மாமியாரே குத்திக் கொலைசெய்ய எண்ணி னள் என்றும், கட்டிய கணவனே சாகவடிக்கத் துணிந்தான் என்றும் கூட இந்த ராக்ஷஸி சொல்லுவாள். நீ உடனே போய் போலீஸில் விஷயத்தை அறிவித்து அழைத்துவா! கூட டாக்டரையும் அழைத்துவா!'' என்றாள்.

ஹரி:—நான்கூட அதைத்தான் யோசிக்கிறேன். இதோ போகி றேன். உடனே போலீஸ் வராது நாம் எதுவும் செய்யக்கூடாது. இரும்பு பெட்டியே காலியாயிருக்கிறது பாரு. என் உடம்பே பத்தி எரிகிறது. இந்த மனுஷி இதில் எப்படி கலந்துகொண்டு அந்த கத் திக்குத்து வாங்கினாளோ தெரியவில்லையே, அம்மா! நீ இப்படியே ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளு. நான் போலீஸுக்கு நேரில் போய் வருகிறேன்'' என்று கூறியவாறு கிளம்பினான்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்த நித்யாவின் இதயம் பின் னும் துடிக்கின்றது. அவளால் அதைத் தடுக்கமுடியாதுபோயிற்று. மெல்லதன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு;''வேண்டாம்; வேண் டாம்! போலீஸுக்குப் போகவேண்டாம்'' என்று கத்தினாள்.

இதைக்கேட்டதும் எல்லோருக்கும் கூறத்திறமற்ற ஆச்சரிய மும் பிரமிப்பும் உண்டாகியது. "என்ன! என்ன! போலீஸுக்குப் போகவேண்டாமா! இதென்ன வேடிக்கை'' என்று ஹரிஹரன் அலறியதுபோல் கூறினான்.

நித்யாவினால் பேசவேமுடியவில்லை. எனினும் அச்சமயம் அவள் வரண்ட இதயத்தில் எழுந்த உணர்ச்சியின் வேகத்தினால் துடிதுடித்தவளாய் "ஆம்....வேடிக்கைதான். கடவுளின் சோதனை நிறைந்த வேடிக்கை. தாம் தாம் செய்யும் துர்க்ருத்யங்களின் ப்ரதி பிம்பம்போன்ற சாயா வேடிக்கை'' என்று சற்று ஆத்திரத்துடன் கூறினாள். ஹரிஹரனுக்குக் கோபம் பீறிக்கொண்டுவந்தது. "சீச்சீ! உன் வேதாந்தத்தைக்கொட்டி அளக்க இதுவா சமயம். கொலைசெய் யத்துணிந்த கள்ளன் வந்திருக்கிறான். களவு அபாரமாய் நடந்திருக் கிறது. போலீஸில் சொல்லவேண்டாமென்பதற்கு உனக்கென்ன அத்தனை துணிச்சல்?'' என்று மீண்டும் கர்சித்தான்.

நித்யா பிராணனைக் கையில் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்து ஹரிஹரனின் காலில் தடாரென்று விழுந்தாள். "நீங்கள் என்ன திட்டினாலும் சரி. என்னைக் கொலை செய்தாலும் சரி. இந்த விஷயம் இதோடு அமுங்கி விடவேண்டும். நாம் வணங்கும் குலதெய்வத்தின் மீது ஆணையாக நீங்கள் இதை வெளியிடக்கூடாது. வெளியிட்டால் பிறகு இந்த ஜென்மாவிலேயே தீராத ஆபத்தாகமுடியும்...ஹா!... ஐயோ...மயக்கமாக வருகிறதே...பொன்னீ! பிடித்துக்கொள்ளு'' என்று அயோமயமான நிலைமையில் கூறினாள்.

பொன்னி அப்படியே தூக்கிப் பிடித்துக்கொண்டு ஹரிஹரனை பரிதாபகரமாக நோக்கி "ஐயையோ! என்னமோபேல பாக்கராங்களே! டாக்டரே இட்டாங்களேன்...உசிரு பூடுச்சின்னு இன்னு பண்றது" என்று கதறினாள்.

பிரண்டைபாட்டியின் சந்தேகங்களும் ஆத்திரங்களும், பிரமாதமான அஸ்திவாரத்துடன் கிளம்பின. முகத்தையொருவாறு சுளித்துக்கொண்டு, "அடேய் ஹரிஹரா! இத்தனை பெரிய உத்யோகஞ் செய்து வாழும் உனக்கு இந்த ரகஸ்யம் இன்னும் புரியவில்லையா! ஐயையோ! குடிமுழுகிப்போச்சுடா! முழுகிப்போச்சு. இப்பதான் எனக்கு ஞாபகம்வருகிறது. நேற்று சாயங்காலம், அந்தத் திருட்டுப் பையன் தாமோதரன் தோட்டத்துப்பக்கம் வந்து இந்த புண்ணியவதியிடம் ரகஸியம் பேசிக்கொண்டிருந்ததை நம்ப யாதவனுடைய சினேகிதன் சோமு பார்த்தானும். அவன் என்னிடம் ராத்திரிதான் சொன்னான். நீதான் விடியற்காலை வந்துவிடுகிறாயே, உன்னிடம் சொல்லலாம் என்று எண்ணியிருந்தேன். அதற்குள் இத்தனை அலங்கோலமாகிவிட்டது. அந்த தடியன்தான் வந்து திருடிக்கொண்டு போனதோடு வேறு திருடன் வந்ததுபோல் நடித்துக் காட்டுவதற்காகக் கையில் ஒரு காயத்தையும் செய்துகொண்டு மாயாஜால நாடகம் நடிக்கிறான்டா! இது தெரியவில்லையா!" என்று கூறி லபோ திபோ என்று அபசகுனியைப்போல் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டாள்.

எரியும் அடுப்பில் எண்ணெயை ஊற்றியதுபோல் ஹரிஹரனுக்குப் பின்னும் கோபம் தீபோல் மூண்டது. "ஓகோ! தன்னுடைய திருட்டும் தன் தம்பியின் திருட்டும் வெளியாகாதிருக்கும்பொருட்டு செய்த சூழ்ச்சியா இது?...ஐயையோ! முழு மோசம் போய் விட்டதே! என்ன செய்வேன்? தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்கிக்கொண்ட பழமொழி எனக்கே சரியாகியதே....அந்தத் திருட்டுப் பயலை நான் ஒருபோதும் விடப்போவதேயில்லை. இதனால் எது வந்தாலும் வரட்டும். டேய் சுப்புக் குட்டி! உடனே போலீஸை அழைத்து வா! டேய் வீராசாமி! போய் டாக்டரை அழைத்து வா!" என்று ஹிரண்யனைவிடக் கோபத்துடன் உத்திரவிட்டான்.

இந்த வார்த்தைகள் நித்யாவின் காதில் விழவே இல்லை. அவள் மயக்கத்திலாழ்ந்தாள். சுப்புக்குட்டி முன்பொருநாள் நடந்த சம்பவத்திலிருந்து வேலைக்கே வராது நின்றுபோனான். அவனைப்போல் கெட்டிக்காரனும் சுறுசுறுப்புள்ளவனும் வேறு குமாஸ்தா அந்த ஊரில் கிடைக்காததால் மீண்டும் அவனுக்கே சொல்லியனுப்பி அவனிடம் மன்னிப்பும் ரகஸியத்தில் பெற்றுக்கொண்டு வேலையிலமர்த்தினன். அவன் தன் வேலையுண்டு, தானுண்டு என்கிற முறையில் வேலை செய்து வந்தான். நித்யாவிடம் காரியார்த்தமாகக் கூடப் பேசுவதில்லை. இன்று இத்தகைய விபரீதம் நடந்திருப்பதைக்

கண்டும், நித்யாவின் வார்த்தையைக் கேட்டும் அவனது மனது துடி துடித்தது. ஏதோ இதில் விசேஷமிருக்கின்றதனால்தான் போலீஸில் தெரியவேண்டாமென்று அவள் சொல்லுகிறாளென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவன் ஒரு குமாஸ்தாதானே எஜமானன் கட்டளைப்படிச் செய்யும் ஊழியன். ஆதலால் ஒரே ஓட்டமாகஓடினான்.

பொன்னிக்கோ "இதனால் என்ன விபரீதம் நேருமோ" என்கிற பயம் உள்ளூற உண்டாகி வதைத்தது. அதனால் அவள் தந்திரமாய் எழுந்து வீதிக்கு வந்து சுப்புக்குட்டியைக் கூப்பிட்டு "தே...சாமீ! சின்னம்மாவெபத்தி நமக்கு நல்லாதெரிஞ்சிருக்கச்சுலே அவுங்க இஷ்டத்துக்கு மாறா நீ எதுவும் செய்யாதே. மொதல்லேபோய் டாக்டரை இட்டாந்து காட்டு. அப்பறம் போலீஸ்காரனே பாக்க லாம். உசிரு பூட்டுதானா என்ன பண்றது?" என்றாள்.

வயதிலும் அனுபவத்திலும் பெரியவளான பொன்னியின் வார்த்தையின்படியே சுப்புக்குட்டி அவ்வூரிலுள்ள டாக்டரை அழைத்துக்கொண்டு ஓடி வந்தான்.

இதற்குள் மறுபடியும் நித்யாவுக்குச் சற்று தெளிவு உண்டா கியது; கண்ணைத் திறந்து பார்த்தாள். "பொன்னீ! தாகம்! தாகம்!" என்றாள். நித்யாவின் பக்கத்திலேயே நின்று அழுதுகொண்டி ருந்த தர்மாம்பாளைப் பார்த்து அவள் மனம் துடித்தது. தன் ஒரு கையை நீட்டி "கண்ணா! தர்மூ! இங்கே வா! ஏன் அழுகிறாயம்மா! நான் செத்துவிடுவேன் என்று பயமா! நானா சாவேன்! எனக்கா சாவு வரும்? உம். நான் கனவுகூடக் காணவேண்டாம். நான் சாகவேமாட்டேன். அழாதே! பொன்னீ! குழந்தையைச் சமா தானப்படுத்து"...என்றாள்.

கல்லுபோல் நிற்கும் ஹரிஹரனைப் பார்த்து...."இரும்புப் பெட் டியைப்பூட்டுங்கள்; நான் அடுத்த அறையில் படுக்கிறேன். இவ் வறையின் அலங்கோலத்தை மாற்றுங்கள். ஆண்டவன்மீது ஆணை யாக இந்த விஷயம் வெளிவரக்கூடாது. ஐயோ! மறுபடியும் மயக் கம் வருகிறதே!...டாக்டர் வருகிறாப்போலிருக்கிறது"...என்று கூறியவாறு ஒருவிதமான ஆவேசத்துடன் எழுந்து வந்து அடுத்த அறையில் படுத்து "பொன்னீ! கதவைச் சாத்து" என்றாள்.

அதேசமயம் டாக்டர் உள்ளே வந்தார். வரும் சப்தத்தைக் கேட்டவுடன் நித்யா தானாகவே முந்திக்கொண்டு, "டாக்டர்! பின் மாலை நாலு மணிக்கு சமையல்கட்டில் பாத்திரங்களை எலி உருட்டிய ஓசை கேட்டு அங்கு சென்று பார்த்தேன். வாழைப்பழத்தோல் சறுக்கி கீழே தடாரென்று விழுந்த வேகத்தில் பக்கத்தில் இருந்த கூரிய கத்தி எப்படியோ ஏசகுபிசகாய் கையில் ஆழமாகக் குத்தி விட்டது. பகவான் எப்படியோ எனக்கு துணிச்சலையும் சக்தி யையும் கொடுத்தார். கத்தியை வெடுக்கென்று பிடுங்கி எறிந்தேன்.

உடனே மயக்கமாகிவிட்டது. எல்லோரும் எழுந்துவந்து பார்த்து உங்களிடம் போவதற்குள் இத்தனை நாழியாகிவிட்டது...மயக்க மாயிருக்கிறது...என்று கூறி முடிக்குமுன் மயக்கம் வந்துவிட்டது.

இந்த சாகஸ வார்த்தைகளைக் கேட்ட எல்லோருக்கும் கூறத் திறமற்ற வியப்பு உண்டாகியது. டாக்டர் நித்யாவின் கையை பரீக்ஷை செய்து பார்த்தார். "அடாடாடா! இக் குத்து வேண்டு மென்று யாரோ வெகு ஆவேசத்துடன் வேகமாகக் குத்தியிருப்ப தாகவன்றோ தோன்றுகிறது. வீட்டில் வைத்து இந்த காயத்தைச் சிகிச்சை செய்யமுடியாது. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கள். கையில் சிறிய நரம்புகள் அறுந்துபோயிருக்கின்றன. அதோடு ஏராளமான ரத்தம் வெளியேறியிருப்பதால் மிகவும் ஜாக் கிரதையாகப் பார்க்கவேண்டும். அதனால்தான் மயக்கம் அடிக்கடி வருகிறது. ஏதோ ஒரு தைரியத்தினால் பேசுகிறார்களேயன்றி வேறில்லை. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லுங்கள். புறங் கையில் பலமான காயம் பட்டிருப்பதைப் பார்த்தால் அந்தம்மாள் சொல்வது சரியாகத் தோன்றவில்லை. இது ஏதோ வேறு விஷய மாகத்தானிருக்கவேண்டும்" என்றார்.

ஹரிஹரனுக்கோ, உண்மை இன்னதென்று தெரியவில்லை. அவள் ஏன் ஒளித்துச் சொல்கிறாள் என்றும் புரியவில்லையாதலால் விழிக்கிறான். டாக்டர் சொல்லும் கடிபுடியைப் பார்த்தால் ஆஸ்பத் திரியில் எது எப்படியாகுமோ என்ற பயமும் உண்டாகியது. எண்ணெயில் விழுந்த ஈயைப்போல் குழம்பியவாறு உடனே நித் யாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனான். கூடவே பொன் னியும் போனாள். எந்த ஜென்மாந்திரத்தில் எத்தகைய பாந்தவ்யம் இருந்ததோ, அதன்விட்ட குறை தொட்ட குறையைப்போல் பொன் னிக்கு நித்யாவினிடம் அளவுகடந்த பாசம் உண்டாகியது. நித்யா வின்பரிதாபம் அவள் உள்ளத்தைஉருக்கிக்கண்ணீரைப்பெருக்கியது.

நித்யாவோ கண் திறக்கவும் இல்லை. அவள் சவம்போல் கிடப் பதைக்காண யாருடைய இதயந்தான் துடிக்காது. தர்மாம்பாள் விம்மி விம்மி யழுவதைத் தேற்றுவாருமில்லை; ஆற்றுவாருமில்லை. பிரண்டைப்பாட்டி ப்ரமை பிடித்துக் கல்லாய்ச்சமைந்தாள். அவள் மூளையே கலங்கியதோ என்ற சந்தேகமும் உண்டாகியது. ஹரி ஹரன் முகத்தில் அசடு தட்டியதோடு பைத்தியம்போல் காணப் பட்டான். ஒருவிதத்திலும் நிலையாமல் மனங்குழம்பியது.

---

53-வது நாவல்

கருணாலயம்

ரூபா ஒன்று

அபூர்வமான நீதிகள் நிறைந்து, பலவர்ணங்களில் அச்சிடப் பட்ட 10 அழகிய படங்களுடன் கூடியது.

முதல் தினம் நித்யாவிடம் பேசிவிட்டுச் சென்ற தாமோதரன் அவ்வூரிலுள்ள ஒரு பாழும் சத்திரத்துத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். இருக்கையே கொள்ளவில்லை. சத்திரத்தில் பல சோதாக்கள் கும்பல்கூடி குடிப்பதும், பீடி பிடிப்பதும், தன்னை பாட்டுபாடிக் களிப்பதும் வம்பு பேசுவதும் காண இவனுக்குக் கட்டோடுபிடிக்கவில்லை. பேசாமல் தன் விதியை எண்ணி ஒருபுறம் படுத்திருந்தான்.

வயிற்றில் ஒன்றுமில்லை. பசியின் கொடுமையினலும் மனக் கலக்கத்தினலும் தூக்கமேபிடிக்காது புரளுகிறுன். தாயாரின் நிலைமை எப்படியிருக்கிறதோவென்று திகில் வாட்டுகிறது. எப்போது உதய மாகும், எப்போது நித்யாவீட்டிற்குப் போகலாம்'' என்று எண்ண மிட்டபடியே வெகு பிரயாசையுடன் இரவைக் கழித்தான்.

பொழுது விடிந்ததும் அவ்வூர் ஏரியில் ஸ்நானம் செய்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நித்யாவின் வீட்டிற்குப் போவதற்குத் தயாராகவிருந்தான். 5 மணிவண்டி வந்தபிறகுதானே போகவேண்டும் என்று மணி கணக்கைப் பார்த்துக்கொண்டே அவ்வூரிலுள்ள ஷண்முகநாதஸ்வாமி கோயிலுக்குச்சென்று பிர தக்ஷிணம் செய்துவிட்டு கோபுரவாசலில் உட்கார்ந்து தோத்திரப் பாட்டுக்கள் பாடிக்கொண்டிருந்தான்.

இன்னேரம் வண்டி வந்திருக்கும் மணியாகியிருக்கும் என்று எண்ணி நித்யாவின் வீட்டிற்குச் சென்றுன். 'ஸ்வாமீ! ஆண்டவனே! எங்க அக்காவை அனுப்பவேண்டுமே' என்று பிரார்த்தனை செய்த படியே நடந்தான்.

ஹரிஹரன் நித்யாவை ஆஸ்பத்திரியில்விட்டதும் பெரிய பெரிய டாக்டர்களெல்லாம் கையைப்பார்த்து மிகவும் பயந்துபோய் "இது நீங்கள் சொல்லுகிறபடி காயம் பட்டதல்ல. இது வேண்டுமென்று செய்திருப்பதாகத்தான் தெரிகிறது. வீட்டில் களவு ஏதாவது போயிருக்கிறதா! இந்த காயம் பட்டு சுமார் 5 மணி சாவகாசத் திற்குமேலாகி யிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ரத்தம் ஏராள மாகப் போய்விட்டதால் சரியானபடி ஆரோக்யமான சரீரத்தி லிருந்து ரத்தத்தை ஏற்றினல்தான் பிழைக்கமுடியும். இல்லாவிட் டால் சந்தேகந்தான்'' என்று சொன்னுர்கள்.

ஹரிஹரனுக்கு உண்மையில் திக்குமுக்காடிவிட்டது. நடந் திருக்கும் உண்மை எதுவும் அறியாது துடித்தது. தன் ரத்தத்தை ஏற்றும்படிக்கும், தான் கொடுப்பதாயும் சொன்னுன்.

இதுகேட்ட டாக்டர் தம்மையறியாமலேயே சிரித்துவிட்டார். "ஸார்! மன்னிக்கவேண்டும். உங்கள் ரத்தத்தை ஏற்றுவதாயின் நான்கூட என் ரத்தத்தைக் கொடுத்திருக்கலாம். உங்களுக்கு குறைந்

தது 55வயதாவது ஆயிருக்கும். 20 வயது பாலியரத்தத்திற்கும் கிழ ரத்தத்திற்கும் ஒட்டுமா! அது பிரயோசனமில்லே. வயதுக்குத்தக்க தாக, ஒத்துக்கொண்டு சுறுசுறுப்பாய் வேலே செய்வதாக இருக்க வேண்டும்" என்று கூறியதைக் கேட்டதும் ஹரிஹரன் முகத்தில் சாணியறைந்ததுபோலாயிற்று.

வெட்கத்தினுல் தலே கவிழ்ந்து முகம் சுருங்கியது. என்ன செய்வது என்கிற பெரிய குழப்பமுண்டாகித் தவிக்கும் சமயம் ஒரு யோசனே தோன்றியது. தன் மகன் யாதவனின் ரத்தம் இவளுக்குச் சரியாகவிருக்கலாம். ஆதலால் அவனே எங்கிருந்தாவது தேடிப் பிடித்து அழைத்துவந்து ரத்தத்தை ஏற்றிவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டு "சார்! இதோ வந்துவிட்டேன்" என்று கூறி நேரே வீட்டிற்குவந்தான்.

முகத்தில் ஒருபுறம் அசடு வழிகிறது. ஒருபுறம் ஆத்திரம் பொங்குகிறது. இந்நிலேமையில் வீட்டிற்குவந்து முன்பக்கத்து விசுப்பலகையில் உட்கார்ந்தான். இதற்குள் சூர்ப்பனகியின் அவதாரம்போன்ற நந்திக்கொடியம்மாள், "ஏண்டா! என்னடா சமாச்சாரம்? டாக்டர் என்னடா சொன்னுன்?" என்ருள்.

ஹரி:—ஆமா! பெருங்காயத்தை சொன்னுன். இதில் ஏதோ மோசம் கட்டாயம் இருக்கிறது என்றுதான் எல்லோரும் சந்தேகப் படுகிருர்கள். ரத்தமெல்லாம் போய்விட்டதாம். அளவுக்குக் குறைந்துவிட்டதனுல் உடனே யாரிடமிருந்தாவது ரத்தத்தை ஏற்றினுல்தான் மருந்து வேலே செய்யுமாம். நம்ப யாதவன் எங்கு தொலேந்தானே! ஆளேயே காணவில்லே. அவனேத் தேடி அழைத்துக் கொண்டு போகலாமென்றுதான் வந்தேன். எங்கு சென்றிருப்பான்" என்று கடுகடுத்த முகத்துடன் கூறினுன்.

அதேசமயம் நாம் முன் கூறியபடி தாமோதரன் பயந்து நடுங்கியபடியே அங்கு வந்து ஹரிஹரன் காலில் விழுந்து வணங்கியவாறு, "அத்திம்பேரே! அம்மா ரொம்ப ஆபத்தான நிலேமையில் கிடக்கிருள். அக்காவையும், உங்களேயும் பார்க்கவேண்டுமென்று கதறுகிருள். தயவுசெய்து நீங்கள் அக்காவை அழைத்துக்கொண்டு வரவேண்டும். இன்னேரமே அம்மாவின் பிராணன் இருக்கிறதோ இல்லேயோ அதுவேசந்தேகம்'என்று கள்ளங்கபடமற்றுக் கூறினுன்.

முதலில் காலில் விழுந்து வணங்கும்போது கவனிக்கவில்லே. இந்த வார்த்தைகளேக் கேட்டதும் தூணிலிருந்து வெளிக் கிளம்பிய சாக்ஷாத் நரஸிம்மாவதாரம்போல் சீறி எழுந்து தாமோதரனேப் பிடித்து "அல்பநாயே! துரோகியே! விஷப்பூச்சியே! அகப்பட்டுக் கொண்டாயா!"என்று தாறுமாறுமாகத் திட்டியபடியே காலாலும் கையாலும் உதைத்து தலேயைப் பிடித்து உலுக்கி சுவற்றில் முட்டி கண்ணுல் பார்க்கக்கூடாதவிதம் சித்திரவதை செய்துவிட்டான்.

'ஐயோ! ஐயோ!' என்று அலறுகிருன்; துடிக்கிருன். 'அக்கா! அக்கா!' என்று கதறினன். அக்காவின் அலங்கோலம் அந்தப் பேதைப் பையனுக்கு என்ன தெரியும்? உடம்பெல்லாம் பட்டைப் பட்டையாய் தோலுரிந்துவிட்டது. "ஐயோ! இதென்ன அக்ரமம்! இதென்ன அநியாயம்? ஏன் இப்படி என்னைக்கொலை செய்கிறீர்கள்? இங்கு கேட்பாரில்லையா! ஐயையோ! உசிர்போகிறதே" என்று கத்திக் கத்தி தொண்டை கிழிந்ததுதான் பலனுகியது.

"திருட்டுப்பயலே! என் குடும்பத்தை அடியோடு குட்டிச்சுவ ராக்கவா நீ வந்தாய்? என் சுதாவின் பரிசுத்தமான மனத்தைச் சிதறவடித்த சண்டாளா! இரவு ரகஸியமாக நீ திருடியது ஒரு வருக்கும் தெரியாதென்று நினைத்தாயா! மரியாதையாய் ஒப்புக் கொள்கிருயா அல்லது இப்போதே உன்னைப் போலீஸில்கொண்டு உட்காரவைக்கட்டுமா! உன்னை நான் சும்மாவிடப்போவதில்லை. திருட்டுப்பயலே! இனி நீ தப்பி ஓடமுடியாது" என்று கூறி மீண்டும் அடி அடி என்று அடித்தான்.

தாமோதரனின் உயிர் துடிக்கிறது. தான் இரவு திருடியதாகச் சொல்லிய வார்த்தைகளை அவனுல் பொறுக்கவேமுடியவில்லை. அவன் பொறுத்துப் பொறுத்துவந்த பொறுமை எல்லாம் காற்ருய்பறந்தது. உடம்பில் பட்டுள்ள அடியின் பாதையைக்கூட மறந்தான். பல்லைக் கடித்துக்கொண்டு "டேய்! கிழப்பதரே! நானுடா உன் குடும்பத் தைக் குட்டிச்சுவராக்கியது? நீயல்லவா என்னருமை நித்யாவை மணமென்கிற பெயரால் மங்கச்செய்ததோடு எங்கள் குடும்பத் தையே சந்தியில் பிச்சை எடுக்கவிட்டாய். உன் பவிஷுக்கு வாய் ஒருகேடா!" என்று திட்டியவாறு ஹரிஹரனின் கன்னத்தில் பட் டார்! பட்டார்!" என்று இரண்டறை விட்டுவிட்டு ஒரு நிமிஷங்கூட தாமதியாமல் ஓட்டம்பிடிக்க முயன்ருன்.

அச்சமயம் ஆஸ்பத்திரியிலிருந்து அவசரமாக வந்த ஒரு ஆள், "சார்! நித்யா அம்மாளுக்கு டாக்டர் சொல்லியபடி ரத்தம் ஏற்ரு விட்டால் உயிர் போய்விடுமாம். உடனே வரச்சொல்லுகிருர். நாடி விழுந்துகொண்டே வருகிறதாம்" என்ருன்.

இந்த வார்த்தையைக் கேட்ட தாமோதரனுக்குத் தீயை மிதித்ததுபோலிருந்து துள்ளினன். "என்ன! நித்யாவுக்கு உயிர் போகிறதா! ஐயையோ! என் நித்யா உள்ளே இல்லையா! என்ன ஆபத்து ஐயா! சொல்லுமே" என்று வந்தவனின் தோளைப் பிடித்துக் கொண்டு உலுக்கியபடியே கேட்டான்.

வந்தவனுக்கு இந்த வீட்டு ரகளைகள் என்ன தெரியும். "கையில் ஏதோ பெரிய கத்திக்குத்து காயம் பட்டு நினைவு தப்பியிருக்கிறது. பிழைப்பது துர்லபந்தான்" என்று அறை குறையாய் சொல்லியதைக் கேட்டு மனம்பொருத தாமோதரனுக்கு உயிர் பின்னும் ஊசலாடி

யது. ஊர் புதிதாகவிருப்பினும் மனத்திலுள்ள அன்பினுலும் ஆத்திரத்திலுைம் கண்ணு மண்தெரியாது ஒரே ஓட்டமாக ஓடினுன்.

திருடனுக்குத் தேள் கொட்டினுல் எப்படி இருக்குமோ அதே நிலைமைதான் ஹரிஹரானுக்கு உண்டாகியது பிரண்டைப் பாட்டிக்கு கண்கள் பிதுங்கிவிடும் போலாய்விட்டன; அப்படி விழிக்கிருள்.

வீதியில் போவோர் வருவோர்களைக் கேட்டுக்கொண்டே ஆஸ்பத்திரிக்குச் சென்ருன். படித்த மனிதனைகையால் ஆங்கிலத்தில் பேசி ஒரு டாக்டரிடம் விசாரித்து நித்யா இருக்கும் இடத்திற்கு ஓடினுன். அப்போது அங்கிருந்த டாக்டர் "ஐயோ! என்ன செய்வது! நாடி இறங்கிக்கொண்டே போகிறதே! போன ஆசாமி இன்னும் திரும்பி வரவில்லையே! உயிர் போய்விட்டால் என்ன செய்வது? என்று மற்ருெரு டாக்டரிடம் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டவாறு வந்த தாமோதரன் நித்யாவின் அலங்கோலப் படுக்கையைப் பார்த்து மனம் சகிக்காது கதறிவிட்டான்.

"சார்! சார்! இதோ நான் தயாராக வந்திருக்கிறேன். க்ஷண நேரங்கூடத் தாமதிக்காமல் உடனே என் ரத்தத்தை ஏற்றுங்கள். ஏற்றுங்கள். டாக்டர்! என்னருமை நித்யாவுக்கு உயிர்ப் பயமில்லையே. அவளுக்கு உயிர் பிச்சை கொடுங்கள்" என்று கெஞ்சினுன். கண்ணீர் விட்டுக் கதறுகிருன்.

இதைக் கண்ட டாக்டருக்கு இவனைப்பற்றிச் சிறிது சந்தேகமுண்டாகியது. கிழவனுக்கும் இவளுக்கும் பொருத்தமே இல்லாதிருக்கிறதால் ஒருக்கால் இவன்...என்று சந்தேகித்தபடியே ஒரு ஸெகண்டு தாமோதரனின் முகத்தை நோக்கினுன்.

தாமோதரனின் மனத்துடிப்பும் ஆவேசமும் உச்சஸ்தாயியை அடைந்துவிட்டன. டாக்டர் தன்னை யாரோ பிச்சைக்காரன் என்று பார்ப்பதாகவும் சந்தேகிப்பதாகவும் உணர்ந்தான். "டாக்டர் சார்! நான் யாரோ பிச்சைக்காரன் என் ரத்தம் உதவுமா என்று சந்தேகிக்கின்றீர்களா! சார்! நான் நீங்கள் நினைக்கிறபடி பிச்சைக்காரன்தான். தரித்திரன்தான். ஆனுல் என்னருமை நித்யாவின் ரத்தமும் என் ரத்தமும் ஒரே ரத்தம்; வேறல்ல. அவள் என்னுடன்பிறந்த சகோதரி சார்! என் தாயின் வயிற்றில் பிறந்த உத்தமி. எங்கள் ஏழ்மை நிலைமையின் பரிபவத்தால் இந்த அருமைக்கிளியை அந்தக் கிழட்டுப்பிணத்திற்குத் தள்ளி அவளையும் பாழாக்கி நாங்களும் நாசமாகிவிட்டோம்...

ஐயா! அந்தப் பாழுங்கதை எல்லாம் இப்போது எதற்கு? ஆகட்டும்... ஆகட்டும். உங்கள் வேலையாகட்டும். எந்தச் சண்டாளப் பாவி இந்த இளந்தளிர் போன்ற கையைக் குத்தினுனே, அந்த துரோகியின் கையைக் கடவுள் கண்டதுண்டமாகச் செய்து என் ஆத்திரத்தைத் தீர்க்கவேண்டும்" என்று இதயத்தைப் பீறிக் கொண்டுவரும் உணர்ச்சியுடன் சொன்னுன்.

இதைக்கேட்ட டாக்டருக்கே பரிதாபமாகிவிட்டது. நித்யா வின் சாந்தமும் அழகும் நிறைந்த பாலியமும் கிழட்டுப்பிணத்தின் மூர்க்கமும் அவரை பிரமிக்கச்செய்தன. 'உம்' என்று ஒரு பெரிய மூச்சுடன் தன் வேலையைத் தொடங்கி ரத்தத்தை ஏற்றினர்.

தாமோதரன் சென்றபிறகு ஹரிஹரனின் கோபம் ருத்திர மூர்த்திக்குமேல் மீறிக்கொண்டுவந்தது. "படவாப்பயல் என் கன்னத்திலா அறைந்துவிட்டுச் சென்ருன்? ஆகட்டும். பார்க்கிற இடத்திலேயே பைஸல் செய்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்... அம்மா! நான் வெளியே போய் அந்த சோதாப்பயல் யாதவனைத் தேடிப்பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறேன். அதற்குள் இங்கு வந்தால் இங்கேயே இருக்கச்சொல்லு".

என்று கூறிப்பின் கன்னத்தைத் துடைத்துக்கொண்டு காரில் வேகமாகச் சென்ருன். இரண்டு மூன்று இடங்களில் தேடினுன். கிடைக்கவில்லை. பிறகு காரில் வீதியில் வரும்போது, யாதவ் ஒரு ஓட்டலிலிருந்து இறங்குவதைக் கண்டதும் ஹரிஹரன் ஒரே ஓட்ட மாகக் காரை அங்கு திருப்பி அவன் முன்பு நிறுத்தி, "யாதவ்! யாதவ்!" என்று கத்தினுன்.

உண்மையில் யாதவனுக்குத் தூக்கிவாரி, அக்கினி குண்டத்தில் போட்டதுபோலிருந்தது. தன் செய்தி அறிந்துதான் தன்னைப் பிடிக்க வந்துவிட்டதாக எண்ணித் துடித்தான். முகத்தில் பிரம்ம ஹத்திக்களை தாண்டவமாடியது. மெல்ல நழுவ எத்தனித்தான்.

அவன் மனத்தில் ஆயிரந்தேள் கொட்டி அவதிப்படுவதை ஹரிஹரன் எப்படி அறிவான். காரைவிட்டுத் தானே இறங்கி ஓடி வந்து, "யாதவ்!...ஏறு ஏறு.வண்டியில் ஏறு.நித்யாவுக்குபேராபத்து வந்து ஆஸ்பத்திரியில் கிடக்கிருள். வீட்டில் ஏதோ பெரிய பயங் கரமான களவு, கொலை செய்ய எத்தனம் நடந்திருக்கிறது. முதலில் நீ ஆஸ்பத்திரிக்கு வா!...உம்...காரைவிடுடா...

என்று கூறியபடியே பிள்ளையை வண்டியில் தானே இழுத்துப் போட்டுக்கொண்டு வண்டியை விடச்செய்தான். தகப்பனருக்கு தன் விஷயம் ஒன்றும் தெரியாது என்பதை அறிந்தபிறகே யாத வனுக்குச் சரியாக மூச்சு வர ஆரம்பித்தது. அவருக்கு ஒன்றும் தெரியாதிருக்கும் நிலைமையில், தான் ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு மறுத்தால் சந்தேகத்திற்கு இடமுண்டாகுமென்று எண்ணி 'என்ன! வீட்டில் களவா! கொலையா!...நித்யாவுக்கு ஆபத்தா! போலீஸில் எழுதியாகிவிட்டதா?' என்று ஒன்றுமே அறியாத சாதுவைப் போல் கேட்டான்.

ஹரி:—"போலீஸில் எழுதவேகூடாது" என்று நித்யா ஆண்ட வன்மீது ஆணைவைத்துக் கெஞ்சுகிருள். விவரம் ஒன்றுமே தெரிய வில்லை. நான் இப்பதான் ஊரிலிருந்துவந்தேன். இந்த அலங் கோலத்தைக் கண்டு கதிகலங்கும் சமயம், அந்த சோதா ராஸ்கல்

தாமோதரன் வந்து கூழைக்கும்பிடு போட்டான். நன்ருகத் தோல் உரியும்படி அடித்துத் துரத்திவிட்டு உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன்.

யாத:—என்ன அக்ரமம் இது! நம்ம வீடேறி அந்தத் திருட்டுப் பயல் தைரியமாகவந்தாஞ! ஒரு வேளை அந்த தரித்திர மூதேவிதான் திருடியிருப்பாளே என்னவோ!...என்று முடிப்பதற்குள், ஹரி ஹரன் "ஆமாம், எனக்குக்கூட சந்தேகமாகவே இருக்கிறது...இப் போது பேசாமலிரு; பிறகு பார்க்கலாம்" என்ருன்.

இதற்குள் ஆஸ்பத்திரி வந்துவிட்டதால் இருவரும் இறங் கிஞர்கள். ஹரிஹரன் டாக்டரிடம் தன் குமாரனை அழைத்துவந்து "சார்! இதோ இவன் நல்ல திடமான சரீரமுள்ளவன். இவனுடைய ரத்தத்தை ஏற்றுங்கள்" என்ருன்.

டாக்டருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "இனிமேல் தேவை இல்லை. அப்படி கண்டபேருடைய ரத்தத்தையும் ஏற்றுவது என்ருல் இந்த இடத்தில் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். அதை ஏற்றி இருப்பேன். அந்தம்மாளின் உடன்பிறந்தவரின் ரத்தம் மிகவும் பொருத்தமானது, அதை ஏற்றியாயிற்று" என்று சற்று அலக்ஷிய மாகவே சொன்னுர்.

இதைக்கேட்ட கிழவன் 'என்ன! இவள் சகோதரஞ!' என்று படபடத்துக் கேட்டான். அதே சமயம் தாமோதரன் அடுத்த அறையிலிருந்து வெளிவந்து கிழவனை முறைத்துப் பார்த்தபடியே நித்யாவின் அருகிலேயே நின்று கண்ணீர் வழியவிட்டுக்கொண் டிருந்தான்.

என்னதான் கல்லினும் கடின சித்தமுடையவனும், துர்க் குணங்களுக்கு இருப்பிடமாக உள்ளவனுமாயினும் நித்யாவின் பரி தாபத்தைக் கண்டதும் யாதவனுக்குத் தன்னை அறியாமலேயே இத யத்தில் இன்னதென்று விவரிக்க இயலாத சித்திரவதை செய்கிறது. அவனுல் நிற்கமுடியாத ஒருவிதமான தத்தளிப்பு உண்டாகியது. தாமோதரனைப் பார்த்ததும், ஆத்திரம் வேறு பொங்குகிறது. நித்யா கண்ணைத் திறக்காது நினைவற்றுக் கிடக்கும்போதும்கூட அவள், "யாதவ்!...யாதவ்!....நான் உன் தாய்...நீ என்னருமைக்குழந்தை... யாதவ்!...இங்கு வா....என்னைச் சத்ருவாக நினைக்காதே"...என்று வாய்ப்பிதற்றுவதைக் கேட்க அவன் நெஞ்சும் துள்ளித்துடித்தது....

அவனுடைய இதயம் திடுக்குதிடுக்கென்று அடித்துக்கொண்டு 'குற்றமுள்ள நெஞ்சு குறு குறு என்றும்' என்கிற பழமொழிப்படி தத்தளிக்கின்றது. எங்கே தன் குட்டு வெளியாகிவிடுமோ என்கிற திகில் அவனைக் கொன்று வதைக்கின்றது.

ஒப்புக்காவது, "அம்மா!...அம்மா!...இதோ நான் வந்திருக் கிறேன் பாரு...நான்தான் யாதவ்" என்று வாய்த்தவறி தன்னை மீறிய ஒரு உணர்ச்சியால் கூறிவிட்டான்.

நித்யாவின் முகத்தில் ஒரு புதிய ஜோதியும் களையும் திடீரென்று உண்டாயின..."யாதவனு!...யாதவனு"....என்று கண்ணைத் திறந்து பார்த்தாள்..."யாதவ்!....யாதவ்!"....என்று அலறினள். மேலே பேச முடியாது மீண்டும் மயக்கத்திலாழ்ந்தாள்.

'இன்னும் இங்கு நின்ருல் அவள் என்ன சொல்லிவிடுவாளோ! நிலைமை எப்படியாகுமோ!' என்று பெரிய பயமும் நடுக்கலும் எடுத்துக்கொண்டதால் அந்த நிலைமையில் நித்யாவின் பரிதாபத்தைக் கண்டு சகிக்காதவன்போல்..."அப்பா! என்னல் அம்மாவின் நிலைமையைச் சகிக்கவேமுடியவில்லை. நான் போகிறேன். தலை சுற்றுகிறது. மயக்கம் வரும்போலிருக்கிறது" என்று கூறியவாறு அவ்விடத்தைவிட்டுச் சரேலென்று போய்விட்டான்.

தாமோதரனை அடித்த அடியில் முகத்திலும் உடம்பிலும் வீக்கங்கண்டு திண்டுதிண்டாய் எழும்பியிருந்ததுகண்ட டாக்டர் அவனை நோக்கி 'சார்! இதென்ன! அடி பட்டிருக்கிறதே! அக்காவுக்கு கத்திக்குத்து, உங்களுக்குக் கைக்குத்தா? யார் இப்படி அடித்தது?' என்று கேட்கும்போது ஹரிஹரனுக்கு கபீரென்று தூக்கி வாரிப்போட்டது. எங்கே தன்னுடைய குட்டு வெளியாகி விடுமோ தன் மானம் எங்கு ஆகாசத்தில் பறந்துவிடுமோ என்று திகிலும் குழப்பமும் உண்டாகிவிட்டன. முகத்தில் அசடு வழிய திருகத் திருக விழிக்கின்ருன். தாமோதரனையே உற்றுக் கவனிக்கிருன்.

தாமோதரனுக்கோ ஆத்திரம் பொங்கி வழிகிறது. "அவன் பெரிய மனிதன், உத்யோகஸ்தனுனல் அவன்மட்டு மிருக்கட்டும். நமக்கென்ன வந்தது. நம்மை ஆத்திரத்தில் அடித்ததுபோலத்தான் அக்காவையும் இந்தப்பாவியே கத்தியால் குத்தியிருப்பான்" என்கிற சந்தேகமும் உண்டாகியது. உடனே அவன் சற்றும் தாக்ஷிண்யம் பார்க்காமல் டாக்டரைப் பார்த்து "சார்! எங்கள் குடும்பத்தை சில காலமாக ஒரு கிழட்டு ப்ரம்மராக்ஷஸ் பிடித்து ஆட்டுகிறது. அதுதான் எங்க அக்காவையும் என்னையும் இந்தமாதிரி கதிக்கு ஆளாக்கியது. அந்த ப்ரம்மராக்ஷஸை ஓட்டுவதற்குச் சரியான மந்திரக்காரனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். இன்னும் கிடைக்கவில்லை" என்று ச்லேடையாகவும் கிழவன் இதயத்தில் காய்ச்சிய வேலைப் பாய்ச்சுவதுபோலவும் கூறினன்.

இதைக்கேட்டு டாக்டர்களும் நர்ஸ்களும் கடகடவென்று சிரித்தார்கள். ஹரிஹரனுக்கு அப்போது உண்டாகிய நிலைமையைக் கூறத் திறமே இல்லை. 'சார்! நான் போய் மறுபடியும் வருகிறேன். நோயாளியை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று கூறியவாறு தடதடவென்று விசையாகச் சென்ருன்.

இவன் செல்லும் ஆத்திரத்தில் எதிரில் வரும் நர்ஸ்கூடத் தெரியாமல் அவளை மோதி அடித்துக்கொண்டு சென்ற வேகத்தில் நர்ஸ் கையில் வைத்திருந்த லோஷன் ஜலம் அப்படியே ஹரிஹரனை

நீரோட்டிவிட்டு, பேஸினும் தடாரென்று கீழேவிழுந்தது. நர்ஸ் 'க்ரீச்' சென்று ஒரு கூச்சல் போட்டாள். அதே சமயம் மற்ற டாக்டர்கள், நர்ஸ்கள், தாமோதரன் முதலியவர்கள் கடகடவென்று சிரித்த சிரிப்பு அந்த கட்டிடத்தில் அப்படியே எதிரோலியுடன் கும்மென்று ரீங்காரம் செய்தது.

ஹரிஹரனின் இதயத்தில் ஆயிரம் தேள் கொட்டியதுபோன்ற வேதனை செய்து அவமானத்தினால் முகம் சுண்டியது. அசட்டுப் பார்வையுடன்...'அயாம்ஸாரி! எக்ஸ்யூஸ் மி'..என்றுகூறிக்கொண்டே ஓட்டமாக ஓடிவிட்டான். இதயத்தில் செய்யும் வேதனையில் மோட்டார் ஓட்டத்திற்குமேல் இதயம் ஓடியது.

## 38

தாமோதரன் சென்றபிறகு ஞானம்பாளின் நிலைமை பின்னும் கவலைக்கிடமாகிவிட்டது. இரு கண்களும் தெரியாத மூர்த்தி என்ன செய்வான் பாவம். அண்டை அயலிலுள்ள மனிதர்கள் ஞானத்தினருகிலிருந்து கவனித்தும் அவர்களுக்கு மிகவும் பயமும் கவலையும் உண்டாகிவிட்டன. "போகவேண்டாம்; காரியம் பலிக்காது" என்று எத்தனை சொல்லியும் ஞானம், ஒரே பிடிவாதமாக அனுப்பிவிட்டு, 'இன்னும் தாமு வரவில்லையா! நித்யா வரவில்லையா!' என்று வாய்ப் பிதற்றுகிறாள். யார் எத்தனை தேற்றியும் அவளுக்கு அந்த வார்த்தைகள் காதிலேயே விழவில்லையாதலால் மற்றவர்களின் பயம் அதிகரிப்பது சகஜமாகியது.

மூர்த்திக்குமட்டும், தாமோதரன் வராததால் ஏதோ விபரீதம் நடந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இன்னேரம் வராமலிருப்பானா என்று தோன்றி கலக்கத்தை அளித்தது. தாமோதரனை அடித்துவிட்டானே! நித்யாவைக் கொன்றுவிட்டானே என்றெல்லாம் நினைக்கும்போது மூர்த்தியின் புறக்கண் குருடாயிருப்பினும் அகக்கண்ணில் அவன் மனத்தில் தோன்றும் பயங்கரமெல்லாம் உருவாகக் காக்ஷியளிப்பதுபோல் தோன்றி நடுக்கமுறச்செய்தது.

"ஐயோ! நித்யாவுக்கும் தாமோதரனுக்கும் ஒருவிதமான விபத்தும் இல்லாதிருக்கவேண்டுமே! ஆண்டவனே! காப்பாற்று. அந்தகனின் குழந்தைகளென்று அலக்ஷியம் செய்யாதே. என் நித்யாவும் தாமுவும் நன்றாக இருக்கும்போது எங்கள் காலமாகிவிட்டால்போதும். ஞானம் நல்ல உத்தமி, மகாராஜி, கொடுத்து வைத்த பாக்கியசாலி. ஏதோ வறுமையினால் கஷ்டப்பட்டாலும் இந்த பாப உலகில் இன்னும் இருந்து அதிக துன்பப்படாமல்

போகும் வழியைத் தேடி இறங்கிவிட்டாள். இனி அவள் பிழைப்பது எது? தாமுவும், நித்யாவும் வரும்வரையிலாவது உயிர் இருந்தால் போதும்'' என்றெல்லாம் எண்ணிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஞானத்தின் நிலைமையை அருகிலுள்ளவர்கள் பேசுவதைக் கேட்கக் கேட்க மூர்த்தியின் நாடி விழவாரம்பித்தது. 'தாமோதரனுவது சீக்கிரம்வரக்கூடாதா?' என்று தவிக்கிறான். தாமோதரனின்நிலைமையும் அங்குள்ள அலங்கோலமும் அந்தகனுக்கு என்ன தெரியும்?

கிழவன் சென்றபிறகு, தாமோதரன் நித்யாவின் பக்கத்திலேயே நின்று அவள் தெளிவிலேயே கவனமாயிருந்தான். தன் தாயாரின் படுக்கைகூட அந்தக்ஷணம் சிறிது மறந்திருந்தது என்றே கூறலாம். சுமார் இரண்டுமணி காலம் சென்றபிறகு நித்யாவுக்கு ஒரு சிறிது ஞாபகம் உண்டாகிக் கண்ணைத் திறந்து பார்த்தாள்.

முதலில் சற்று நேரம் ஒன்றுமே தெரியாது பிரமை பிடித்தது போலிருந்தது. எங்கும் இருள் சூழ்ந்து மங்கலாகத் தெரிந்தது. சற்று நேரம் கண்மூடியிருந்து மீண்டும் கண் திறந்து பார்க்கும்போது தன் வீட்டு அலங்கோலங்கள் சடக்கென்று நினைவிற்கு வந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். "ஐயோ! போகவேண்டாம்; போலீஸுக்குப் போகவேண்டாம். ஆண்டவனை. என் வார்த்தையைக் கேளுங்கள்'' என்று தன்னினைவற்று உளறினுள்.

இதைக்கேட்ட டாக்டர்கள் வியப்புற்றுர்கள். தாமோதரனும் திடுக்கிட்டான். "என்னம்மா சொல்கிருய்! போலீஸில் சொல்ல வேண்டாமா! என்ன சமாச்சாரம்!'' என்று ஒரு டாக்டர் வெகு கனிவுடன் கேட்டார். சற்று நேரம் பதிலேயே இல்லை. பிறகு மறுபடியும் கண் திறந்தாள். தன்னருகில் டாக்டர்களும், நர்ஸ்களும் நிற்பதைக்கண்டு எல்லோரையும் விரைக்கவிரைக்க ஒரு சுற்று சுற்றிப்பார்த்தாள்.

அருகில் கண்ணீர்வழிய நிற்கும் தாமோதரனைப் பார்த்துவிட்டாள். அவ்வளவுதான். நித்யாவின் முகமே மாறிவிட்டது. ஒரே அலறல் அலறியபடி "தாமோதரா!... அம்மி!''...என்று ஒரு கூச்சலிட்டவாறு இருகைகளையும் தாவி அவனைக்கட்டியணைக்கமுயன்றுள்.

காயம்பட்ட கையில் பெரிய கட்டு கட்டியிருந்ததால் அசைக்க முடியாத வலி தெரிந்ததால் "ஹா...ஐயோ!'' என்று கர்ஜித்தபடியே ஒரு கையால் தாமோதரனை அணைத்துக்கொண்டு மறுபடியும் மௌனமாகக் கிடந்தாள். சில விநாடிகள் கழித்து மறுபடியும் "தாமூ!...நான் எங்கிருக்கிறேன்? அத்திம்பேர் எங்கே'' என்றுள்.

தாமோதரனல் வாய் திறந்து பேசவேமுடியாது துக்கம் மார்பைப் பிளந்துகொண்டுவருகிறது. விம்மி விம்மிப் புலம்புகிறுனேயன்றி பதில் சொல்லவில்லை. நித்யா திடீரென்று கடகடவென ஒரு பெரிய சிரிப்பு சிரித்தாள். "தம்பீ!....அழுகிருயா! ஏன்! நான் எங்கே செத்துவிடுகிறேனே காடெல்லாம் எங்கு எதும்பாகி

18359

விடுமோ என்று அழுகிருயா! பயித்தியம்...வாயைமூடு...ஐயையோ! தாமூ! அம்மா!...அம்மா எப்படியானுள்! அவளை அடியோடு மறந்துவிட்டாயா!...போ!...போ!...முதலில் அம்மாவிடம் போ! முன்னறிதெய்வமாகிய அவளைக் காப்பாற்று. இந்த அசேதனக் கட்டையை விட்டுவிடு. மறந்துவிடு...போய்விடு தாமூ!...இனி இப் பக்கமே வராதே. நான் அழைத்தாலன்றி வராதே....உன் அத்திம் பேர் எங்கே! யாதவ் எங்கே?"...என்று ஆவேசத்துடன் பேசினுள்.

தாமோதரனுக்கு நிற்கவும் மனமில்லை; போகவும் துணியவில்லை. தன் தாயாரின் சவத்தைத்தான் காணநேருமா என்று நினைக் கும்போது சரீரமும் மனமும் ஒருங்கே பறந்தது. "அக்கா!....இதோ பார்....இந்த விபத்து எப்படி உண்டாகியது...எனக்குச் சொல்ல மாட்டாயா?"...என்று கெஞ்சிக் கேட்டான்.

நித்:—தாமூ! முதலில் இவ்விடத்தைவிட்டுப் போய்விடு. இனி இப்பக்கமேவராதே. விபத்து எப்படி உண்டாகும்? விதி எப்படி ஆட்டுகிறதோ அப்படி விபத்து உண்டாகிறது. இதென்ன கேள்வி? நீ முதலில் போ...நிக்காதே...உன் அத்திம்பேரிடம் நீ பட்டிருக்கும் அடி உன் உடம்பே எடுத்துக்காட்டுகிறது. நான் இறந்துவிட்டேன் என்று எண்ணிக்கொள்ளு. அம்மாவிடம் இப்போது இந்த நிலைமை யைச் சொல்லாதே...போ தாமூ!...போ...போ"...என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதுபோல் கூறினுள்.

இருபுறமும் தர்மசங்கடத்திலிருக்கும் தாமோதரனுல் அதற்கு மேல் நிற்கமுடியவில்லை. டாக்டரை நோக்கி, "சார்! எங்களுடைய சரித்திரம் ஒரு தனி கதை போன்றதாகும். உலகத்தில் எத்தனையோ விசித்திரங்கள், விநோதங்கள், சுக துக்கங்கள் எல்லாம் இருக்கத் தான் இருக்கும். இருப்பினும் எங்கள் குடும்பத்தின் பரிதாபத் தைப்போல் உலகத்திலேயே இருக்காது.

ஏழ்மை நிறைந்த தாய் வீட்டுக்கு பெரிய ஆதாரம் வேண்டும்; அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இந்த மகா உத்தமி தானுக வலியவந்து இக் கிழவனை மணந்து தன் வாழ்வையே தியாகஞ்செய்தாள். கொடுத்த வாக்கைத் தட்டக்கூடாதென்ற நாணயத்திற்காக பிறகு இவளை மணப்பதாக வந்த லக்ஷாதிபதி ஒரு வனையும் திரஸ்கரித்துத் தன் வாக்கைப் பரிபாலனம் செய்தாள். ஆனுல் அந்த கிழம் அவளை முற்றிலும் மோசம் செய்துவிட்டது...

நித்யாவுக்கு இவன் சொல்வது சற்றும் பிடிக்கவில்லையாதலால், தாமுவை ஒரு முழி முழித்துப் பார்த்து, "தாமூ!....இதென்ன புத்தி கெட்டத்தனம்...அவரவர் செய்த கர்மாவை அவரவர் அனுபவிக் காது விட்டுவிடமுடியுமா! டேய்! நான் சொன்னுல் கேட்கமாட் டாய். போய்விடு. இங்கு நிற்காதே...அம்மாவைப் போய்பாரு" என்று ஒரு கர்ஜனை செய்தாள்.

மறுபேச்சு பேச பயந்து நடுங்கினன். "அக்கா! நான் போகிறேன். இனி உன் சொல்படியே இப்பக்கமே வரவில்லை. பகவான் உன்னைக் காப்பாற்றவேண்டுமென்று அவனையே இடைவிடாது பிரார்த்திக்கின்றேன்...

என்று கூறிமுடிப்பதற்குள் "சேச்சே! புத்திகெட்டமடயன். 'ஹே பகவான்! என் சகோதரியினிடம் மனமிரங்கி அவளுடைய கஷ்டங்களைப் போக்கி நிம்மதியான உலகிற்கு அவளை அழைத்துக் கொள்ளு. நிராகரிக்காதே!' என்று வேண்டி பிரார்த்தனை செய்.... போ....போ"...என்று கூறி ஒரு பைத்தியக்காரச் சிரிப்புசிரித்தாள்.

ஆவேசத்தில் படபடவென்று பேசியதால் மறுபடியும் மயக்கத்திலாழ்ந்தாள். அங்கு பக்கத்திலிருந்த டாக்டரின் மனமிளகி கண்களில் நீர் முட்டியது. சாமர்த்தியமாகத் துடைத்துக்கொண்டு, "சார்! இந்த நிலைமையில் அந்தம்மாளைப் பேசவே விடக்கூடாது. நீங்கள் போய் பிறகு வாருங்கள்" என்று தாழ்ந்த குரலில் கூறினர்.

தாமு:—இதோ போகிறேன். டாக்டர்! நீங்கள்தான் அவளைச் சரியாக கவனித்துக்கொள்ளவேண்டும்...நான் வேறு என்ன சொல்லப்போகிறேன்—என்று கூறும்போது துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. குழந்தையைப்போல் அழுதுகொண்டே "அக்கா! நான் போகிறேன். பகவான்தான் உன்னை ரக்ஷிக்க வேண்டும்" என்று கூறியவாறே போய்விட்டான்.

அந்த காக்ஷி யார் மனத்தைத்தான் உருக்காது? நர்ஸின் இதயம் உருகிக் கண்ணீர்வழிந்தது. நித்யா கண்ணையே திறக்கவில்லை. தன் லோக சிந்தனையாகச் சற்று பேசுவது, சற்று சிரிப்பது, யாதவா! என்றும், தாமு! என்றும் பேசுவது, இம்மாதிரியே கிடந்தாள். ஹரிஹரன்மட்டும் அவ்வப்போது வந்து பார்த்துகொண்டு போனன். நித்யாவுக்கு நல்ல தெளிவு உண்டாகியதும் அவளிடம் விஷயத்தை அறிந்து உடனே போலீஸில் சொல்லி இதன் உண்மையை அறிய வேண்டும் என்ற ஆத்திரம் மனத்தில்பொங்கிக்கொண்டேயிருந்தது.

இரண்டு மூன்று நாட்கள்வரையில் அவளுக்குச் சரியான ஞாபகமோ நீடித்த தெளிவோ வரவில்லை. கையில் கத்தி காயத்தின் வேகத்தால் வெகு விரைவில் அதிகமான சீ பிடித்துப் புரையோட வாரம்பித்ததுகண்டு, எத்தனை ஊசி குத்தி மருந்து ஏற்றியும் உபயோகப்படாத நிலைமைக்குவந்தது. டாக்டர்களுக்குப் பெருத்த குழப்பமாகியது. சீ பிடித்திருப்பதால் ஜுரம் பலமாகக் காய்கிறது. ஐஸ் வைத்தது வைத்தபடியே இருக்கிறது.

ஹரி:—என்ன சார் செய்வது, ஜுரம் இறங்கவே இல்லையே! இப்போதுமா 105 டிக்கிரி இருக்கிறது?

டாக்டர்:—எங்களாலான பிரயாசை செய்துதான் வருகிறோம். என்ன செய்வது? இன்னும் பயங்கரமான சிகிச்சைகூடச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. சீ மேல்நோக்கிச்

செல்வதால் மணிக்கட்டுவரையில் கையை எடுத்துவிட்டால்தான் ஒருவாறு பிரயோஜனப்படலாம்...

ஹரி:—(அலறியவாறு) என்ன!...என்ன!...கையை எடுத்து விடுவதா! ஐயோ! இதென்ன பயங்கரம்?...என்று துடிக்கிறான்.

டாக்:—உம்....நாம் என்ன செய்யலாம்? இப்போதே இதைச் செய்யாவிட்டால் பிறகு முழங்கைவரையில் எடுக்கவேண்டியதாக வந்துவிட்டால் பின்னும் கஷ்டமாயிற்றே! இது அந்தம்மாள் சொல்லுகிறபடி காயம்பட்டதல்ல. இதன் மர்மமே தெரியவில்லை... உடனே அந்த சிகிச்சை செய்யாவிட்டால் பிரயோஜனமில்லை... தயங்கினால் ஆபத்துதான் அதிகரிக்கும். உங்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டுதான் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இப்போது சொல்லி அனுப்பினோம்...என்ன சொல்கிறீர்கள்?

ஹரி:—என்ன சொல்வேன் சார்! என் மூளையே குழம்பு கிறது. எந்தவிதமாகக் காயம்பட்டதென்கிற உண்மையே தெரிய வில்லையே!...ஐயோ! கையை எடுப்பதென்றால் வயிறு எரிகிறதே. உயிருக்காவது ஆபத்தில்லாதிருக்குமா!...என்ன செய்வேன் சார்!" என்று உண்மையில் மனது கலங்கி அழுதுவிட்டான்.

அதுவரையில் பிரண்டைப் பாட்டி ஆஸ்பத்திரிக்கு வரவே இல்லை. ஹரிஹரன் கதி கலங்கி இடிந்துபோய்விட்டான். நித்யா வுக்கு நினைவே இல்லை. ஜன்னி பிறந்தவள்போல் பிதற்றவாரம்பித் தாள். அன்று செல்ல மறுநாள் காலையில் ஹரிஹரன் ஆஸ்பத்திரிக்கு வந்தான். பிரண்டை பாட்டியும்கூட வந்தாள். டாக்டர் தெம்பில் லாது தலை குனிந்திருந்தார். ஹரிஹரன் அருகில் போய்ப் பார்க்கும் போது நித்யாவின் கை மணிக்கட்டு வரையில் எடுத்தாகிவிட்டது என்பது அறிந்து 'ஹா!' என்று ஒரு கத்து கத்தினான். அப்படியே தலைசுற்றி மயக்கமாகக் கீழே விழுந்துவிட்டான்.

"ஐயையோ! கையும் மொண்டியாய்ப் போய்விட்டதா? அட க்ரகசாரமே! எந்த வேளையில் அந்தத் தரகுக்காரப் பாவி என்வீட்டில் காலை வைத்தானோ! அவன் நாசமாப் போக. என் குடும்பத்துக்கு விடியாத தரித்திரமும் ஆபத்தும் வந்துவிட்டன" என்று மூக்கைச் சிந்தினாளேயன்றி நித்யாவின் பரிதாபத்திற்கு ஒரு சிறிதும் இரங்க வில்லை. அவளுடைய இதயம் கல்லா! இரும்பா! எதுவாகத்தா னிருக்கும்? தர்மாம்பாளுக்கு இந்த விபரீதம் தாங்காது அழுது துடித்தாள். "அம்மா! அம்மா!....இந்த கண்றாவியை சுதா அறிந் தால் உயிரையே விட்டு விடுவாளே! தாமோதரம் மாமாவும், தாதா, பாட்டியும் என்னமாய்க் கதறுவார்கள். ஐயையோ! கை போய் விட்டதே...அம்மா! அம்மா!...இனுமே நீ எப்படியம்மா பொடவெ உடுத்திக்கொள்வாய், தலை பின்னி விடுவாய், எங்களை எப்படியம்மா குளிப்பாட்டுவாய்?...என்று பெரிய மனுஷியைப்போல் ஒப்பாரி

வைத்துப் புலம்புவதைக் கண்டு நர்ஸ் கண்ணீர் உதிர்த்தபடி தர்மாம்பாளை வாரி அணைத்துக்கொண்டாள்.

இந்த துக்கம் தாளாது தர்மாம்பாளுக்கு மயக்கம் வந்துவிட்டது கண்டு, எல்லோரும் நடுங்கினார்கள். நர்ஸின் மடிமீது அப்படியே படுத்துவிட்டாள். நர்ஸினுடைய துடைப் புடவையை தர்மாம்பாளின் கண்ணீர் நனைத்தது.

## 39

நித்யாவைவிட்டுப் பிரிய மனமில்லாது தவித்தவாறு சென்ற தாமோதரனின் மனம் பட்டபாட்டை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் கூறத்திறமில்லை. தாமரையிலை நீர்த்துளிபோல தத்தளித்துக்கொண்டு சென்றான். "என் தாயாரின் கதி எப்படி இருக்கிறதோ தாயும் மகளும் போட்டி போடுவதுபோல் விபத்து வந்துவிட்டதே. இருவருக்கும் குணமாகவேண்டுமே" என்று பகவானை பிரார்த்தனை செய்தவாறு ஊரை அடைந்தான்.

வீட்டுக்குப் போவதற்கு முன்பே இவன் வரவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்கள் தாமோதரனைக் கண்டதும், "வாடா அப்பா! மாத்ருகைங்கர்யம் காத்துக்கொண்டிருக்கிறது. நேற்றிரவே உன் தாயார் போய்விட்டாள். உனக்காக அலைந்துகொண்டிருக்கிறோம்" என்றார்கள்.

ஐயோ! பாவம். இந்த சொல்லைக்கேட்ட தாமோதரனுக்கு எப்படித்தானிருக்கும்? 'அம்மா!' என்று ஒரு கர்ஜனை செய்தவாறு ஓடிவந்து தாயாரின் சவத்தின்மேல் விழுந்து கதறினான். முட்டிக்கொண்டான். துடித்தான். எது செய்துதான் என்ன பயன்?

"நித்யாவைப் பார்க்காமலேயே போய்விட்டாளே! போகும்போது என்னவாவது சொன்னாளா!" என்று கேட்டான். அருகில் இருந்த ஒரு பெரியம்மாள், "உம். என்னடப்பா சொல்றத்துக்கு இருக்கு? 'என் நித்யாவையும் தாமோதரனையும் அவா அப்பாவையும் காப்பாற்று" என்று கடவுளை வேண்டிக்கொண்டாள். நித்யாவுக்கு ஒரு குழந்தை பிறந்து பார்க்கவில்லையே என்றும், உனக்குக் கல்யாணத்தைச்செய்து பார்க்கவில்லையேஎன்றும்கவலைப்பட்டாள். அவ்வளவுதான் அவள் கொடுத்துவைத்தது" என்று கண்ணீர்விட்டாள்.

மூர்த்தியின் சாந்தத்திற்கும், பொறுமைக்கும் அவனைக் காண்போர் எல்லோரும் பிரமித்து வருந்தினார்கள். தாமோதரன் பிச்சை எடுத்தேனும் தாய்தந்தையைக் காப்பாற்றத் தயாராக இருந்தும் அவன் கஷ்டத்தைக் கண்டு சகிக்காது ஞானம் பறந்துவிட்டாள். நித்யாவின் பரிதாபகரமான நிலைமையில் அவளுக்குத் தாயாரின்

மறைவு தெரிந்தால் பின்னும் ஆபத்தாகிவிடுமென்று எண்ணி அதைத் தெரிவிக்கவேயில்லை.

எப்படியோ சகடக்கால்களைப்போல் நாட்கள் ஓடி மறைந்தன. ஞானத்தின் உத்தரக்கிரியைகள் முடிந்தன. பிறகு என்ன செய்வதென்று தோன்றாமல் குழம்பினான். "கிட்டத்தட்ட 20 நாட்களுக்கு மேலாகியும் நித்யாவின் உடம்பைப்பற்றிய விஷயம் ஒன்றுமே தெரியவில்லையே! எப்படி அறிவது? அவளாவது உயிருடனிருக்கிறாளா! அவளும் போய்விட்டாளா! ஈசன் என்னவிதம் வைத்து ஆட்டப்போகிறானோ!" என்று குமுறுகிறான்.

பிச்சை எடுத்துக்கொண்டுவந்த அரிசியை அன்புடன் கஞ்சி காய்ச்ச தாயாரும் போய்விட்டாள். அந்த வேதனையில் தாமு பைத்தியம் பிடித்தவன்போலாகிவிட்டான். இந்நிலைமையில் நித்யாவைப்பற்றி என்ன அறியமுடியும்? உயிர் துறந்திருந்தால் எப்படியும் கலெக்டர் பெண்ஜாதி என்கிற ஹோதாவில் பத்திரிகையில் வந்துவிடும். அது இல்லாததால் உயிருடன் இருப்பதாகவே எண்ணி இருந்தான். போய் பார்க்கக்கையில் காசுமில்லை. நித்யா வரவேண்டாம் என்று ஓட்டிட்டுக் கூறினதால் மீறிக்கொண்டு போகவும் துணியவில்லை. தர்மசங்கடத்தில் சில நாட்கள் கழிந்தன,

பிறகு ஒருவிதமான யோசனை செய்துகொண்டு ஆஸ்பத்திரியின் டாக்டருக்கு ஒரு கடிதம் வெகு உருக்கமாக எழுதி பதிலுக்கு ஸ்டாம்பும்வைத்து அனுப்பினான். 'பதில் வருமோ வராதோ!' என்று நிமிடத்திற்கு நிமிடம் ஏங்கி எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இவன் செய்த புண்ணியத்தினால் அடுத்த வாரமே பதில் கிடைத்தது.

> "ஐயா! உங்கள் கடிதம் என் உள்ளத்தை உருக்கியது. நான் மிகவும் விசனகரமான பதில் எழுதும்படியிருப்பதுபற்றி வருந்துகிறேன். அந்தம்மாளுக்கு உயிர்ப்பயமில்லை. இனி பிழைத்துக்கொள்வார்கள். ஆனால் அவர்களின் அழகு நிறைந்த கையை மணிக்கட்டு வரையில் எடுத்துவிடும்படியாகிவிட்டதற்கு வெகுவாய் விசனப்படுகிறேன். இத்தனை நாளாகியும் இன்னும் சரியான தெளிவு காணப்படவில்லை. இன்னும் ஒரு மாதத்தில் சரியாகலாம்.
>
> இங்ஙனம்,
> டாக்டர் ஹுஸேன்."

இதைப் படிக்கும்போதே துக்கம் தொண்டையை அடைத்தது. படிக்க முடியாது துடித்தான். விஷயம் அறிந்ததும் அவன் உயிரே ஆகாயத்தில் பறப்பதுபோல் தோன்றியது. துன்மார்க்கன் கைவைத்த வேளை கையும் போய்விட்டதா! என் நித்யாவுக்கா கை போயிற்று? என்னருமை நித்யாவா மொண்டி...மொண்டி... மொண்டி...ஐயையோ!....அக்கா!....அக்கா!"...என்று ஆனை வீறிடு

வதுபோல் வீறிட்டான், கதறினன். இதயம் அப்படியே வெடித்து விடும்போலாகி விட்டது.

"தன் கை ஊனமாகிவிட்டதை யறிந்து என் நித்யா என்ன துடித்தாளோ! எப்படி நொந்துகொண்டாளோ! என்ன தவிக்கிருளோ!" என்று எண்ணி எண்ணி அனலிடை மெழுகென உருகினன். இதைத் தன் பிதாவிடம் சொன்னல் அவர் உயிரே போய் விட்டாலும் போய்விடும். தனக்குக் கண்கள் போனதற்கே அவர் உயிர் ஊசலாடுகிறது. தன் மகளுக்குக் கையும் போய்விட்டதென்று அறிந்தால் எப்படித்தானிருக்கும். இப்போதுள்ள விசனத்தில் அவரிடம் சொல்லாதிருப்பதேமேல் என்று எண்ணிப் பேசாது இருந்தான்.

அந்த நிலைமையில் ஒரே ஊரிலிருக்கவும் மனம் சகிக்காது தகப்பனுடன் கிளம்பி உண்மை பிச்சைக்காரனகவே ஆகிவிட்டான். மனது முறிந்து வைராக்யக் கட்டையாகிய வேகத்தில் அவனுடைய ஆத்திரம் பூராவும், ஹரிஹரன்மீதும் சுதாவின்மீதும் பாய்ந்தது. பாழாப்போன பிரேமை மத்தியில் வந்து என் இதயத்தில் ஊறிய தனல்தானே என் கதி அதோகதியாகியது" என்று மூர்க்கத்தனமான எண்ணம் உதித்து அவன் குழப்பத்தை அதிகரிக்கச்செய்தது.

பின்னும் சில நாட்கள் ஓடி மறைந்தன. எத்தகையோருக்கும், சோதனைக்குமேல் சோதனையாக துன்பம் வந்தால் மனது உடைந்து போவதுடன் ஒருவிதமான வெறுப்பும் மூர்க்கத்தனமும் தோன்றுவது சகஜந்தானே! சத்திரங்களிலும், வீடுகளிலும் இரந்துண்ணுவதற்கும் தாமோதரனுக்கு மனம் கசந்தது.

எங்கும் சிள்ளு, புள்ளென்று சீறிவிழும் பகுமானந்தான் கிடைத்ததால் தனியே வீதியில் பிச்சை எடுக்கவே துடங்கினன். அதில்மட்டும் என்ன கிடைக்கிறது. "நல்ல கட்டைதடியன்போல் இருக்கிருயே! வேலை செய்து சாப்பிடுவதற்கென்ன கேடு?" என்ற சிங்காரவார்த்தைகள் பிறந்தன. அதுவும் அவனல் தாளமுடியவில்லை.

தன் பிதாவை அழைத்துக்கொண்டே வீதியில் பாட்டுபாடி பிச்சை வாங்கவாரம்பித்தான். பரதேசியைப்போல் தெருத்தெருவாய் பாடிக்கொண்டுபோவதில் தினம் இரண்டணு காசுக்குக் குறையாமல் கிடைத்தது. அதைக்கொண்டு ஏதேனும் வாங்கித் தின்பதும் சத்திரம் சாவடிகளில் தூங்குவதும் மீண்டும் கால்போன போக்கில் நடப்பதுமாக ஆனன்.

இவனுடைய மதுர கண்டத்திலிருந்து மலர்கள்போல் உதிரும் கானத்தைக் கேட்டு மனமுருகிய ஒரு பெண்மணி இவனுக்கு ஒரு ரூபாய் பில்லையாகக்கொடுத்ததோடு "நாளையதினம் இங்குவாருங்கள். ஒரு விஷயம் பேசவேண்டும்" என்று கூறினள்.

இதைக்கேட்ட தாமோதரனுக்கு வியப்பின்மேல் வியப்பாகி விட்டது. அந்தகனுக்கும் ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. "என்ன

அப்பா பதில் சொல்வது?" என்று தகப்பனுரைக் கேட்டான். இது கேட்ட மூர்த்தி நகைத்தவாறு "உம். குருடனையா யோசனை கேட்கிறுய். உனக்குத் தெரியாதாப்பா!" என்ருன்.

தாமோ:—என்னப்பா இப்படி சொல்கிறீர்கள்? எதற்காக நம்மை வரச்சொல்லுகிருள் என்று தெரியவில்லையே!

மூர்:—இதென்ன பிரமாதம். பிச்சைக்காரப்பயல் நன்ருக பாடினுல் அவனுக்குக் காசைக்கொடுத்து அந்த பாட்டைப் பாடம் செய்வது சிலருடைய வழக்கம். அதற்குத்தான் இருக்கும். வருகிறேன் என்று சொல்லு—என்ருன்.

அப்படியே சொல்லிவிட்டுச் சென்ருர்கள். மறுதினம் காலையில் இருவரும் வந்தார்கள். அந்தப் பெண்ணின் தாயார் பெரிய மாது வந்து இருவரையும் வரவேற்று உட்காரச்செய்து காப்பியும் பலகாரமும் கொண்டுவந்து வைத்தாள்.

தாமு:—இப்போதுதான் சாப்பிட்டுவந்தோம். வேண்டாம். எதற்காக எங்களை வரச்சொன்னீர்கள்?

மாது:—உங்களுடைய பாட்டைக்கேட்டு நாங்கள் ஆனந்தத்தினுல் மெய்மறந்துபோனேம். சில பாட்டுக்கள் உங்களிடம் சொல்லிக்கொள்ளவேண்டுமென்று பெண் ஆசைப்படுகிருள். சொல்லிக் கொடுக்கிறீர்களா என்று கேட்கவே கூப்பிட்டோம்.

இதைக்கேட்ட மூர்த்தி சிரித்தான். "பிச்சைக்காரன் பாட்டிற்கு மனமிரங்கி ஒரு தர்மம் செய்தால் போதும். பாட்டு சொல்லிக்கொடுக்கத்தக்க வித்வான் அவனில்லையே"...என்ருன்.

மாது:—வித்வானின் பாட்டு எங்களுக்கு வேண்டாம்...சாதாரணமான பாட்டு இருந்தால் அதுவே போதும், பெரியவரே! நான் இன்னும் வெளிப்படையாக மனத்தை உடைத்துச் சொல்கிறேன். நாங்கள் பணத்தில் சளைக்காதவர்களே யன்றி மனித இனத்திற்கு விலக்கியவர்கள். சென்ற சில வருடங்களுக்குமுன்பு இவர் ஒரு கிழவியின் சவத்தைத் தூக்கி 10 ரூபாய் வாங்கியது நினைவிருக்கலாம். அந்த கிழவி என் தாயார்தான். எங்களை வீணை அபவாதத்தினுல் கட்டுபோட்டு மக்கள் வேடிக்கை பார்க்கிருர்கள். ஏராளமான பணம் இருக்கிறது. இப்போது குழந்தையின் படிப்பிற்காக இந்த ஊரில் வந்திருக்கிறேன்.

முன்பு நீங்கள் வீடு வீடாக மாதவரம் எடுத்த நாள் முதல் உங்களை நாங்கள் கவனித்து வருகிறேன். இனி ஒளிப்பு எதற்கு. என் மகள் உங்கள்மீது அபாரமான அன்புகொண்டிருக்கிருள். எங்களுக்குள்ள சொத்தையும் அவளையும் நீங்கள் அங்கீகரித்தால் பரம சந்தோஷத்துடன் என் காலமும் முடியும். அவளும் நல்ல படித்த விவேகி. சங்கீதமும் தெரியும். மகா புத்திசாலி....

என்றெல்லாம் கூறிக்கொண்டே வருவதைக்கேட்ட இருவருக்கும் இன்னதென்று கூறத்திறமற்ற ஒருவிதமான அதிர்ச்சி உண்

டாகியது. தாமோதரனின் மனமோ அதுபரியந்தம் சுதாவை வெறுத்திருந்தும் இதைக்கேட்ட உடனே பழய உணர்ச்சிகள் பழய எண்ணங்கள் சம்பவங்கள் முற்றும் குபீரென்று அவன் இதயத்தில் எழுந்தன. என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஏராளமான பணமும், கூட பெண்ணும், அதிலும் தன்னை நேசிக்கும் பெண்ணும் கிடைப்பதென்ருல் அது சாதாரணமான காரியமா?

'ஏன் நாம் இவர்கள் இஷ்டப்படி செய்யக்கூடாது? ஏன் தரித்திரனுகவே காலங்கடத்தவேண்டும்?' என்றெல்லாம் மனது கட்டுக் கடங்காது குழம்பவாரம்பித்தது. ஒன்றுமே தோன்ருது சில வினடி விழித்தான். "அப்பா! நாம் எழுந்து போகலாம். பிறகு வந்து பதில் சொல்வதாகச் சொல்லிவிடுங்கள்" என்று கூறியபடியே எழுந்தான்.

மூர்த்தியும் கூடவே எழுந்தான். அந்தம்மாளுக்கு ஒருவிதமான அதிர்ச்சி உண்டாகியது. "ஏன்! ஏன் போகிறீர்கள்! நான் கேட்டது குற்றமா! என்மீது கோபமா! என்று பரிதாபமாகக் கேட்டாள்.

தாமோதரன் பணிவான குரலில் பேசத்தொடங்கி "அம்மணி! இந்த விஷயங்களெல்லாம் இவ்வளவு சடுதியில் பதில் சொல்லிவிட முடியுமா! நான் யோசித்துப் பதில் சொல்கிறேன். போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தகப்பனுரை அழைத்துக்கொண்டுபோய் விட்டான். அவன் மனது குழம்பியது. மூர்த்திபெரிதாக ஒரு நகைப்பு நகைத்து "அம்பீ! என்ன பதில் சொல்லப் போகிருய்?" என்ருன்.

சுதாவை தாமோதரன் நேசித்திருக்கும் விஷயம் இதுபரியந்தம் மூர்த்திக்குத் தெரியாது. ஆகையால் இப்போது அதைச் சொன்னுல் வெட்கக்கேடாகத் தோன்றும்; இனி சொல்லியும் பயனில்லை என்று அதைப்பற்றிப் பேச்சே எடுக்கவில்லை. "நான் ஏன் வலுவில் வரும் அதிருஷ்டத்தை உதறித் தள்ளவேண்டும். நாமும் சரிக்குச் சரியான பணத்துடன் இருந்து எங்களை இக்கதிக்கு ஆளாக்கிய ஹரிஹரனையும், யாதவனையும் ஒரு ஆட்டு ஆட்டி வைத்தால் என்ன?" என்று தோன்றியது. தகப்பனுர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாது மனக் குழப்பத்தில் கால் போனபடி நடந்தான்.

மூர்:—தம்பீ! நான் கேட்டது காது கேட்கவில்லையா! என்ன பதில் சொல்லப் போகிருய்?

தாமோ.—எனக்கொன்றுமே தெரியவில்லையப்பா! நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படியே கேட்கிறேன். என்ன சொல்வதென்று சொல்லுங்கள்.

மூர்:—நானுந்தான் யோசிக்கிறேன். அந்த பெண்ணை நீ பார்த்தாயா! நன்ருயிருக்கிறதா!

தாமோ:—நான் அவ்வளவு தூரம் பார்க்கவில்லை. அந்தப் பெண்ணை நான் எதற்கு கவனிக்கவேண்டும். இம்மாதிரி ஒருவர்

நம்மைக் கேட்கப்போகிருர்கள் என்று நாம் சொப்பனமாவது கண்டோமா!

மூர்:—தாமூ! ஏதோ குற்றம் சாட்டி அவர்களைச் சமூகம் தள்ளியிருக்கிறது. ஒரு குற்றமும் இல்லாமல் உலகத்தவரைப் போலிருக்கும்போது நம்மையும் சமூகம் வறுமையின் காரணமாகவும் அந்தகத்தின் காரணமாகவும் வெறுத்துவிட்டது. உலகத்திற்கு ஏதாவது வ்யவஸ்தை இருக்கிறதா! நாம் பட்ட துன்பமெல்லாம்போதும். நாமும் பசிக்காமல் சாப்பிடும் ஸ்திதியை அடைந்து சுகமாக வாழலாம். பகவான் நமக்கு திடீரென்று அந்த வழியைக் காட்டியிருக்கையில் ஏன் அதை விடவேண்டும்.

தாமோ:—எனக்குக்கூட அதுதான் தோன்றுகிறது. நாம் பிச்சைக்காரர்களாயிருப்பதால்தான் அந்த ராஸ்கல் ஹரிஹரனுக்குக்கூட அத்தனை அலக்ஷியமாயிருக்கிறது. அவனுக்குச் சரியான நிலைமையை அடைந்து அவனை நன்ருக ஆட்டிவைக்கவேண்டும் என்றுதான் என் மனது விரும்புகிறது. ஆகையால் என்ன செய்யலாம் சொல்லுங்கள்.

மூர்த்தி:—மனம் போகும் வேகத்தில் ஏதேதோ நினைப்பதும் சொல்வதும், வெகு சகஜந்தான். அதனுல் நித்யாவுக்கு ஒன்றும் பாதிக்காதிருக்குமா! இப்போதே அவளைப்பற்றி ஒருவிதமான தகவலும் தெரியவில்லையே! அதை யோசிக்கவேண்டாமா!

தாமோ:—இனி அதைப்பற்றிக் கவலையே இல்லை. இதுகாறும் செய்த கொடுமையைவிட இன்னும் செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது? உங்களுக்கு இந்த துக்ககரமான விஷயம் தெரிந்தால் இன்னும் இடிந்துவிடப்போகிறீர்களே என்று நான் உங்களிடம் சொல்லவில்லை. நித்யாவை அந்தப் பாவியே கையில் கத்தியால் குத்தி வஞ்சம் தீர்த்துக்கொண்ட ஆத்திரத்தில் அவள் கையை மணிக்கட்டுவரையில் வெட்டிவிட்டார்கள்...நித்யா இப்போது மொண்டி....மொண்டி...

என்றதைக்கேட்ட திருமூர்த்தி அப்படியே துள்ளி "ஹா!... என்ன!...என்ன!...நித்யாவின் கை மொண்டியா...ஐயையோ!... தாமூ!...தாமூ!...எந்தச் சண்டாளன் அவளை இப்படிச் செய்தது? என் வயிறு கொதிக்கிறதே...என் இதயம் துடிக்கிறதே...இதற்காகவா என் கண்மணியை அப்பாவிக்குப் பலியிட்டது?...என் வயிறு எரிவதுபோல் அவன்...

தாமோதரன் இடைமறுத்து கிழவனின் வாயைப் பொத்தி, "அப்பா! பொறுங்கள்; பொறுங்கள்...இதற்காகத்தான் நான் உங்களிடம் சொல்லவில்லை. உங்கள் மன அதிர்ச்சியில் உரக்கப் பேசுகிறீர்களே, யாருக்கேனும் காது கேட்டுவிட்டால் என்ன செய்வது? அந்த படுபாவியை சபித்தீர்களானுல் நம் நித்யாவுக்குத்தானே அமங்களமாகிவிடும். அந்த கஷ்டமும் வரவேண்டுமா! வேண்டாம்

வேண்டாம். அது ஒன்று வேண்டாம்...நாம் அந்த செல்வத்தை அடைந்து அந்த சண்டாளன் லஞ்சம் வாங்குவதையும் அவன் மகன் தத்தாரியாய்த் திரிவதையும் கண்டுபிடித்து இழுத்துவிட்டுக் கண்ணில் விரலைவிட்டு ஆட்டலாம். இதற்காகத்தான் நானும் துடிக்கிறேன். அப்பா...உச்...பேசாதீர்கள்'' என்று கூறி அவனைச் சற்று சமாதானப்படுத்திப் பின் வழக்கம்போல் பிச்சை எடுத்துக் கொண்டே வீதியில் வந்தான். ஒரு பெரிய பங்களாவின் காம் பவுண்டுகேட் திறந்திருந்ததனல் அந்தப் பக்கமாக பாடிக் கொண்டே நடந்தான்.

மூர்:—என் தம்பீ! சத்திரத்திற்குப் போய்விடலாமே! இன்னும் ஏன் பாடிப் பிச்சை எடுக்கிருய்?

தாமோ:—சூ....சத்தம் போடாதேப்பா! நமக்கு திடீரென்று இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் வந்துவிட்டதென்று யாருக்கும் தெரிய வேண்டாம். தெரிந்தால் குசமசவென்று பேச்சு பிறக்கும். அது ஊரெல்லாம் பரவிவிடும். அவர்களிடம் போட்டியிட யாரேனும் முளைத்தாலும் முளைக்கலாம். அவர்களை இதுகாறும் சேர்க்காதிருந்த வர்கள் இப்போது வந்து சேர்ந்தாலும் சேரலாம். ஆகையால் பேசா மல் வாப்பா!...என்று கூறி மறுபடியும் பாடிக்கொண்டுசென்றுன்.

தாமோதரன் சொல்லியது சரியாகத் தோன்றியதால் மூர்த்தி பேசாதிருந்தான். தாமோதரன் மனமுருகும்படி "தாயே தந்தை என்றும்'' என்ற பாடலைப் பாடிக்கொண்டு சென்றபோது அக்கட் டிடத்தின் மாடி வராண்டாவில் சில பெண்கள் உல்லாஸமாக உட் கார்ந்து தையல்வேலையும், பூ வேலையும் செய்துகொண்டிருந்தார்கள். சிலர் புத்தகம் படித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் இயற்கையின் அழகை ஆனந்தத்துடன் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். அச் சமயம் கீழே வெகு இனிமையான கானம்ருதம் காற்றுடன் கலந்து வந்து எல்லோருடைய செவியிலும் புகுந்ததும் எல்லோரும் ஒரே முகமாக கீழே எட்டிப்பார்த்தார்கள்.

"பிச்சைக்காரன் கெட்ட கேட்டிற்கு என்ன நன்றுகப் பாடு கிருன் பார்த்தாயா! என்ன அருமையான சாரீரம்! என்ன அகாரம், என்ன கம்பீரம்! அடாடா! என்ன ஜிலுஜிலுப்பு!'' என்று தம்தம் மனம் போனவாறு பேசிக்கொண்டார்கள்.

பிச்சைக்காரன் பாடுவதை நிறுத்திவிட்டு "அம்மா! ஒரு தம்பிடி கொடுங்களேன்'' என்று ஆங்கிலத்தில் கேட்டான். இது கேட்ட பெண்கள் "அடாடா!...பிச்சைக்காரன் ஆங்கிலத்தில் பேசுகிருன் பார்த்தாயா! காலம் போகும் விநோதம் எப்படியிருக்கிறது?'' என்று வெகு வியப்புடன் பேசிக்கொண்டார்கள்.

அதுவரையில் ஒரு புறமாக கீழே உட்கார்ந்து புத்தகம்படித்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி இக் குரலைக் கேட்டதும் அலறி



எழுந்து வீதிப்பக்கம் நோக்கி அப்படியே திடுக்கிட்டாள். தன்னை யறியாமலேயே அவள் வாயிலிருந்து "ஹா....மாமாவா!... மாமா!"...என்ற வார்த்தைகள் வந்துவிட்டன.




அந்தகனின் பரிதாபமும் தாமுவின் கண்ணுருவியும் அவளால் சகிக்கவே முடியாது நெருப்பை மிதித்தவள்போல் துள்ளினுள். ஐயோ! பிச்சைஎடுக்கும் பரிபவத்தைக் காதால்கேட்டுத் துடித்தது

போதாமல் கண்ணால் பார்த்துக் கலங்கும் விதியும் அமைந்ததை அவளால் பொறுக்கமுடியாமல் தத்தளித்தாள்.

மற்ற பெண்கள் பேருக்கொரு வார்த்தைகள்சொல்லி பிச்சைக் காரனைப் பரிகஸிப்பது இவள் இதயத்தில் பின்னும் ஈட்டி குத்துவது போல் குத்தியது. "மாமா!" என்று உரக்கக் கூப்பிடலாமா என்றும் எண்ணினாள். அம்மாதிரி கூப்பிட்டால் இன்னும் பரிகாஸத்திற்கு இடமாகிவிடுமென்று தோன்றியதால் மனது தத்தளித்தவாறு சற்று நின்றாள்.

தாமோதரனோ தலை நிமிர்ந்து உயரப் பார்க்கவே இல்லை. குருடன் மட்டும் அவ்வப்போது பார்த்து பிச்சைகேட்டான். இதற்குள் மற்ற பெண்கள் உயரவிருந்து பிச்சைக்காரனைப் பார்த்து "டேய்! பிச்சைக்காரா! நீ கச்சேரிகூட செய்வாயா!" என்று கேட்டு கட கடவென்று நகைத்தார்கள்.

இந்த பரிகாஸ வார்த்தைகளைக்கேட்டு மனந்தாங்காத சுதா அவ்விடம்விட்டு தடதடவென்று கீழே வந்தாள். அன்று விடுமுறை நாளாகையினால் தலைவி எங்கேயோ வெளியே போயிருந்தாள். ஆகை யால் சுதா தைரியமாக வீதிப்பக்கம் வந்து ஒரு மரத்தடியில் நின்ற படியே "மாமா! மாமா!...இப்படி வாருங்கள்" என்று மெல்லக் கூப்பிட்டாள்.

இவள் நின்ற இடத்தை மெத்தை மேலிருந்தவர்கள் பார்க்கமுடியாது. அம்மாதிரி மறைவான இடத்தில் நின்று கூப்பிட் டதைக் கேட்ட தாமோதரன் சுற்று முற்றும் பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. கண்ணீர்வழிய நிற்கும் சுதா மறுபடியும் கையைத் தட்டி "மாமா!....இதோ இருக்கிறேன்...சுதா கூப்பிடுகிறேன். வாருங்கள்" என்று கூப்பிட்டாள்.

பிறகே தாமோதரன் சப்தம் வந்த திக்கில் பார்த்தான். அவனை அப்படியே ஒரு கலக்குகலக்கி தூக்கிவாரிப்போட்டது. "சுதாவா!... சுதா!"...என்று வாய்க்குள் கூறி குமுறினான். சுதாவின் உருக்குலைந் திருக்கும் காட்சி அவன் இதயத்தைச் சிதறவடித்தது. பழயகாலத்து நினைவுகள் கடைசி நாள் சந்தித்துப் பிரிந்தது முதல் காட்சிகள் ஒரு செக்கிண்டு மனக் கண்முன்பு படம்போல் சுழன்றன.

அடுத்த வினாடியே "இவளிடம் கொண்ட ப்ரேமையல்லவா நம்மை இக்கதிக்கு ஆளாக்கியது. என் சகோதரியின் கையைப் போக்கியது. என் தாயின் உயிரைப் பலிகொண்டது?" என்று ஒன் றன்மீதுஒன்றாக மூர்க்கத்தனத்திலேயே தோன்றியதால் சுதாவிடம் போக மனம் கூசியது. அடுத்த நிமிடமே பாசிபோல் அன்பு படர்ந் தது: மறுபடியும் த்வேஷம் தலைதூக்கியது. "அவளிடம் பேசுவதால் அவளுக்கும் ஆபத்து; நமக்கும் விமோசனமே இல்லை. தற்சமயம் அவள் தகப்பனிருக்கும் நிலைமையில் இருவரையும் சேர்த்தே பலி

போட்டுவிடுவான்" என்றெல்லாம் மனத்தில் எண்ணியபடியே தியங்கினன்.

தன்னிடம் பேசக்கூட அவன் ப்ரியப்படவில்லை என்பதை அவன் தியக்கத்தினலறிந்த சுதா மறுபடியும் "மாமா!...மாமா!... இதற்குள்ளாகவா என்னை மறந்துவிட்டீர்கள்?" என்று விம்முறும் குரலுடன் கேட்டாள்.

மறுபடியும் மனது குழம்பியது. அந்தகனை ஒரு பக்கம் நிற்கச் செய்துவிட்டு அவன் மரத்தடிக்கு மெல்லச் சென்றுன். அவன் இதயம் ஒரு நிலையில் நிற்காது பலவிதமும் சிதறுண்டு அலைகின்றது. வாய் திறக்காது ஊமைபோல் நின்றபடியே சுதாவைநோக்கினன்.. 'சுதா!' என்று ஒரு குரல் கூப்பிட்டான்; மேலே பேசவில்லை.

சுதா:—மாமா...மாமா...இதென்ன பரிபவம்?...

தாமோ:—ஆமாம். உங்கப்பனுக்குப் பெண்ணைக் கொடுத்ததின் பரிபவம். உன்னை நேசித்ததின் பரிபவம். எங்கள் முட்டாள்தனத் தின் பரிபவம்—என்று சுடச்சுடவே சொன்னுன்.

சுதாவுக்கு துக்கம் உச்சத்தை எட்டியது. தாமோதரனின் மனோவேகத்தின் எல்லையும் ஒருவாறு தெரிந்துவிட்டது...பேச முடியாத துக்கம் தொண்டையை அடைத்தது. மெல்ல நிதானித்துக் கொண்டு "மாமா!....நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை...மாமி சௌக்கியமா?...அக்காவைப் பார்த்தீர்களா!...சௌக்கியமாயிருக் கிருர்களா! எனக்கு ஒரு கடிதங்கூட யாருமே போடுவதில்லை. நான் செய்த பாவத்தினுல் இந்த சிறையில் தவிக்கின்றேன். அக்கா எப்படி இருக்கிருர்கள்?

தாமோ:—சுதா! எங்கம்மாள் இனி உங்கப்பாவிடம் இழிச் சொல்லோ வசைச்சொல்லோ வாங்காமல் மேலுலகம் சென்றுவிட் டாள். உங்கப்பாவின் கையைப்பிடித்த வேளை என் நித்யாவின் கை மொண்டியாகியது...உனக்கு விஷயம் தெரியாதென்பது விசித்திர மாயிருக்கிறது. பிரண்டைப் பாட்டியும் உங்கப்பனும் சர்வ சௌக் யமாயிருக்கிருர்கள்.

இந்த விஷயங்களைக் கேட்ட சுதாவால் சகிக்க முடியாது "ஐயையோ! அம்மாவின் கை மொண்டியாகிவிட்டதா! ஏன்?... என்ன விபத்து உண்டாகியது? எனக்கு ஒன்றுமே தெரியாதே மாமியும் இறந்துவிட்டார்களா!...என்னென்ன துக்ககரமான விஷயங்கள் நடந்திருக்கின்றன. மாமா!...அக்காவின் கை எப்படி மொண்டியாகியது?" என்று புலம்பிக்கொண்டே கேட்டாள்.

தாமோ:—உம். அந்த மர்மம் கடவுளுக்குத்தான் வெளிச்சம். நல்ல பிச்சுவாக்கத்தியால் இடது புறங்கையில் வேகமாயும் ஆத்திரத் துடனும் குத்தியிருக்கிறது. இம்மாதிரி கிராதக வேலை, சண்டாளக் காரியம் யார் செய்தார்கள் என்று தெரியாது. அதை அக்காவும் சொல்ல மறுக்கிருள். அது சீ பிடித்து மணிக்கட்டு வரையில்

எடுத்துவிட்டார்களாம். இதுதான் சந்தோஷச் செய்தி. என் அக்கா செய்த த்யாகத்திற்கு அவள் கண்ட பெரிய உபகாரம் இதுதான். சரி, நான் போகிறேன். வீண் வார்த்தை இங்கு எதற்கு? என்னை நீ நேசிக்காமலிருந்தால் இந்த சிறை தண்டனையை அனுபவித்திருக்க மாட்டாய். எல்லாம் விதியின் கோலம்; இன்னமும் உனக்குத் துன்பம் வேண்டாம்—என்றுகூறி இரண்டடி நகர்ந்தான்.

சுதா பெரிதாகப் புலம்பிக்கொண்டே "மாமா! ..மாமா!...இனிமேல் என்னால் தாளவே முடியாது. நான் என்ன தண்டனையை அடைந்தாலும் அடைகிறேன். என்னை இந்த இடத்திலிருந்து இப்போதே என் தாயாரிடம் கொண்டு விடுங்களேன்...உங்களுக்குப் புண்ணியம் உண்டு. இத்தனை நாட்களாக நான் படும் கஷ்டத்தைக் கூறமுடியாது. என் தாயாரின் கையா போய்விட்டது? என் அன்னையின் கையா போய்விட்டது?...என்னால் பொறுக்க முடியவில்லையே!" என்று தவித்துக் கெஞ்சினாள்.

தாமோதரனின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது...சுதா! உன்னால் நான் அடைந்த பலன் இம்மட்டும் போதாமல் இன்னும் பாக்கியிருக்கிறதென்கிறாயா! என் அக்காவுக்கு, கை போனதோடு விடாமல், தலையும் போய்விடும். போதும்; போதும் நான் உறவாடி மகிழ்ந்தது. நான் போய்விடுகிறேன். உன் தலைவி பார்த்தால் இங்கு வேறு பகுமானம் கிடைக்கும். இதோடு போதும். நான் போகிறேன். நீ தைரியமாய், சுகமாயிரு. துரதிருஷ்டம் பிடித்த என் சம்மந்தமே உனக்கு வேண்டாம்" என்றுகூறி முடிப்பதற்குமுன் தலைவியின் கார் பும்பும் என்று சப்தம் செய்துகொண்டு வந்துவிட்டது.

சுதா வேடனைக் கண்ட மான்போல் மிரண்டுபோய் உள்ளே ஓடினாள். தாமோதரனும் விதியை எண்ணியவாறு தகப்பனாருடன் மற்றொரு கேட்டின் வழியாக வெளியே வந்தான். ஏற்கெனவே கலங்கும் மனத்திற்கு சுதாவின் எதிர்பாராத சந்திப்பு பின்னும் அபாரமான கலக்கத்தையும் விசனத்தையும் உண்டாக்கின. சுதாவிடம் அவனுக்கிருந்த அன்புக்குச் சமமான ஆத்திரமும் த்வேஷமும்கூட தாண்டவமாடிக்கொண்டே இருந்தன.

உள்ளே சென்ற சுதா தன் கட்டிலில் குப்புறப்படுத்தவாறு தேம்பித்தேம்பிப் புலம்பியபடியே 'என் தாயாருக்கா கை மொண்டியாகியது? என் தாயாருக்கா...ஐயையோ! என்னவிதம் அவர்கள் தத்தளிக்கின்றார்களோ! என்ன செய்கிறார்களோ! எந்தப் பாவி இப்படிச் செய்துவிட்டானோ!' என்று எண்ணிக் கதறுகிறாள். ஆற்றுவாருமில்லை; தேற்றுவாருமில்லை. தான் கனவில்கூட நினையாத விதம் தாமோதரனைப் பார்க்க நேர்ந்த சந்தோஷங்கூட ஒரு நிமிடத்தில் மாயமாய் மறைந்துபோய் ஞானம் இறந்ததும், நித்யாவின் கைமொண்டியானதுந்தான் அவள் நெஞ்சில் பெரும்பாறைபோல் அழுத்தின. அவள் இதயம் அப்படியே வெடித்துவிடும்போலானது.

இட்டத்தட்ட இரண்டு மாதகாலத்திற்கு மேலாகியது. அது வரையில் நித்யாவுக்குச் சரியானபடி நினைவு வரவில்லையெனினும் சிறிது நேரம் வருவது, சிறிது நேரம் மயக்கமாகக் கிடப்பது; இப்படி மாறுட்டமாயிருக்கும் நிலைமையில் அவளுக்கு ஒன்றுமே தெரியாது கையில் கட்டுகிறதுமட்டுந்தான் தெரிந்தது.

அவளுக்கு இம்மாதிரி மாறுட்டமாயிருப்பதால் மூளை கலங்கி விடுமோ என்றுகூட சந்தேகம் பிறந்தது. "கை ரணம் ஆறுவதற்குக் குறைந்தது மூன்று அல்லது நான்கு மாதங்களாகும்!" என்று டாக்டர் கூறினர். அவளுக்கு மனத்தில் கவலையோ, ஏக்கமோ தோன்றுதபடி சந்தோஷத்தை அளிக்கக்கூடியவர்கள் யார் இருக்கிறுர்கள்? அவளிடம் அனுதாபமுள்ள நர்ஸ் இவளுக்குமயக்கம்தெளியும் வேளைகளில் கூடுமானவரையில் நல்ல விஷயமாகப் பேசுவது, சொல்வது,கதைகள் படித்துக்காட்டுவது முதலியனசெய்துவந்தாள்.

கோஞ்சங்கொஞ்சமாக குணமாகி நன்ருக நினைவு தெரிந்து நிலைத்திருக்கவாரம்பித்தது. தன் கையின் புண்ணு ஆறவில்லையென்பதுமட்டுந்தான் தெரியுமேயன்றி கையை எடுத்தது அவளுக்குத் தெரியாது. ஒருநாள் கையை க்ளீன் செய்து மருந்துபோட்டுக் கட்டும்போது, "டாக்டர்! நான் அந்த ரணத்தைப் பார்க்கலாமா! விரல்கள் ஒன்ருேடொன்று ஒட்டிக்கொண்டுவிட்டதா? விரல்கள் இருக்கும் வித்யாசமே தெரியாது ஒரே மொத்தையா வலிக்கிறதே. எப்படியிருக்கிறதென்று பார்க்கட்டுமா!" என்று கேட்டாள்.

டாக்டருக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவள் பார்த்தால் இன்னும் அதிர்ச்சி உண்டாகிவிடும் என்று அவருக்குத் தெரியும். ஆதலால், "அம்மா! நீங்கள் பார்த்தால் வலி அதிகமாகும். வலியின் வேகத்தில் உங்களுக்கு எல்லாம் ஒன்றுபோலத்தான் தெரியும். நன்ருக ஆறிக் கட்டை அவிழ்த்தபிறகு பார்க்கலாம்" என்று கூறி பின்புறமே வழக்கம்போல் மறைவு வைத்துக் கைக்கு மருந்து போட்டாரேயன்றி "ஐயோ பாவம்! விவரம் தெரிந்தால் என்ன துடிப்பாளோ" என்று விசனப்பட்டார்.

பின்னும் 2 நாட்கள் சென்றன. பகல் 2 மணிக்கு ஒரு நல்ல கதைப் புத்தகத்தை நர்ஸ் படிக்கையில் நிறுத்திவிட்டு, "என்னம்மா! கேட்கிறீர்களா! தூக்கம் வருகிறதா?" என்ருள்.

நித்யா:—தூக்கம் வரவில்லை. படி...படி. மேலே படி. நல்ல ஸ்வாரஸ்யமான இடத்தில் நிறுத்திவிட்டுப் பேசாதே.என்னைப்போல் துர்ப்பாக்யம் பிடித்த மனிதன் கதையில்கூட வருகிறுன்...படி.

நர்ஸ்:—சரி. கேள்.

"மனிதனின் இதயம் வெறும் உலர்ந்து வரண்ட பாலை வனமல்ல; கருணை நிறைந்த கருணலயமாகவிருக்க வேண்டும். மனிதன் மிருகம்போலிருக்கக்கூடாது. உன்

தங்கையிடத்தில் மட்டுமல்ல; உலகிலுள்ள ஈ, எறும்பு ஜீவன் முதல் எல்லோரிடத்திலும் பகை பாராட்டாதே. பக்ஷத்தை அன்பாகிய எருவிட்டு வளர்த்து, கருணை நிறைந்த இதயத்துடன் உபகாரம்செய்து நல்ல பெயரெடு. பகை எரிந்துபோம்; பக்ஷம் துளிர்த்து நிற்கும். ரமணீ! இது தான் என் கடைசி புத்திமதி."

என்று அவன் தாயார் இறக்குந்தறுவாயில் சொல்லிய வார்த்தைகளைக் கண்முன்பு தாயின் உருவமே தோன்றி மீண்டும் உரைப்பதுபோன்ற ஒரு தோற்றம் திடீரென்று உண்டாயிற்று.

"ஹா! ஈச்வரா! இந்தப் பரிதாபத்தைச் சோதனை என்பதா! தலைவிதி என்பதா! முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும் என்ற வாக்கின் உண்மை என்பதா! ஐயோ! என் விதியை நினைக்க என் இதயமே வெடித்து விடும்போலிருக்கிறதே. என் வயதில் எத்தனையோ சந்தோஷமாய் ஆனந்தவாழ்க்கை நடத்திஅகமகிழ்வதுபோக, இப்படிப்பட்ட துக்கங்களையா அனுபவிப்பது? என்ன செய்வேன்? எனக்குச்செய்துள்ள த்ரோகங்களையெல்லாம் பச்சாத்தாபத்திற்காக மறந்துவிடுகிறேன். என் தாயின் வாக்கையே என் ஜீவநாடியாகவும் துணையாகவும் நம்புகிறேன்.

தங்கையின் கதியை நினைக்கத் தேகம் பற்றியெரிவது போலிருக்கிறது. சில நிமிடங்கள் தத்தளித்தான். "சீ! யாராயிருந்தாலும் அன்பு காட்டி ஆபத்தில் உதவவேண்டியதுதான் மனித தத்துவத்தின் முதல் தருமமாகும். அவரவர் கர்மாவை அவரவர் அநுபவிக்கிறார்கள். அவரவர் கடமையை அவரவர் செய்யவேண்டும். மனிதர்களின் தன்மைக்குக் கட்டுப்பட்டா சூரியசந்திராதிகள் வருகிறார்கள்? தம் கடமை என்று உதயமாகிறது; அஸ்தமிக்கிறது. அதுபோல் நாமும் நமது கடமையைக் கைவிடக்கூடாது.

மனிதனின் இதயம் வெறும் ரத்தமாம்ஸாதிகள் நிறைந்த பையல்ல. அது உத்கிருஷ்டமான கருணாலயம். அது அப்பழுக்கற்ற பரிசுத்த தேவாலயம்; பச்சாத்தாப நிலையம். பரோபகாரக்குன்றம்."

---

மேற்கண்ட அருமையான விஷயங்களடங்கிய கருணாலயத்தைப் படித்தீர்களா? அபூர்வமான நீதிகள் நிறைந்து, பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ள 10அழகியபடங்களுடன் கூடியது. ரூ 1.

---

அதைக்கேட்டபடியே நித்யா தூங்கியதால், நர்ஸ் படிப்பதை நிறுத்தினாள். அச்சமயம் அவள் சினேகிதி அங்கு வந்து, "ஓ! இங்கு ட்யூட்டியிலிருக்கிறாயா? ஸ்பெஷல் ட்யூட்டியா!...என்ன உடம்பு?" என்று கேட்டாள்.

நர்ஸ்:—இன்று இங்கு ட்யூட்டி, இது ஒரு விசித்திரமான கேஸ்.

வந்தவள்:—விசித்திரமா!...அதென்ன! கல்யாணம் செய்யாமல் கர்ப்பவதியாகிவிட்டாளோ!...என்று கூறிப் பெரிதாக நகைத்தாள். அந்த ஓசையைக் கேட்டு நித்யா விழித்துக்கொண்டு, கண்ணைத் திறந்து பார்த்தாள்.

அவ்வமயம் அவ்விருவரும் வேறு பக்கம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். "உஸ்....உஸ்....கத்தாதே. பேஷண்டு இப்போதுதான் தூங்குகிறது. நீ சொல்வதுபோல் கல்யாணமாகாத கர்ப்பவதி இல்லை. கிழக்கட்டேலே போறவனை மணந்து வாழ்நாளைப் பாழ்நாளாக்கிய பெண்தான். இந்த கேஸின் மர்மமே ஒருவருக்கும் தெரியவில்லை. ஆண்டவனுக்குத்தான் அர்ப்பணம். கையில் பெரிய கட்டு கட்டியிருக்கிறது பாரு. கத்தியால் யாரோ குத்திவிட்டார்கள் என்று எல்லோரும் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் இந்த பெண் மட்டும் தானாக அடிபட்டதாகச் சொல்லுகிறாள்" என்று பேசுவதைக்கேட்ட நித்யா 'இது விஷயமாக என்ன பேசுகிறார்கள் பார்க்கலாம்?' என்று தோன்றியதால் தூங்குவதுபோலவே படுத்திருந்தாள்.

வந்தவள்:—கத்தி காயமா! ஐயையோ! இளமையான பெண்ணின் கையில் கத்தி காயம் எப்படி உண்டாகும்? அதை கை எப்படித் தாங்கும்? கையே போய்விடாதா!

நர்ஸ்:—உம். ஐயோ பாவம்!...உண்மை என்னவோ ஆண்டவனுக்கு வெளிச்சம். கையில் பட்ட காயம் சாமான்யமில்லை. முழங்கை வரையிலேயே எடுக்கும்படியாக ஆய்விடுமோ என்றுகூட டாக்டர்கள் சந்தேகித்தார்கள். நல்ல வேளையாக அத்தனை தூரம் போவதற்கு முன்பே மணிக்கட்டுவரையில் எடுத்தாகிவிட்டது. இன்னும் அந்த பயங்கரமான விஷயம் பேஷண்டுக்குத்தெரியாது...

என்று கூறிய வார்த்தைகள் காதில் கேட்டவுடனே நித்யா ஆனை வீறிடுவதுபோல் வீறிட்டு 'ஐயையோ!....கை போய்விட்டதா! மொண்டியா?...என் கை மொண்டியா!'....என்று பெரிதாகக் கத்தியவாறு சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, கட்டு கட்டியிருந்த கையை மற்றொரு கையால் தடதடவென்று அவிழ்த்தாள்.

இதற்குள் இதையறிந்த நர்ஸ் ஓட்டமாக ஓடி வந்து நித்யாவை இறுகப் பிடித்துக்கொண்டு "ஐயோ! இதென்ன காரியம்? இப்படியும் செய்யலாமா! பெரிய டாக்டருக்குத் தெரிந்தால் விபரீதமாகிவிடுமே!" என்று கூறினாள்.

அவள் எத்தனை இறுகப் பிடித்துக்கொண்டும், எத்தனை கூறியும் நித்யா கேளாமல் வெறிபிடித்தவள்போல் கை கட்டுகளைத் தாறுமாறாக இழுத்துத் தள்ளிவிட்டு கூ...வென்று கத்துகிறாள். "ஐயோ! கை மொண்டியா!...கை போய்விட்டதா!...நானா மொண்டி... மொண்டியாகிய பிறகுகூட உயிருடன் இருப்பார்களா! இன்னும்

என்னுயிர் போகவில்லையா! கையை வெட்டும்போதுகூட உயிர் போகவில்லையா!....ஹா!...ஹா!...அம்மா!...அம்மா! நான் என்ன செய்வேன்?" என்று கதறியவாறு தன் மொண்டிக்கையைப் பார்த்துப் பார்த்துப் புலம்பித் துடித்து கட்டுக் கடங்காது ஓடுகிறாள்.

இதைக்கண்ட நர்ஸுக்கு பயம் எடுத்துக்கொண்டது. உடனே பெரிய டாக்டருக்கு டெலிபோன் செய்து சீக்கிரம் வரும்படிக்குச் சொல்லிவிட்டு மீண்டும் இவளைப் பிடிக்க முயன்றாள்.

"சீச்சீ! தூரப்போ! என்னைத் தொடாதே! என் கையை உடைத்து என்னை மொண்டியாக்கி, என்னைப் பலர் பார்த்துச் சிரிக்கவைத்ததுமல்லாமல் பிடித்துக்கட்ட வருகிறாயா! போ! போ! தூரப்போ!" என்று கத்தினாள்.

அதே சமயம் டாக்டர் விரைக்க விரைக்க ஓடிவந்தார். நர்ஸை விழி பிதுங்க விழித்துப் பார்த்தபடியே "எப்படி நீ இத்தனை தூரம் ஆகும் வரையில் அஜாக்ரதையாய்விட்டாய்? இந்த அதிர்ச்சியில் மூளையே கலங்கினாலும், இதயமே நின்றுவிட்டாலும் யார் இதற்கு ஜவாப்தாரி? இப்படித்தான் நோயாளியைப் பார்த்துக்கொள்வதா?" என்று திட்டியபடியே "அம்மணீ! நில்லுங்கள்; நில்லுங்கள்" என்று மெல்லக் கூறியபடியே நித்யாவின் அருகில் சென்று எதிரில் மடக்கி கையைப் பிடித்துக்கொண்டார்.

நித்யாவின் துக்கம் காற்று வெள்ளம்போல் கரைபுரண்டு தடுக்கவியலாது பொங்கி வருகிற வேகத்தில் அவள் நிலை புரண்டு போய், "சீச்சீ!...தூர நில்லு. என்னை மொண்டியாக்கி வேடிக்கை பார்த்தது போதாது இன்னும் என்ன செய்ய நினைக்கிறாய்! ஹா!.... நான் மொண்டி...மொண்டி...ஐயையோ! இனி எப்படி மனிதர்களின் கண்முன்பு வருவேன்? இனி முடியாது. ஒரு க்ஷணங்கூட முடியாது. தற்கொலை செய்துகொள்ளவேண்டியதுதான். ஏ பகவான்! இம்மட்டும் சோதனை போதும். என்னை இனி சோதிக்காதே. என்னை உன் பொன்னடியில் சேர்த்துக்கொள்ளு" என்று கதறியவாறு ஆவேசத்தின் வேகத்தினால் யானை பலங்கொண்டவள் போல் ஆஸ்பத்திரிக்குள் ஓடவாரம்பித்தாள்.

டாக்டர்பாடு நடுநடுங்கிவிட்டது. இத்தனை நாட்களாகப் படுத்துக் கிடக்கிறவளுக்கு எங்கிருந்து இத்தனை பலமும் தைரியமும் வந்தது? இந்த ஆவேசம் எந்த விபத்தில் கொண்டுவிடுமோ தெரியவில்லையே!' என்று நடுங்கியபடியே நித்யாவின் பின்னாலேயே ஓடுகிறார். நர்ஸ்கள், குட்டி டாக்டர்கள் முதலிய எல்லோரும் ஓடுகிறார்கள். எல்லோருக்கும் உள்ளூறக் குலை நடுக்கலும், பயமும் எடுத்துக் கொண்டன. எல்லோரையும்விட நர்ஸின்பாடுதான் மிகவும் திண்டாட்டமாயிற்று. அவளுக்கு உலகமே தலைகீழாய் சுற்றுகிறது போலாகிவிட்டது. கடவுள் என்ன வழி விடுவாரோ! யார் கண்டது?

## நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு

இந்த பக்கத்திலும், க்ஷேமலாபத்திலும் உள்ள விஷயங்களைக் கவனமாகப் படிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## 1941 டிசம்பர் 31௳ வரையில்தான் !

அதன்பிறகு கிடையாதென்பதை கவனிக்கவும்

| 15-வது ஆண்டிலிருந்து இதுவரை சந்தா நேயரா ? |
|---|

"வானக்குயில்" ஆரம்பம் முதல் சந்தாதாரராய்ச் சேர்ந்து, தொடர்ச்சியாக ஆதரித்து, புது வருஷ சந்தாவை

31—12—41 தேதிக்குள்

அனுப்புகிறவர்களுக்கு

### தனிப்பரிசு ரூ. 2 விலையுள்ள நாவல்

19-வது ஆண்டுச் சந்தாவை அனுப்புகையில், உங்களது சந்தாநம்பரைக் குறித்து, நமது நாவல்களில் முழு விலை ரூ. 2 (சந்தா நேயர்களுக்குக் குறைந்தவிலையல்ல.) பெறுமான நாவல் அல்லது நாவல்களின் பெயரை எழுதி இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ரூ. 2-க்கு மேற்பட்ட விலையுள்ள நாவல்கள் வேண்டுமாயின், அதிகமாகும் பணத்தை அனுப்பவேண்டும். இனம்நாவல்களின் தபாற்செலவுக்காக உள்நாட்டினர் அணு ஆறும், வெளிநாட்டினர் அணு எட்டும் சேர்த்து அனுப்பவும்.

அ ப் ப டி யா யி ன்

குறிப்பு:—15, 16, 17, 18-வதாண்டுகளில் இனம் நாவல் பெற்றவர்கள் மறுபடியும் 19-வதாண்டுக்கும் பெற முடியாதென்பதைக் கவனிக்கவும்.

## 19-வது ஆண்டுப் பரிசுகளின் விவரம்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு ரூ. 20 | புது வருஷச்சந்தாவை டிசம்பர் மாதம் 26-ந் தேதிக்குள் அனுப்பும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6பிரைஸ் சீட்டுகளை எடுத்து அவற்றிற்கு இதில் கண்ட பரிசுகள் நமது நாவல்களாகக் கொடுக்கப்படும். | 3-வது பரிசு ரூ. 10 |
| 2-வது பரிசு ரூ. 15 | | 3 பரிசுகள் ரூ. 5 விகிதம் |

### ஒரு வருஷ சஞ்சிகை இனம்

3 புது சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுக்கும் சந்தா நேயர்கட்கு, 19-வது ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

### சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனமாகக் கொடுப்பதுடன், உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு ஒரு அணு வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணு) தபாற்செலவுக்காக சேர்த்து அனுப்பவும்.

## பேபர் பஞ்சம்

இதுவரை ஒவ்வொரு ஆண்டின் முதல் இதழை நமது பழைய சந்தாநேயர்களுக்கு இனமாக அனுப்பினேம். யுத்த காரணமாக பேபர் அகப்படுவது மிகவும் கஷ்டமாகவிருப்பதால் புது வருஷ சந்தாவை முன்னதாக செலுத்தியவர்களுக்கு மாத்திரமே முதல் இதழை அனுப்ப முடியுமாதலால், டிசம்பர் 26-ந் தேதிக்குள் எல்லா நேயர்களும் சந்தாவை அனுப்பிப் பரிசுப்போட்டியிலும் கலந்துகொள்ளக் கோருகிறேம்.

குறிப்பு:—விலாசம் மாறுபவர்கள் உடனுக்குடன் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. அவர்கள் சஞ்சிகையின் விலைக்காக உள்நாடு இரண்டணு ஸ்டாம்பு வெளிநாடு ஒரு போஸ்டல் கூபன் அனுப்பவேண்டும்.

"JAGANMOHINI" Vol. XVIII No. 11 Regd. No. M. 2210.

# ஜகன்மோகினி

**19** வது ஆண்டு ஆரம்பம்—ஜனவரி 1942.

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா | உள்நாடு. | ரூ. 1/8 | வெளிநாடு: | ரூ. 2/ (3-ஷிலிங்) |
| ஜீவிய சந்தா | ,, | 25/- | ,, | 30/- |

ஜீவிய சந்தாநேயருக்கு அவர்கள் சேரும் தேதியிலிருந்து நமது சஞ்சிகையை அனுப்புவதுடன், இனிமேல் நமது ஆசிரியையால் எழுதப்பட்டு நம்மால் வெளியிடப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

வி. பி. கிடையாது : முன்பணமனுப்பவும்.

## ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய 56 நாவல்கள்.

**ரூ. 2-8**
வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1-12**
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

**ரூ. 1-8**
சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

**ரூ. 1-4**
பரிமளகேசவன்
உத்தமசிலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை

**ரூ. 1**
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

**அணா 14**
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**
கதம்பமாலை *

**அணா 10**
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

**அணா 8**
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

**அணா 6**
பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

**அணா 4**
மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

The J.M.O Motto
USEFUL ENTERTAINMENT
SOCIAL SERVICE & REFORM

ஜகன்மோகினி
ESTD 1923
LEADING PUBLISHERS OF FAMOUS NOVELS

THE JAGANMOHINI OFFICE
JOURNALISTS, PUBLISHERS
BOOKSELLERS & PRINTERS
26. CAR STREET, TRIPLICANE, MADRAS.

JAGANMOHINI
TAMIL MONTHLY
POPULAR THE WORLD OVER WHEREVER TAMIL IS READ

'Phone: 86019.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.